KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 04 ஏப்ரல் 2025 இதழ்:- 14

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## இந்தியப் பிரதமருடன் யதார்த்தமான - நடைமுறைக்குச் சாத்தியமான அரசியல் தீர்வு பற்றித் தமிழ்த் தலைவர்கள் பேசுவார்களா?

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இரு நாள் பயணமாக, இன்று 4ஆம் திகதி இரவு 8.30 மணிக்கு இலங்கை செல்லவுள்ளார். இதன் போது தமிழ் கட்சிகளின் பிரதிநிதி களையும் சந்திக்கவுள்ளார். ஒரு காலத்தில் இந்திய எதிர்ப் பிற்கு பிரபலமான ஜே.வி.பி. ஆட்சியில் இருக்கின்ற நிலையில் இந்திய பிரதமர் (3ம் பக்கம் பார்க்க)



ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

## யாழ்ப்பாணத்திற்கு தலை குனிவு!

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், மீண்டும் சந்தி சிரிக்கும் நிலையை, உருவாக்கி யிருக்கிறது. ஏற்கெனவே, முதல்முறை நடந்த கூட்டத்தில் இடம் பெற்ற சம்பவங்கள், சமூக ஊடகங் களில் காணொளியாக வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. (19ம் பக்கம் பார்க்க)

## எம்.ஐ.17 ரக 4 ஹெலிகொப்டர்கள் பாதுகாப்பளிக்க இன்று இலங்கை செல்கிறார் இந்தியப் பிரதமர்!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி MI 17 வகை 4 ஹெலிகொப்டர்கள் பாதுகாப்பளிக்க 40 இந்திய விமானப் படை வீரர்களின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று வெள்ளிக்கிழமை மாலை இலங்கைக்கு செல்கின்றார். (28ம் பக்கம் பார்க்க)



ஈழநாடு

எதிர்பாருங்கள்! பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை விபரங்கள் உள்ளே!



## 2019ம் ஆண்டு பௌத்த மதகுருமார்கள் தையிட்டிக்கு வந்து பழைய ஆலயம் இருந்த பகுதிகளைச் சுற்றி இருந்த தமிழர் நிலங்களில் புதிய கட்டிடமொன்றைக் கட்டினர் - நயினாதீவு பௌத்த விகாராதிபதி

தமிழ் மக்கள் இங்கே தவறிழைக்கவில்லை. அவர்கள் அப்பாவிகள். அவர்கள் தங்கள் நிலங்களை மாத்திரம் கேட்கின்றனர். நான் அவர்களின் பக்கம் என்கின்றார் நாகதீப விகாரையின் தலைமை விகாராதி பதி நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் தையிட்டி யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் போராட் டம் குறித்தே அவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார். (17ம் பக்கம் பார்க்க)

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*



PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

RE/MAX REALTRON Realty Inc. Brokerage

Home of the Top Producers

**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com



22 Years Real Estate Experience

885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated


Bus: 416-289-3333

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Warden/Finch


Scarborough $424,900

2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school

### Kennedy / Hwy 401



Scarborough $429,900

1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit

### Markham / Sheppard Ave


Scarborough $479,000

1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse

### McCowan / Ellesmere



Scarborough $599,000

2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC

### Mccowan & Hwy 401



Scarborough $549,900

2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views

### Kennedy / 401


Scarborough $538,000

2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining

### Simcoe St / 401



Oshawa $575,900

3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft

### Grandview Dr. / Bloor



Oshawa $649,800

2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated

### 9TH LINE / HIGHWAY 7



Markham $1,100,000

4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse

### Dixie/ Glenanna



Pickering $799,000

3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities

### Audley Rd & Rossland Rd E


Ajax $799,000

3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse

### Markham & Ellesmere


Scarborough $1,050,000

3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance

### Morningside/Mcnicol



Scarborough $1,099,900

3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout

### 401/Morningside



Scarborough $1,249,000

4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407

### 10th Line/ Hoover Park Dr


Stouffville $1,499,999

4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed

### 9th Line/Hoover Park


Stouffville $999,000

4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# இந்தியப் பிரதமருடன் யதார்த்தமான - நடைமுறைக்குச் சாத்தியமான அரசியல் தீர்வு பற்றித் தமிழ்த் தலைவர்கள் பேசுவார்களா?



இந்திய பிரதமர் நரேந்திர மோடி இரு நாள் பயணமாக, இன்று 4ஆம் திகதி இரவு 8.30 மணிக்கு இலங்கை செல்லவுள்ளார். இதன்போது தமிழ் கட்சிகளின் பிரதிநிதி களையும் சந்திக்கவுள்ளார். ஒரு காலத்தில் இந்திய எதிர்ப்பிற்கு பிரபலமான ஜே.வி.பி. ஆட்சியில் இருக்கின்ற நிலையில், இந்திய பிரதமர் ஒருவர் இலங்கை வருவ தானது, ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

இந்தப் பின்புலத்தில், தேசிய இனப்பிரச்னை தொடர்பில் மோடி என்ன கூறுவார் என்பது அனைவருமே எதிர்பார்க் கும் ஒரு விடயமாகும் — அவர் எதனையும் கூறாமலும் செல்லலாம் அல்லது வழமை போல் இந்தியாவின் நிலைப் பாடான அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் குறிப்பிடலாம். ஆனால் அநுரகுமார திஸ நாயக்கவின் புதுடில்லி விஜயத்தின் போது அவர் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் எதனையும் குறிப் பிட்டிருக்கவில்லை அதற்கு மாறாக, அரசியலமைப்பை அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியி ருந்தார்.

அதன் மூலம் மறைமுகமாக மாகாண சபை முறை மையை இயங்கு நிலையில் வைத்துக் கொள்ள வேண்டி யதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். இந்த நிலை யில் அவரைச் சந்திக்கும் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் மாகாண சபை முறைமையின் அவசியத்தையும். தேர்தல் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்த வேண்டிய கடப்பாடுடையவர்கள். மாறாக சமஷ்டி பற்றிப் பேசினால் அதனை தவறென்று மோடி கூறப் போவ தில்லை ஆனால், தமிழ் கட்சிகளின் கருத்துக்களை செவி மடுத்து விட்டு சாதாணரமாக சென்று விடுவார்.

ஆனால் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தாது விட்டால், 13ஆவது திருத்தச்சட்டத்தை தட்டிக் கழிக்க வேண்டும் என்று நினைக்கும் ராஜபக்ஷக் களும் அவர்களது ஆதரவு சக்திகளுமே நன்மையடை வர். மோடியின் இலங்கை விஜயம் இடம்பெறவுள்ள நிலையில் அரசாங்கம் 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசக் கூடாது என்று ராஜபக்சவின் பொதுஜன பெரமுன வின் செயலாளர் காரியவசம் தெரிவித்திருக்கின்றார்.

இது தான் அரசாங்கத்திற்கும் தேவையானது. ஏனெனில் தென்னிலங்கையில் தேவையற்ற சங்கடங்கள் ஏற்படுவ தைத் தவிர்ப்பதற்காக இப்போது இதனைப் பேசாமல் விடுவதுதான் சரியானது என்பதையே அரசாங்கமும் மறைமுகமாக சுட்டிக் காட்ட முற்படும். இந்த அடிப் படையில் தான் 13ஆவது திருத்தச்சட்டத்தை எதிர்ப்ப தாகக் கூறிக் கொள்ளும் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போர், மறைமுகமாக தென்னிலங்கையின் அடிப்படை வாத சக்திகளை பலப்படுத்தி வருகின்றனர் என்பதே உண்மை.

கடந்த பதினைந்து வருடங்களில் தமிழ் கட்சிகள் அரசியல் தீர்வு விடயத்தில் ஒரு சிறிய முன்னேற்றத்தைக் கூட காண்பிக்கவில்லை இனியும் அவர்களால் காண்பிக்க முடியாது. ஏனெனில், அதற்கான வெளியக ஆதரவு இல்லை. இந்த நிலையில் பிரதமர் மோடி அரசியலமை ப்பை அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலி யுறுத்தியிருக்கும் நிலையில், மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டியதன் அவசியத்தையும், மாகாண சபை கள் முழுமையான அதிகாரத்துடன் இயங்க வேண்டிய தன் அவசியத்தையுமே, தமிழ் கட்சிகள் முன்னிலைப் படுத்த வேண்டும்.

# அமெரிக்காவுக்கு எதிராக அதிரடி அறிவிப்பு வெளியிட்ட கனடா



அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகன உதிரி பாகங்களுக்கு 25 சதவிகிதம் வரி விதிக்கப்படும் என கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார். பல்வேறு நாடுகளில் பொருள்களுக்கு பரஸ்பர வரி விதிப்பை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 03 ஏப்ரல் 2025 வியாழக்கிழமை அமுலுக்குக் கொண்டு வந்தார்.

கனடா மற்றும் மெக்சிகோ நாடுகளுக்கு புதிய வர்த்தக வரியை அமெரிக்கா விதிக்கவில்லை என்றாலும் கனடா விலிருந்து இறக்குமதி செய்யப்படும் எக்கு, அலுமினியம் மற்றும் வாகனங்களுக்கு 25 சதவிகிதம் வரி விதிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப் படும் அனைத்து வாகன உதிரி பாகங்களுக்கு 25 சத விகிதம் வரி விதிக்கப்படும் என்று கனடா பிரதமர் மார்க் கார்னி அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருப்ப தாவது 'எமது வாகனங்களுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் விதித்துள்ள வரிகளுக்கு பதிலளிக்கும் விதமாக, எமது வர்த்தக ஒப்பந்தத்துக்கு இணங்காத அனைத்து அமெ ரிக்க வாகன உதிரி பாகங்களுக்கும் 25 சதவிகிதம் வரி விதிக்கப்படும். அதன் மூலம் கிடைக்கும் அனைத்து வருமானங்களும் கனடா வாகன உற்பத்தி தொழிலாளர்கள் மற்றும் தொழில்துறைக்காக பயன்படுத்தப்படும்.

ட்ரம்ப் விதித்த வரியைப் போன்று எங்களின் வரி வாகன உதிரி பாகங்களை பாதிக்காது. எங்களின் விநியோகச் சங்கிலியின் நன்மைகள் எங்களுக்குத் தெரியும். கனடாவில் உற்பத்தி மற்றும் முதலீட்டை ஊக்குவிக்கும் உதிரி பாக உற்பத்தியாளர்களுக்கு ஆதரவான கட்டமைப்பை கனடா உருவாக்கும்' இவ்வாறு மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க கனடா அமெரிக்க எல்லைப் பகுதி யின் ஊடாக கனடாவிற்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசித்த கியூபா பிரஜை ஒருவரை கனடிய அதிகாரிகள் கைது செய்துள்ளனர். ஒரு கியூபா நாட்டவர், ஃபோர்ட் எரி இன்டர்நேஷனல் ரெயில்வே பாலத்தை கடந்து ஓடிக் கொண்டு கனடாவில் நுழைய முயன்றார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஓடிக்கொண்டே நாட்டின் எல்லைக் குள் பிரவேசிக்க முயற்சித்த நபரை அதிகாரிகள் இணை ந்து கைது செய்துள்ளனர். கனடாவின் பீஸ் பிரிட்ஜ் எல்லைப் பகுதியில் CBSA (Canada Border Services Agency) அதிகாரிகள் விசாரணை நடத்தியதுடன், இந்த நபர் கனடாவில் நுழைய தகுதி பெறவில்லை என்பதால், அவரை அமெரிக்காவுக்குத் திருப்பி அனுப்பியுள்ளனர்.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**



குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# யுத்தத்தின் போது பலர் கொல்லப்பட்டுள்ளனர்!

## உள்ளக பொறிமுறை மூலம் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்!

## புலம்பெயர் புலி ஆதரவாளர்களால் நாட்டுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படுமாம்

யுத்தத்தின் போது பலர் கொல்லப் பட்டுள்ளனர் என்பது ஏற்றுக் கொள் ளக் கூடிய விடயமாகும். ஆனால் அது குறித்த விசாரணைகள் உள்ளக பொறிமுறையின் கீழ் முன்னெடுக் கப்பட வேண்டும். தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்களான புலம்பெயர் தமிழர்களின் அழுத்தங்களால் நாட்டு க்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள தாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.



இதற்கு முன்னர் 58 பேருக்கு எதிராக இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் கவலைக்குரிய விடய மாகும். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இதனை வழக்கமாகக் கொண்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் பிரித்தானியா தடை விதிப்பது இதுவே முதன்முறை யாகும். எவரேனும் ஒருவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப் பட்டால் அவை நிரூபிக்கப்பட்டால் அன்றி குற்றச்சாட்டுக்கள் முன் வைக் கப்பட்டமைக்காக மாத்திரம் தடை விதிப்பது பொறுத்தமற்றது.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து 16 ஆண்டுகளின் பின்னர் இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. பட்டலந்த ஆணைக்குழுவில் ஆரம் பித்தது இன்று இந்த நிலைமையில் வந்து நிற்கின்றது. பட்டலந்த வதை முகாம் தொடர்பில் ஆணைக்குழு அமைத்து விசாரணைகளை முன்னெ டுப்பதாயின் உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புலம் பெயர் தமிழர்கள் உள்ளிட்ட தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

எனவே வெளிநாடுகளின் இவ்வாறு செயற்பாடுகள் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியவையாகும். ஆனால் வெளி விவகார அமைச்சு இந்த விவகாரத்தில் அமைதியாகவுள்ளது. இதே நிலைமை தொடர்ந்தால் இது நாட்டுக்கே அச்சு றுத்தலாக அமையும். எனவே இவ் வாறான விடயங்களில் நேர்மையாகவும் வெளிப்படை தன்மையுடனும் தீர்மான ங்களை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

கடந்த ஆண்டு உண்மை களைக் கண்டறியும் ஆணைக்குழு நியமிக்கப் பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் அந்த செயற்பாடுகளை இடைநிறுத்தி யுள்ளது. இது தொடர்பில் நான் பாராளுமன்றத்திலும் கேள்வியெழுப்பி யிருக்கின்றேன்.

இங்கு உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழுவை மூடி விட்டு, ஜெனீவாவுக்கு சென்று அமைச்சர் விஜித ஹேரத் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாகக் குறிப்பிடுகின்றார். தடை விதிக்கப்பட்டுள்ளவர்கள் மீது ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் காணப் பட்டால் பிரித்தானியா அவற்றை இலங்கைக்கு அறிவிக்கலாம். அதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கை விசாரணைகளை முன்னெடுக்கப்படும்.

பட்டலந்த மாத்திரமின்றி நாட்டில் 46 வதை முகாம்கள் காணப்பட்டன. எனவே இவற்றை தவிர்த்து பட்டலந்த குறித்து மாத்திரம் பேச முடியாது. என்றார்.

# முஸ்லிம் இளைஞனின் கைது:- அநுர அரசும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்காது என்பது தெளிவாகிறது - சட்டத்தரணி சுவஸ்திகா தெரிவிப்பு!



முஸ்லீம் இளைஞனின் கைது தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பயங்கர வாததடைச் சட்டத்தை துஸ்பிரயோ கம் செய்கின்றது என்பதை வெளிப் படுத்தியுள்ளது என சட்டத்தரணியும் சமூக செயற்பாட்டாளருமான சுவஸ் திகா அருளிங்கம் தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இந்த இளைஞனின் கைதுக்கான பல காரணங்களை தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள இளைஞன் இஸ்ரேலியர்களிற்கு எதிரான வெறுப்பு பேச்சுக்களில் கருத்து வெளிப்பாட்டில் ஈடுபட்டான் என தெரிவிக்கின்றனர், இஸ்ரேலியர்களிற்கு எதிரான வெறுப்பு பேச்சுக்கள் என்றால் அது யூத எதிர்ப்பு.

இந்த நாட்டில் வெறுப்பு பேச்சுக்கு எதிராக சட்டங்கள் உள்ளன, அந்த இளைஞன் அவ்வாறான நடவடிக்கை யில் ஈடுபட்டிருந்தால் அந்த சட்டத் தின் கீழ் கைது செய்திருக்க வேண் டும்.

நான் இவர்கள் முன் வைத்த குற்றச் சாட்டுகளை நம்புகின்றேன் என தெரி விக்கவில்லை ஆனால் அந்த இளைஞர் அவ்வாறு செயற்பட்டிருந் தால் குறிப்பிட்ட சட்டங்களின் கீழ் இந்த விவகாரத்தை கையாண்டிருக்க வேண்டும்.

வெறுப்பு பேச்சுக்காக மக்களை பயங் கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்கின்றீர்கள் என்றால் நாட்டில் அதிகளவான மக்களையும், நாடாளு மன்றத்தின் பல உறுப்பினர்களையும் இதற்காக கைது செய்ய வேண்டும்.

வெறுப்பு பேச்சு என்பது தமிழர்கள் முஸ்லீம்களிற்கு எதிராக நாங்கள் கேள்விப்படாத விடயம் இல்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லீம்கள் எவ்வளவு குரோத பேச்சுக்களை எதிர்கொள்ள வேண்டியி ருந்தது என்பது எங்கள் அனைவரு க்கும் நன்கு தெரியும்.

அவ்வாறான வெறுப்பு பேச்சுக்களில் ஈடுபட்ட எத்தனை பேர் கைது செய்ய ப்பட்டனர் என்பது கேள்விக்குரிய விடயம்.

ஆகவே நாங்கள் மீண்டும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஆபத்தினை பார்க் கின்றோம், அது எவ்வாறு பயன்படு த்தப்பட்டுள்ளது, அது எவ்வளவு தூரம் இந்த அரசாங்கத்தினாலும் துஸ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்பதை காண்கின்றோம்.

# உள்நாட்டில் இடம்பெற்ற போர் குறித்து உள்நாட்டிலேயே விசாரணைகள் என்கிறார் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா!

உள்நாட்டில் போர் நடந்தபோது, படைத் தரப்பாலும், விடுதலை புலிகளாலும், புலிகளுக்கு எதிராக வடக்கை மையப்படுத்தி செயல்பட்ட அமைப்புகளாலும் பல்வேறு முரணான செயல்பாடுகள் இடம் பெற்றன. இவை பொய் யல்ல. போர் ஒன்றின் போது அவ்வாறு (மனித உரிமை கள், விதிகள் மீறல்) இடம் பெறும். இது குறித்து உள் நாட்டில் உள்நாட்டு மக்களின் பங்களிப்புடன் விசார ணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலை ப்பாடாகும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறியுள் ளார்

மாகாண சபை முறைமை குறித்து இந்தியா எமக்குக் கூற வேண்டிய அவசியம் கிடையாது. எனினும், நாம் உறுதியளித்தபடி மாகாண சபை தேர்தலை நடத்து வோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை 30 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை தனியார் விடுதி ஒன்றில் சந்தித்த வேளை ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டில் போர் நடந்த போது படைத் தரப்பாலும் விடுதலை புலிகளாலும் புலிகளுக்கு எதிராக வடக்கை மையப்படுத்தி செயல்பட்ட பல அமைப்புகளாலும் பல் வேறு முரணான செயல்பாடுகள் இடம்பெற்றன. இவை பொய்யல்ல. போர் ஒன்றின் போது அவ்வாறு ( மனித உரிமைகள், விதிகள் மீறல்) இடம்பெறும். இது தொடர் பில் உள்நாட்டில் உள்நாட்டு மக்களின் பங்களிப்புடன் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

சில நாடுகளால் விதிக்கப்படும் தடைகளால் இந்தப் பிரச்ச னையை தீர்க்க முடியும் என நான் நினைக்கவில்லை. இதனால் நாட்டில் உள்ள இனவாதிகளுக்கே சாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தருவது நல்ல விடயமாகும். அவர் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

திருகோணமலையில் சூரிய மின் திட்டம், வடக்கு ரயில் பாதைக்குரிய சமிக்ஞைகள் பொருத்தப்படுதல் ஆகிய வற்றை ஆரம்பிப்பதற்காகவே அவர் வருகை தரவுள் ளார்.



மாகாண சபை முறைமை என்பது உள்நாட்டுப் பிரச்சனையாகும். அதனை இந்தியா எமக்குக் கூற வேண்டிய அவசியம் கிடையாது. மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்துவோம் என நாம் எமது கொள்கை பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்தவுடன் பெரும்பாலும் இந்த வருடத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்த எதிர்பார்க்கிறோம். நாம் ஏற்கனவே மக்களுக்கு உறுதியளித்துள்ளோம்.

ஆகையால் அதனை இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டிய தேவை கிடையாது. நான் அறிந்த வரையில் 13ஆவது திருத்தம் தொடர்பில் எமது ஜனாதிபதிக்கும் இந்திய பிரதமருக்கும் இடையே நடைபெறும் கலந்துரையாடல் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட வில்லை என்றும் கூறினார்.

# கனடா வாழ் கருணையாளர்களே!





என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந்தைகளின் அன்பு நிறைந்த இடமாக அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இலங்கங்கள் திகழ்கின்றன.

மூன்று வேளை உணவு, உடை, உறையுள் மட்டுமன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு, பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள்.

அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் போல் பலர் இன்றும் ஆலய வீதிகளிலும் கடையோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப்பேற்க முன் வருமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விட்டப்பட்டு வருகின்றன. ஆனால் எம்மால் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெருக்கடியே பிரதான காரணமாகும்.

உறவுகளே! உங்கள் கருணையினை இவர்கள் பக்கமும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப்பாற்றுவோம்! ஒரு இல்லத்துக் குழந்தைகளுக்கு உணவளிக்க ஒரு நாளுக்கு 200.00 டொலர்கள் மட்டுமே. ஒரு நாள் உணவளிக்க முடியாதோர் ஒரு வேளை உணவுக்கு 100.00 டொலர்கள் தாருங்கள். மேலதிக விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் பார்க்கலாம். ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி 14 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. தொடர்புகளுக்கு பரமேஸ் 416 841 9600

எமது வாழ்நாளில் ஒரு மலையைப் புரட்ட முடியவில்லையே என்ற கவலையை விடுவோம்! ஒரு குழந்தைகளுக்கு உணவளித்தோம் என்று மகிழ்வோடு வாழ்வோம். வாருங்கள்! இணையுங்கள்!

# சொந்தமில்லாத வீட்டிற்கு இழப்பீடு பெற்ற ராஜபக்ஷா

அரகலயவின் போது செவனகலவில் மற்றொரு நபரின் வீடு எரிக்கப்பட்டதற்காக இழப்பீடு பெற்ற ராஜபக்ச உறுப்பினர்களின் பட்டியல் மிக விரைவில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க புத்தளவில் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் புத்தள கண்காட்சி மைதானத்தில் நடைபெற்ற மக்கள் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

இழப்பீடு பெற்ற ராஜபக்ஷ, எரிந்த வீட்டின் உரிமையாளர் அல்ல என்று கூறிய ஜனாதிபதி அனுர திசாநாயக்க, நிலப் பத்திரம் வேறு பெயரில் இருப்பதாகவும், வீட்டுப் பத்திரம் வேறு பெயரில் இருப்பதாகவும் கூறினார். இருப்பினும், இழப்பீட்டைப் பெற்றவர் ஒரு ராஜபக்ஷ என்று



ஜனாதிபதி வெளிப்படுத்தினார். தொடர்புடைய அறிக்கை சமீபத்தில் தனக்குக் கிடைத்ததாகவும், ஆனால் அது இன்னும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி கூறினார்.

# கச்சதீவை மீட்கக் கோரி தமிழக சட்டசபையில் தனித் தீர்மானத்தை சமர்ப்பித்தார் முதல்வர்



கச்சத்தீவை மீண்டும் திரும்ப பெறுவதற்கான அரசின் தனித் தீர்மானத்தை 02 ஏப்ரல் 2025 தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழக சட்டசபையில் சமர்ப்பித்துள்ளார்.

தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டிடவும், இலங்கை கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஏற்படும் அனைத்து இன்னல்களை போக்கிடவும் கச்சத் தீவை மீண்டும் பெறுவதே நிரந்தர தீர்வாக அமையும் என அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு, இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து, கச்சத்தீவைத் திரும்பப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்திய மத்திய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

உத்தியோகபூரவ் விஜயம் மேற் கொண்டு இலங்கை செல்லும் பிரதமர் மோடி, இலங்கை அரசுடன் பேசி, அந்நாட்டு சிறையில் வாடும் நமது மீனவர்களையும், அவர்களது படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்து மீட்டு கொண்டுவர வேண்டுமென்றும் இந்த பேரவை ஒருமனதாக வலியுறுத்துவதாக அந்த தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அநுர அரசை தீர்மானிப்பவர்கள் யார்?

தேசிய மக்கள் சக்தியின் கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரர், தமிழ் மக்களின் தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார். சந்திரசேகர் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டு நீண்ட காலமாக மக்கள் மத்தியில் தொடர்புகளை பேணி வருகிறார்.

தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்குத் தெரிவான அவரை அவரின் அயராத அர்ப்பணிப்புமிக்க உழைப்புக்காகவே ஜே.வி.பியை தீர்மானிப்பவர்கள் கடற்றொழில் அமைச்சாராக நியமித்திருந்தனர். இதற்கு முன்னரும் அவர் தேசியப் பட்டியல் மூலம் தான் பாராளுமன்றம் சென்றிருந்தார். ஜே. வி. பியின் நீண்டகால உறுப்பினர்களாக தமிழர்கள் எவரும் இல்லாத காரணத்தால் குறிப்பாக, வடக்கு கிழக்கை சேர்ந்த எவருமே ஜே.வி.பியில் நீண்ட காலமாக இல்லாமையால் தான் சந்திரசேகர் வடக்குக்கு வரவேண்டி வந்தது.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும் தமிழ் கட்சிகளின் உள்சண்டைகளும் சந்தித்தபோது சந்திரசேகர் எதிர்பாராத விதமாக முக்கிய அரசியல் புள்ளியானார். அநுர அலை ஏற்படுத்திய கவர்ச்சியின் காரணமாகவே பலரும் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டிருந்தனர்.

இப்போது, உள்ளூராட்சி தேர்தலிலும் பலர் போட்டியிடவுள்ளனர். தமிழ்த் தேசியம் பேசிய கட்சிகள் மீது மக்கள் கொண்டிருந்த வெறுப்புணர்வு அநுர அலையின் மீதான கவர்ச்சியாக மாறியதால் அரசியலில் முகவரியில்லாத பலர் ஜே.வி.பியின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களாகி விட்டனர். ஆனால், அவ்வாறானவர்களுக்கு எவ்வாறான அதிகாரம் இருக்கிறது என்பதை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதில்லை.

நீண்ட காலமாக ஜே. வி.பியின் உறுப்பினராக இருக்கின்ற சந்திரசேகர் கூட ஜே.வி.பியின் கொள்கை நிலைப்பாடுகளை தீர்மானிக்கும் வல்லமையுள்ளவர் அல்லர். சந்திரசேகர் எதனையும் பேசலாம். ஆனால், ஜே.வி.பியின் தீர்மானங்களை எடுக்கும் வல்லமையுள்ளவர்கள் என்ன நினைக்கின்றனர் எதனை செய்ய விரும்புகின்றனர் என்பதில் தான் அனைத்துமே தங்கியிருக்கிறது. பொதுஜன பெரமுன அரசாங்கம் ஆட்சியில் இருந்த காலத்திலும் பல அமைச்சர்கள் பல்வேறு விடயங்களை பேசுவதுண்டு. மேலோட்டமாக நோக்கினால் அவர்கள் அதிகாரமுள்ளவர்கள் போன்று தான் தெரியும்.

ஆனால் உண்மையான அதிகாரமுள்ளவர்கள் அனைவருமே ராஜபக்ஷ குடும்பத்துக்குள் மட்டும் தான் இருந்தனர். இதே போன்று தேசிய மக்கள் சக்தியில் 159 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கலாம். ஆனால், தீர்மானம்மிக்க முடிவுகளை எடுப்பவர்களோ விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் தான். வெளிவிவகார பிரதி அமைச்சராக ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆனால், இன்றுவரையில் அவர் என்ன செய்கிறார் என்றுகூட யாருக்கும் தெரியாதளவுக்கே அவர் இருக்கிறார்.

தமிழ் மக்களின் தனித்துவத்தை பாதுகாப்பது முக்கியம் என்று சந்திரசேகர் பேசலாம். ஆனால், எப்படி பாதுகாப்பது? அதற்காக தனது கட்சிக்குள் சந்திரசேகர் எவ்வாறான அழுத்தங்களை கொடுத் திருக்கிறார்? தமிழ் மக்களின் தனித்துவத்தை நிலை நாட்டக்கூடியவாறான அரசியல் ஏற்பாடுகளை உறுதிப்படுத்தினால்தானே அவர்கள் தனித்துவத்துடன் வாழலாம். முதலில் வடக்கு கிழக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்தி மாகாண சபைகள் சுதந்திரமாக இயங்கக்கூடிய சூழலை ஏற்படுத்துங்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

எதிர்பாருங்கள்! ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா 01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை
விபரங்கள் உள்ளே! தொடர்புகளுக்கு 416 841 9600

# 3வது தடவை அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகிப்பதற்கான விருப்பத்தை வெளிப்படுத்திய டிரம்ப்! போட்டிக்கு ஒபாமாவை சீண்டுகிறார்



அமெரிக்க ஜனாதிபதியாக மூன்றாவது முறை தெரிவு செய்யப்படுவதற்காக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட விரும்புவதாக தெரிவித்துள்ள டொனால்ட் டிரம்ப் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா மூன்றாவது தடவை போட்டியிட்டால் அவருக்கு எதிராக போட்டியிட விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கு எதிராக போட்டியிடுவது சிறப்பான விடயமாகயிருக்கும் என டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசமைப்பு ஒருவர் இரண்டு தடவைகளிற்கு மேல் ஜனாதிபதியாக போட்டியிடுவதை அனுமதிக்காத போதிலும் டிரம்ப் மூன்றாவது தடவை ஜனாதிபதியாக பதவி வகிப்பதற்கான தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

நான் மூன்றாவது தடவை ஜனாதிபதியாவதற்கான சில வழிமுறைகள் உள்ளன என என்பிசியின் பேட்டியில் டிரம்ப் தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவும் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியுமா உங்களிற்கு எதிராக அவர் போட்டியிட்டால் எப்படி இருக்கும் என்ற செய்தியாளரின் கேள்விக்கு நான் அதனை விரும்புகின்றேன் அது சிறந்த விடயமாகயிருக்கும் என டிரம்ப் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது தடவை அமெரிக்க ஜனாதிபதயாக பதவி வகிப்பதற்கான வழிமுறைகள் உள்ளதா என்பது குறித்து நான் இன்னமும் ஆராயவில்லை என தெரிவித்துள்ள டிரம்ப் ஒரு வழியுள்ளது என சொல்கின்றார்கள் அது என்னவென்று எனக்கு தெரியாது என குறிப்பிட்டுள்ளார்.

1951 இல் பிராங்கிளின் ரூஸ்வெல்ட் தொடர்ச்சியாக நான்கு தடவைகள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் 22 திருத்தம் நடைமுறைக்கு வந்தது குறிப்பிடத்தக்கது. இது எவரும் இரண்டு தடவைகளிற்கு மேல் ஜனாதிபதியாக தெரிவாக முடியாது என குறிப்பிடுகின்றது.

இதேவேளை தனது முன்னாள் மருமகள் வனேசா டிரம்புடன் தான் உறவில் உள்ளதாக டைகர்வுட்ஸ் தனிப்பட்ட முறையில் தனக்கு தெரிவித்தார் என குறிப்பிட்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி

கடந்த மாதம் நான் அவருடன் சில தடவைகள் கோல்வ் விளையாடினேன். அவர் மிகச்சிறந்த நபர் மிகச்சிறந்த விளையாட்டு வீரர். அவர் இது பற்றி எனக்கு தெரிவித்தார் என குறிப்பிட்டுள்ளார்.


இருவர் குறித்தும் எனக்கு மகிழ்ச்சி அவர்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என விரும்புகின்றேன்.என டிரம்ப் தெரிவித்துள்ளார்.

## இந்தியப் பிரதமரைச் சந்திக்க இருக்கும் 7 தமிழ் தலைவர்கள்

இலங்கை வரும் இந்தியப் பிரதமரை இலங்கையின் தமிழ்க் கட்சிகள் சார்பில் 7 பேர் சந்தித்து கலந்துரையாட உள்ளனர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இன்று வெள்ளிக்கிழமை 4ஆம் திகதி மாலை கொழும்புக்கு வருகை தந்து 6 ஆம் திகதி காலை இந்தியா திரும்புகின்றார். இதன் போது அவரைச் சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் கோரி பல தமிழ்த் தரப்புக்களும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தை நாடியுள்ளனர்.

இதற்கமைய தமிழர் தரப்பில் 7 பிரதிநிதிகள் நரேந்திர மோடியைச் மறுநாள் சனிக்கிழமை 5 ஆம் திகதி சந்திக்கவுள்ளனர்.



இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் 4 பேரும். அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) சார்பில் ஒருவரும். ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் இருவருமாக 7 பேர் சந்திக்கவுள்ளனர்.

இதற்கமைய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் சி.வி.கே.சிவஞானம் எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோரும். அகில இலங்கை தமிழக காங்கிரஸ் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் செல்வம் அடைக்கலநாதனுடன் பங்காளிக் கட்சித் தலைவர்களில் ஒருவருமாக 7பேரும் சந்திக்கவுள்ளனர்.

# தையிட்டி திஸ்ஸ விகாரை வளாகத்தில் புதிய நிர்மாணம் அறிக்கை தருமாறு அதிகாரிகளுக்கு புத்தசாசன அமைச்சர் பணிப்பு?

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோதா விகாரை வளாகத்தில் புதிதாக நிர்ணமாகிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் கட்டடம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை தருமாறு புத்தசாசன திணைக்கள மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுத்துள்ளதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

அத்துடன் தையிட்டி திஸ்ஸ விகாரை விடயத்தினைப் பயன்படுத்தி இனவாதத்தினை தோற்றுவிப்பதற்கு இடமளிக்கப் போவதில்லை எனவும், முழுமையான ஆய்வின் பின்னர் தனியார் காணிகள் காணி உரிமையாளர்களிடத்திலேயே மீளளிக்கும் தனது நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்றும் கூறினார்.

தையிட்டியில் திஸ்ஸ விகாரைப் பகுதியில் புதிய நிர்மாணம் திறந்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

தையிட்டியில் தனியார் காணியில் திஸ்ஸ விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை அண்மித்த பகுதிகளையும் கையகப்படுத்தப்படும் செயற்பாடுகள் தொடர்வதாகவும் அப்பகுதி மக்கள் என்னிடத்தில் முறைப்பாடு அளித்தனர். அதனையடுத்து நான் அவர்களை அழைத்து கலந்துரையாடி முழுமையான விடயங்களைப் பெற்றுக் கொண்டேன்.

அதேபோன்று திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்ட நிலமானது முறையாகப் பெறப்பட்டதாக விகாரதிபதி கூறியிருக்கின்றார். அவரிடத்திலும் அதற்கான சான்றாதார ஆவணங்களை கோரியுள்ளேன்.

எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விடய தானத்தின் பிரகாரம், விகாரை முறையாக பதிவு செய்யப்பட்டதாக உள்ளிட்ட விடயங்களை மட்டுமே கையாள முடியும். அவை அமைக்கப்படுகின்ற காணிகளில் பிரச்சினைகள் அல்லது சர்சைகள் காணப்பட்டால் அது தொடர்பில் காணி அமைச்சே நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அந்தவகையில், குறித்த தகவல்களைப் பெற்று காணி அமைச்சின் ஊடாக முழுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்விதமான நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதியில் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்திருந்தன.

அது பற்றிய காணொளிகள், புகைப்படங்களையும் நான் பார்த்தேன். அதனையடுத்து எமது அமைச்சின் செயலாளர், புத்தசாசன திணைக்கள



அதிகாரிகள் உள்ளிட்டவர்களிடத்தில் அதுபற்றி ஆராய்ந்து அறிக்கை வழங்குமாறு கோரியுள்ளேன்.

மேலும் இந்த நிர்மாணத்துடன் பாதுகாப்பு படையினருக்கும் தொடர்புகள் இருப்பதாக கூறப்பட்டுள்ளன. ஆகவே பாதுகாப்பு அமைச்சிடத்திலும் திஸ்ஸ விகாரையுடன் இணைந்து செயற்படுகின்ற படைப்பிரிவுகள் அதன் வகிபாகம் தொடர்பில் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

காணி உரிமையாளர்களைச் சந்தித்த போது நான் ஒரு விடயத்தினைக் கூறியிருந்தேன். காணியின் உரிமை பொது மக்களுக்கானது என்றால் அது அவர்களிடத்திலேயே ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது தான் எனது நிலைப்பாடாகும். அரசாங்கத்தின் நிலைப்பாடும் அது தான். அந்த வகையில் உரிய ஆய்வுகளைச் செய்து இறுதி முடிவுகளின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்படும் என்பது உறுதியான விடயமாகும்.

அதேநேரம், திஸ்ஸ விகாரை விடயத்தினை மையப்படுத்தி இனவாத, மதவாதத்தை மீண்டும் தோற்றுவிப்பதற்கு வடக்கிலும் தெற்கிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கு ஒருபோதும் நாம் இடமளிக்கப் போவதில்லை. அதில் ஜனாதிபதி அநுர குமாரவும் உறுதியாகவே இருக்கின்றார் என்றார்.

# ஜகத் ஜெயசூரியா - கரன்னாகொட எதிரான தடைகள் சரியானது போரை வழி நடத்திய இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தெரிவிப்பு!

சவேந்திர சில்வாவுக்கு எதிரான, ஐக்கிய இராச்சியத்தின் சமீபத்திய தடைகள் நியாயமற்றவை என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.



பொது நிகழ்வொன்றில் உரை யாற்றிய பொன்சேகா, உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களை மீறியதாக நிரூபிக்கப்பட்ட எவரு க்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தான் நம்புவதாகக் கூறினார்.

கடந்த காலங்களில் இராணுவ வீரர் களுக்கு எதிராக இது போன்ற நடவடிக்கைகளை நாங்கள் எடுத் துள்ளோம். சட்டங்களை மீற தங்கள் சீருடைகளின் அதிகார த்தை துஷ்பிரயோகம் செய்தவர் கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

இங்கிலாந்து விதித்த தடைகள் குறித்து கருத்து தெரிவித்த சரத் பொன்சேகா, போர் நடவடிக்கை களின் போது மனித உரிமைகள் உட்பட எந்த சட்டங்களும் மீறப் படவில்லை என்பது புரிந்து கொள்ளப்பட்டது என்றார். இலங்கை உள்நாட்டுப் போரின் முன்னணியில் சவேந்திர சில்வா இருந்தார். போரின் போது கொலைகள், மனித உரிமை மீறல்கள், தடுத்து வைக்கப்பட் டோரின் மரணங்கள் அல்லது அதிகார துஷ்பிரயோகம் எதுவும் நடக்கவில்லை என்பது அறியப் படுகிறது. எனவே சவேந்திர சில்வாவுக்கு எதிரான தடைகள் நியாயமற்றவை' என்று அவர் கூறினார்.

இருப்பினும் முன்னாள் கடற் படைத் தளபதி வசந்த கரன்னா கொட மற்றும் முன்னாள் இராணு வத் தளபதி ஜகத் ஜெயசூரிய ஆகியோருக்கு எதிரான தடைகள் நியாயமானவை என்று அவர் கூறி னார். இந்த அதிகாரிகள் போரின் முன்னணியில் இல்லை என்று கூறிய அவர், அவர்கள் தங்கள் இராணுவ அதிகாரங்களை துஷ்பிர யோகம் செய்ததற்கான முக்கிய ஆதாரங்கள் இருப்பதாகக் கூறி னார். இந்த இரண்டு முன்னாள் இரா ணுவ அதிகாரிகளைப் பற்றி நான் பாராளுமன்றத்தில் பேசியுள் ளேன். முன்னாள் இராணுவ அதி காரிசுனில் ரத்நாயக்க மீது தவறாக ஒருவரைச் சுட்டுக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேலும் ஒருவர் துப்பாக்கிச் சூட்டை நேரில் பார்த்ததால், இந்த சம்பவத்தால் ஒரு குடும்பத்தை சேர்ந்த பலரைக் கொன்றார்.

பின்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவால் போர் வீரர்களின் பாதுகாப்பின் கீழ் அவ ருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. வசந்த கரன்னாகொட பல இளை ஞர்களைக் கடத்தி, கப்பம் கோரி, திருகோணமலை முகாமில் தடு த்து வைத்ததாக குற்றம் சாட்ட ப்பட்டுள்ளது. இளைஞர்கள் தடு த்து வைக்கப்பட்டிருப்பது தங்க ளுக்குத் தெரியும் என்று முன்னாள் கடற்படைத் தளபதி ஒருவர் ஒப்புக் கொண்டுள்ளார் என்று அவர் கூறினார்.

இவை கடுமையான கொலை சம்பவங்கள் என்று சுட்டிக்காட்டிய சரத் பொன்சேகா அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக் கப்பட வேண்டும் என்றார்.

# பிரித்தானியத் தடைகள்!

இறுதிப் போரில் பங்கு பற்றிய இராணுவ மற்றும் கடற்படை தளபதிகள் உள்ளடங்கலாக தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாண தளபதியாக இருந்த விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) ஆகியோர் மீது பிரித்தானிய அரசு தடை விதித்துள்ளது. இவர்களும் இவர்களின் குடும்ப உறுப்பினர்களும் பிரித்தானியாவுக்குள் நுழைய முடியாது.

இவர்களில் ஒருவரான படைகளின் முன்னாள் பிரதானியான ஜெனரல் சவேந்திர சில்வா மீது ஏற்க னவே அமெரிக்கா தடை விதித்துள்ள நிலை யிலேயே பிரித்தானியா தற்போது தடை விதித்திருக் கிறது. இவ்வாறான தடைகளை ஐரோப்பிய ஒன்றியம் கூட எதிர் காலத்தில் மேற்கொள்ளலாம். இவ்வாறு தடை விதிக்கப்பட்ட அனைவருமே முன்னாள் ஆட்சியாளர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர்கள். இதில், குறிப்பாக இலங்கையின் இராணுவத் தளபதி யாக இருந்த சவேந்திரசில்வா, ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இருந்த காலத்திலும் பதவி யில் இருந்தவர்.

எதிர் காலத்தில் அரசியல் பிரவேசம் செய்யும் நோக் குடன் செயல்பட்டு வருபவர். அவர் எதிர்காலத்தில் ஜனாதிபதி வேட்பாளராக வந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் முதலாவது ஆட்சிக் காலத்தில் சவேந்திர சில்வா மீதான தடையை அமெரிக்க இராஜாங்கத் திணை க்களம் அறிவித்திருந்தது. ஆனால், சவேந்திர சில்வா பதவியில் இருக்கும் வரையில் அமைதி யாக இருந்து விட்டு அவர் ஓய்வு பெற்றிருக்கும் நிலையில் பிரித்தானியா தடையை அறிவித்திரு க்கிறது.

இது ஒரு வகையில் கோடம்பாக்க தமிழ் படங் களில் வரும் பொலிஸார் போன்றது. அதாவது, எல்லாம் நடந்து முடிந்த பின்னர் பொலிஸார் அவ் விடத்துக்கு வந்து விசாரிப்பார்கள். பார்ப்பதற்கு நகைச்சுவையாக இருக்கும். இவ்வாறான மேற் குலக தடைகளால் புலம்பெயர் சமூகத்தை சேர்ந்த ஒரு சிலர் மகிழ்ச்சியடையலாம். தமிழ் அரசு கட்சி யின் அரசியல்வாதிகளும் மகிழ்ச்சியை வெளிக் காட்டலாம்

அதற்குமப்பால் தங்களுடைய இராஜதந்திர நடவடி க்கைகளால் தான் இவ்வாறான தடை உத்தரவு களை மேற்குலகம் வழங்குவதாகவும் அவர்கள் பொய்யாக பிரசாரம் செய்யலாம். ஆனால், உண்மை யில் இவர்களுடைய அரசியல் நடவடிக்கைகளு க்கும் இவ்வாறான தடை உத்தரவுகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

இதிலுள்ள ஆச்சரியம் என்னவென்றால் இறுதி யுத்தத்தின் போது 58ஆவது படைப்பிரிவின் கட்டளை தளபதியாக இருந்த சவேந்திர சில்வா பின்னர் மகிந்த ராஜபக்ஷ காலத்தில் ஐக்கிய நாடு கள் சபைக்கான நிரந்தர உபவதிவிடப் பிரதிநிதி யாகவும் இருந்திருக்கிறார். அப்போதெல்லாம் இவ்வாறானவர்கள் சுதந்திரமாக செயல்படுவதற்கான செங்கம்பளத்தை விரித்து விட்டு, அவர்கள் பதவி யிலிருந்து ஓய்வு பெற்றதும் அவர்கள் மீது தடை உத்தரவுகளை பிறப்பிப்பதானது இவ்வாறானவர் கள் தென்னிலங்கையில் சிங்கள தேசியவாதிகள் மத்தியில் கதாநாயகர்களாக கொண்டாடப்படுவதற் கான சூழலையே கனியச் செய்கிறது. அதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை நிலைநாட்டு வதிலும் இவ்வாறான தடைகள் எவ்வித செல்வாக்கையும் செலுத்தவில்லை.

ஏனெனில் இது வரையில் இலங்கை மீதான இவ் வாறான அழுத்தங்களால் அரசாங்கம் கீழிறங்கி வரவில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பிரித்தானிய தீர்மானத்தை எதிர்த்திருப்பதுடன், இது ஒரு தலைப்பட்சமான முடிவு என்று தெரிவித்திருக்கிறது.

கடந்த பதினைந்து வருடங்களாக இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள் அனைத்துமே ஒரு விடயத்தில் கொள்கைரீதியான உடன்பாட்டையே கொண்டிருந்தன கொண்டிருக்கின்றன என்ப தையே தேசிய மக்கள் சக்தியின் கருத்து வெளிப் படுத்துகிறது.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ மீதும் கனடா தடை விதித்திருக்கிறது. அதனால் என்ன நடந்தது? அவர்கள் தனிப்பட்ட ரீதியில் கனடாவுக்கு செல்ல முடியாததைத் தவிர, பாதிக்க ப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வில் இவ்வாறான தடைகள் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியிரு க்கிறன?

மாறாக தென்னிலங்கையில் அவர்கள் தொடர்ந்தும் கதாநாயகர்களாகவே வலம் வந்து கொண்டிருக் கின்றனர்.

# செவ்வந்தியைத் தேடிச் சென்ற இடத்தில் போதைவஸ்துடன் சிக்கிய இராணுவ மேஜரும் கள்ளக் காதலியும்

கணேமுல்ல சஞ்சீவ கொலை யுடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தி என்ற பெண் தலை மறைவாகி அனுராதபுரம் நகரில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்கி யிருந்ததாக கிடைத்த தகவலை அடுத்து அனுராதபுரம் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவு நடத்திய தேடுதலில் அவரைப் போலவே தோற்றமளிக்கும் பெண் மற்றும் சிறிலங்கா இரா ணுவ மேஜர் என இருவர் 31 மார்ச் 2025 சுமார் 3.5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள ஐஸ், குஷ் மற்றும் கேரள கஞ்சா மற்றும் இரண்டு சொகுசு கார்களுடன் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் குரு நாகல், உடவல வீதியைச் சேர்ந்த 53 வயதுடைய முன்னாள் இரா ணுவ மேஜர் மற்றும் 33 வயது டைய பெண் ஆகியோர் ஆவர்.

அனுராதபுரம் வாலிசிங்க ஹரிச் சந்திர மாவத்தையில் உள்ள ஒரு பிரபலமான ஹோட்டலில் இஷாரா செவ்வந்தி என்ற பெண் தங்கி யிருப்பதாக புலனாய்வு அமைப்பு களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அனுராதபுரம் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரி வின் பொறுப்பதிகாரி, தலைமை ஆய்வாளர் நுவான் விக்ரமசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் குழு இந்த சோதனையை மேற்கொண் டது.

இந்த சோதனையில் உதவுவதற் காக மோப்ப நாய் பிரிவும் ஈடு படுத்தப்பட்டது. கைது செய்யப் பட்ட சந்தேக நபரும் முன்னாள் மேஜரும் சட்டவிரோத உற வைப் பேணி போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டது கண்டு பிடிக்கப்பட்டதாகவும், சந்தேகத் திற்குரிய முன்னாள் மேஜர் போதைப்பொருள் குற்றச்சாட்டில் அனுராதபுரத்தில் பலமுறை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர். சுமார் நான்கு நாட்களுக்கு முன்பு ஹோட்டலில் தங்கியிருந்த சந்தேக நபர்களான தம்பதி யினரை கைது செய்து சோதனை செய்த போது ஐஸ், குஷ் மற்றும் கேரள கஞ்சா போதைப் பொருட்களுக்கு கூடுத லாக, இரண்டு சொகுசு கார்கள், தங்க நகைகள், கைபேசிகள், பல்வேறு சாவிகள், கம்டேப் மற் றும் கம் போத்தல்கள் ஆகியவை கண்டு பிடிக்கப்பட்டதாக காவல் துறையினர் தெரிவித்தனர்.

# செயற்கை நுண்ணறிவின் பாரிய வளர்ச்சி உலகப் பெரும் பணக்காரர் பில்கேட்ஸ் எச்சரிக்கை



செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தின் (Ai) அசுர வளர்ச்சி யால் பல்வேறு துறைகளிலும் மனிதர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத சூ ழல் உருவாகக் கூடும் என உலகின் பெரும் செல்வந்தர்களில் ஒருவரான பில் கேட்ஸ் எச்சரிக்கை விடுத்துள் ளார்.

அத்துடன்.வாரம் இரு நாட்கள் மட்டுமே வேலை நாட்கள் என் கிற நடைமுறை இன்னும் பத்தா ண்டுகளில் வழக்கத்தில் இருக் கும் என்றும் அவர் தெரிவித்து ள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்ப வளர்ச்சியால் பல்வேறு துறை களிலும் மனிதர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத சூழல் உரு வாகக்கூடும். இதனாலேயே வேலை நாட்களும் குறையும். இதற்கு, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வளர்ச்சியே காரணம். பல துறைகளிலும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் கோலோச்ச தொடங்கி விட்டது.

இப்போது இணையத்தில் பிரபல மாகி வரும், 'ஜிப்லி' வகை கார்ட்டூன் சித்திர படங்களும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தின் அசுர வளர்ச்சியின் விளைவே. தொழில் நுட்பத்தை நம்பியே சுழலும் இந்த நவீன யுகத்தில்அடுத்த 10ஆண்டுகளில் வேலை வாய்ப்பு குறைந்து விடும் என்பதையே பிரதிபலி க்கிறது என தெரிவித்துள்ளார்.

# பிரிட்டன் தடைக்கு பிழை கண்டு பிடிக்க முன் நீங்கள் கூறியபடி புதிய அரசியலமைப்பு பணியை ஆரம்பியுங்கள்



பிரிட்டன் அரசாங்கம் சார்பாக பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டேவிட் லெம்மி அறிவித்த தடைகள், இலங்கையில் தேசிய நல்லிணக்க செயற்பாட்டை குழப்புகிறது என இலங்கை வெளி நாட்டமைச்சர் நண்பர் விஜித ஹேரத் கூறுகிறார். டேவிட் லெம்மி தான் இதை தம் தேர்தல் பிரசாரத்தின் போது தந்த வாக்குறுதிகளுக்கு ஏற்பவே செய்துள்ள தாகவும் கூறுகிறார்.

இந்நிலையில் நண்பர் விஜித ஹேரத் திடம் நான் கேட்க விரும்புகிறேன். உங்கள் தேர்தல் பிரசாரத்தின் போது நீங்கள் உறுதியளித்த, அரசியலமைப்பு செயற்பாடு, இன்று எங்கே? இன்று இந்நாட்டில் இனவாதம் பகிரங்கமாக பேசபடுவதில்லை. அதற்கு காரணம் ஜேவிபி அல்ல. அன்று நாட்டில் நடை பெற்ற அரகல என்ற போராட்டத்தின் போது அதற்கு முன் கோதாபய ராஜ பக்சவுக்கு வாக்களித்த பெரும்பாலான சிங்கள இளையோர், இனி இனவாதம் சரி வாராது என்று கை விட்டு விட் டார்கள். அது நல்லது.

ஆனால், அது மட்டும் நிரந்தர நல்லி ணக்கத்தை கொண்டு வராது. நிலைமை மீண்டும் மாறலாம். ஆகவே காலம் கடக்கும் முன், நீங்கள் உறுதி அளித்தபடி, நல்லாட்சியில் 2018 ஆண் டளவில் இடை நிறுத்தபட்ட புதிய அரசியலமைப்பு செயற்பாட்டை நின்ற இடத்தில் இருந்து முன்னெடுங்கள். அதை தானே நீங்கள் உங்கள் தேர்தல்



விஞ்ஞாபனத்தில், பிரசாரத்தில் சொல்லி வாக்கு வாங்கினீர்கள்? அதை செய்யா மல், இன்று நடக்காத உங்கள் தேசிய நல்லிணக்க செயற்பாட்டை, பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டேவிட் லெம்மி தடைகளை அறிவித்து குழப்புவதாக கூறுவது வேடிக்கை என தமிழ் முற் போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் மனோ எம்பி தெரிவித்ததாவது பொறுப்பு கூற வேண்டியவர்கள் சட்ட விலக்கு பெற இடம் தர மாட்டோம் என்ற தமது தேர்தல் பிரசார வாக்குறுதிக்கு அமை வாக, பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டேவிட் லெம்மி, இலங்கையின் பிரஜை கள் நால்வருக்கு எதிராக அறிவித்த தடைகள் இலங்கையின் தேசிய நல்லி ணக்க முயற்சிகளை குழப்புவதாக தனது அங்கேயும் இல்லாத, இங்கேயும் இல்லாத பதிலில் இலங்கை வெளிநாட்ட மைச்சர் நண்பர் விஜித ஹேரத் கூறு கிறார்.

அமைச்சர் அவர்களே உங்கள் தேர்தல் பிரசாரத்தின் போது நீங்கள் உறுதி யளித்த, அரசியலமைப்பு செயற்பாடு, இன்று எங்கே? அதை உங்களை அரசு காலவரையின்றி ஒத்தி வைத்து விட் டது. நல்லாட்சியில் 2018 ஆண்டளவில் இடை நிறுத்தபட்ட புதிய அரசியல மைப்பு செயற்பாட்டை, நின்ற இடத்தில் இருந்து முன்னெடுப்போம் என்பது உங்கள் தேர்தல் கால வாக்குறுதி. ஜனாதிபதி அனுரகுமார உடன், அந்த புதிய அரசியலமைப்பு வழிகாட்டல் குழு வில் நான், நண்பர்கள் ரவுப் ஹக்கீம், ரிஷாத் பதுர்தீன், சுமந்திரன் ஆகியோர் கூட்டாக செயற்பட்டோம். ஆகவே காலதாமதம் ஏற்பட முன், உடனடியாக புத்திய அரசியலமைப்பு பணியினை ஆரம்பித்து தேசிய நல்லிணக்க இலங்கை அடையுங்கள். அதுதான் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு நீங்கள் தர கூடிய சரியான பதிலாக இருக்க முடி யும்.

## பலாலி 4 மாதங்களுக்குள் சர்வதேச விமான நிலையமாக மாறும்!

பலாலி விமான நிலையத்தை நான்கு மாதங்களுக்குள் சர்வதேச விமான நிலையமாக மாற்றுவோம் என சிவில் விமான போக்குவரத்து சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித் துள்ளார்.

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலைய த்திற்கு30 மார்ச்2025 திடீர் விஜயம் மேற்கொண்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

விமான நிலையத்தை முதல் தடவை யாக பார்வையிட்ட அமைச்சர் விமான நிலையத்தின் விஸ்தரிப்புகள் தொடர்பி லும் அதன் சேவைகள் தொடர்பிலும் கேட்டறிந்தார்.

இதன் போது விமான நிலையத்தின் சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் ஹர்ச அபய விக்ரம மற்றும் ஏனைய ஊழியர்களுடன்



சேவைகள் தொடர்பில் கேட்டறிந்தார். இதன் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கிய அமைச்சர், பழைய அரசாங்கம் போல் நாம் பொய் கூற மாட்டோம் விமான நிலையத்தின் திட்டமிடல் வரைபடம் உள்ளிட்ட பல் வேறு வேலை திட்டங்கள் நிறைவடை ந்துள்ளன எனவே அதனுடைய திட்ட மிடலுக்கு ஏற்ப நான்கு மாதங்களுக்குள் விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக மாற்றியமைக்கப்படும் என தெரிவித்தார்.




# சரியான நேரத்தில் சரியான கூட்டு?

அனுரவின் அரசாங்கத்தை வலுவான முறையில் எதிர் கொள்வதற்கும், தமிழ் மக்களின் உரிமைகளை வலியுறுத்துவ தற்கும் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்று, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரக்குமார் இந்திய ஊடகவியலாளரான மீரா சிறீனிவாசனு க்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் கூறி யிருக்கிறார்.

புதிய யாப்பு ஒன்று உருவாக்கப்படு மிடத்து அந்த யாப்பை நோக்கி கட்சி களை ஒருங்கிணைக்க வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து கிடையாது. தமிழர்கள் ஒரு தரப்பாகத் திரண்டு நின்றால் தான் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதனை பலமாக வெளிப்படுத்தலாம்.

மிகக் குறிப்பாக சுமந்திரனும் அவரு டைய கூட்டாளிகளும் இணைந்து முன்பு தாங்கள் தயாரித்த எக்கிய ராஜ்ய'' என்கிற இடைக்கால வரைவை மீண்டும் மேசைக்கு எடுப்பதைத் தடுப் பது என்றால் தமிழ்த் தரப்பு ஐக்கியப் படுவது தவிர்க்க முடியாதது.

அதேசமயம் யாப்பை நோக்கி மட்டும் தமிழ்த் தரப்பு ஐக்கியப்படக் கூடாது. மாறாக தேர்தல்களை நோக்கியும் சம யோசிதமான தந்திரோபாயமான கூட்டுக் களுக்குப் போக வேண்டும். அல்லது குறைந்த பட்சம் போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கைகளுக்காவது போக வேண்டும் என்பதனை நான் தொடர்ச்சி யாகச் சுட்டிக்காட்டி வந்திருக்கிறேன்.

அதற்கு ஒரு அடிப்படைக் கோட்பாட்டு விளக்கம் உண்டு. தேர்தல் கூட்டுகள் பெரும்பாலும் தந்திரோபாயமானவை. ஆனாலும் தமிழ் மக்கள் ஒரு தரப்பாக தங்களை பலப்படுத்த வேண்டும் என்று சிந்தித்தால், தேர்தலுக்கும் அங்கே ஒரு பங்கு உண்டு. தேர்தலில் தமிழ் மக்கள் ஒரு தரப்பாகத் தோற்கும் பொழுது பின்னர் நாடாளுமன்றத்தில் இனப்பிரச் சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்த் தரப்பு பலமாக நின்று பேச முடியாது. எனவே ஒரு தரப்பாக தமிழ் மக்களைப் பலப்படுத்துவது என்று பார்த்தால் அது நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல, மாகாண சபைகள்.உள்ளூராட்சி சபைகள் என்று எல்லாத் தேர்தல் களங்களிலும் தமிழ் தரப்பை ஆகக்குறைந்த பட்சம் தந்தி ரோபாய நோக்கத்தோடாவது ஒருங்கி ணைக்க வேண்டும்.

ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தந்திரோபாய கூட்டுக்களு க்குத் தயாராக இல்லை. அவர்கள் கொள்கை வழிக் கூட்டுக்களுக்கே தயா ராக இருப்பதாகக் கூறிக்கொள்கிறார்கள். கடைசியாக இயங்கிய உள்ளூராட்சி சபைகளின் கடைசி கட்டத்தில் காரை நகரில் ஒரு பிரச்சினை வந்தது. அங்குள்ள சுயேட்சைக் குழு தமிழ்த் தேசியக் கட்சிகளோடு இணைந்து ஆட்சி அமைக்க விரும்பியது. அது தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு நான் உரையாடினேன். அவர்கள் எந்தவிதமான நிபந்தனையும் இன்றி குறிப்பிட்ட சுயேட்சைக் குழு வுக்கு ஆதரவளிக்க முன்வந்தார்கள். அதேசமயம் அந்த உரையாடலின் போது செல்வராசா கஜேந்திரன் என்னிடம் சொன்னார், அண்ண இது போன்ற விடயங்களில் நீங்கள் என்ன கேட்டாலும் நாங்கள் செய்வோம். ஆனால் ஐக்கியத்தைப் பற்றி மட்டும் கேட்டு விடாதீர்கள் என்று.

அந்தளவுக்கு அவர்களுக்கு ஐக்கியம் அலர்ஜிக்காக இருந்தது. இருக்கலாம். அரங்கில் நம்பிக் கூட்டுச் சேர முடியாத சக்திகளே அதிகமாக இருக்கலாம். ஆனால் இங்கே பிரச்சனை என்னவென் றால், ஒரு தரப்பாக தமிழ் மக்களை பலப்படுத்துவது என்று சொன்னால் அதனை தந்திரோபாயமாகத் தான் செய்யலாம். அதுவும் தேர்தல் வழியில் தந்திரங்கள் தான் அதிகம்.

நான் திரும்பத் திரும்பக் கூறும் ஓர் உதாரணம் உண்டு. சுத்தமான தங்கத்தை வைத்து ஆபரணங்களைச் செய்ய முடியாது. தங்கத்தில் நகை செய்ய வேண்டுமானால் குறிப்பிடத்தக்க அளவுக்கு செப்பைக் கலக்க வேண்டும் வேண்டும். இந்த பூமியிலே பெரும் பாலான விடயங்கள் அப்படித் தான். அதிலும் அரசியலில், குறிப்பாக தேசிய வாத அரசியலில், அது தான் நடை முறைச் சாத்தியமானது.



அரசியலில் புதுமையானது, நீதி யானது, புனிதமானது சரியானது, பிழை யானது...போன்ற அனைத்துமே சார்புக் கணியங்கள் தான். ஒப்பீட்டு முடிவுகள் தான். நடைமுறை வாழ்வில் முழுப் புனிதமானது எதுவும் இல்லை. முழுத் தூய்மையானது எதுவும் இல்லை. இரண்டாம் உலகப்போரில் ஹிட்லரை யும் முசோலினியையும் தோற்கடிப்ப தற்காக இரண்டு கொள்கை எதிரிகள் தான் கூட்டுச் சேர்ந்தார்கள். அதாவது முதலாளித்துவமும் கொம்யூனிசமும் கூட்டுச் சேர்ந்தே இரண்டாம் உலகப் போரை முடிவுக்கு கொண்டு வந்தன. கொள்கைப்படி பார்த்தால் அது ஒரு பிழையான கூட்டு. ஆனால் அது உலகப்போரை நிறுத்திய கூட்டு.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இப் பொழுது உருவாக்கியிருக்கும் கூட்டில் இருப்பவர்களில் அநேகர் முன்பு வெவ்வேறு கூட்டுக்களில் இருந்தவர்கள் வெவ்வேறு தரப்புகளோடு சேர்ந்து உழைத்தவர்கள். இறந்த காலத்தைக் கிண்டினால் யாருமே புனிதரில்லை. ஏன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யும் தான். கஜேந்திரக்குமாரின் தகப்ப னார் குமார் பொன்னம்பலம் இந்திய–இலங்கை உடன்படிக்கையின் பின்னணி யில் 1980களின் இறுதிக் கட்டத்தில் கொழும்பில் உள்ள தனது இல்லத்தின் பாதுகாப்புக்கு புளட், டெலோ ஆகிய இயக்கங்களின் ஒத்துழைப்பைப் பெற்றி ருந்தார்.

அவருடைய வீட்டுக்கு பாதுகாப்பு பணிக்காகச் சென்ற தமது அனுபவ த்தை ஏற்கனவே சிவாஜிலிங்கம் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார். புளொட் இயக்கத்தின் சிவநேசனும் அவ் வாறு கூறியுள்ளார். ஆனால் அதற்காக பின்னாளில் குமார் சிந்திய இரத்தத்தை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. அதுதான் அரசியல்.

ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி தந்திரோபாயமாகக் கூட்டுக்களை வைத்துக் கொள்வதற்குத் தயாராக இல்லை. கொள்கை வழிக் கூட்டுக்கே தங்கள் தயார் என்று திரும்பத் திரும்பக் கூறிவருகின்றது. தங்கள் கொள்கையில் வழுக்காதவர்கள் என்று கூறுவதன் மூலம் மற்றவர்களை கொள்கைகளில் வழுக்கியவர்கள் என்று முத்திரை குத்தி வந்தது. அதன் விளைவாக கடந்த 15 ஆண்டுகளாக அவர்களால் தாங்கள் முன் வைக்கும் இலட்சியத்தை நோக்கி அவர்களுடைய சொந்தக் கட்சியையும் கட்டியெழுப்ப முடியவில்லை.

தமிழ் மக்களையும் கட்டியெழுப்ப முடியவில்லை. இப்பொழுது யாப்புரு வாக்க முயற்சியில் தமிழ் மக்கள் பேரவையின் முன் மொழிவின் அடிப் படையில் ஒன்று சேர வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆனால் தமிழ் மக்கள் பேரவையை செயல்படாத நிலைக்கு தள்ளியதில் அவர்களுக்குப் பொறுப்பு இல்லையா? அவர்கள் நினைத்திருந்தால் தமிழ் மக்கள் பேரவையை அதன் அடுத்த கட்டக் கூர்ப்புக்குக் கொண்டு போய் இருந்திரு க்கலாம். பேரவை என்ற தாயின் முடிவு க்குக் காரணமாக இருந்து கொண்டு அந்தத் தாய் ஈன்ற பிள்ளையாகிய முன் மொழிவை இப்பொழுது காவுகின்றார் கள்.

அப்படித் தான் பொது வேட்பாளரின் விடயத்திலும் முன்னணி அந்த கூட்டுக் குள் இணைந்து இருந்திருந்தால் நிலைமை வேறு விதமாகப் போயிரு க்கும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நிகழ்ந்த அனர்த்தம் தவிர்க்கப்பட்டிரு க்கும். ஆனால் தொடக்கத்தில் இருந்தே பொது வேட்பாளரை முன்னணி எதிர்த் தது. மட்டுமல்ல, பொது வேட்பாளரு க்கு ஆதரவானவர்களை இந்தியாவின் ஏஜென்ட்கள், முதுகெலும்பில்லாதவர்கள் என்று கூறியது.

பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் சந்திப்புகளின் போது குடிமக்கள் சமூகத்தை சேர்ந்தவர்களை நோக்கி கஜேந்திரன் பின்வருமாறு சொன்னார் இந்த முயற்சியில் நீங்கள் வெற்றி பெற்றால் நாங்கள் இப்பொழுது வைத்தி ருக்கும் இரண்டு ஆசனங்களையும் இழந்து விடுவோம் என்று எங்களுக்குத் தெரியும். அதை நன்கு தெரிந்து கொண்டு தான் உங்களை எதிர்க்கிறோம் என்று.

ஆனால் பொது வேட்பாளருக்கு முன்னணியின் தீவிர ஆதரவாளர்கள் பலரும் வாக்களித்தார்கள். தேர்தல் முடிவுகளின் பின் பொது வேட்பாளரு க்குக் கிடைத்த வாக்குகளை கஜேந் திரக்குமார் தமிழ்த்தேசியத் தன்மை மிக்க வாக்குகள் என்று கூறினார். அதெப்படி வெளிநாட்டின் ஏஜென்ட்கள் தமிழ் தேசிய தன்மைமிக்க வாக்கு களைத் திரட்டலாம்? கெட்ட கூட்டு எப்படி நல்ல விளைவைத் தரும்?

தமிழ் மக்கள் பேரவையின் சிதைவுக்குக் காரணமாக இருந்த ஒரு தரப்பு கிட்டத் தட்ட ஐந்தாண்டுகளின் பின் அதே பேரவையின் முன் மொழிவை கையில் எடுத்திருப்பது எதைக் காட்டுகின்றது? ஐந்து ஆண்டுகளுக்கு முன் அவர்கள் எடுத்த முடிவு தீர்க்கதரிசனமற்றது என்பதைத் தானே? பொது வேட்பாள ரைத் தவறு என்று கூறி விட்டு அவர் பெற்ற வாக்குகளைத் தேசியத் தன்மை மிக்கவை என்று கூறுவது எதைக் காட்டுகின்றது? எட்டு மாதங்களுக்கு முன்பு அவர்கள் எடுத்த முடிவு தவறானது என்பதைத் தானே? பொது வேட்பாளருக்காக முன்னணியில் நின்று உழைத்த ஒரு சிவில் சமூகச் செயற் பாட்டாளர் கூறுவது போல முன்னணி யானது சரியான வேளைகளில் பிழை யான முடிவை எடுக்கிறது. பிழையான வேளைகளில் சரியான முடிவை எடுக் கின்றது என்பது சரியா ?

இப்பொழுது முன்னணி எடுத்திருக்கும் முடிவானது சரியான வேளையில் எடுக்கப்பட்ட சரியான முடிவா? கடந்த 15 ஆண்டுகால அனுபவத்திலிருந்தும் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப் படையில் முன்னணி அப்படி ஒரு முடிவை எடுத்திருக்குமாக இருந்தால் அதை வரவேற்க வேண்டும்.

ஒப்பீட்டளவில் பெரிய கூட்டை முன் னணி உருவாக்கியிருக்கிறது. அதை வளர்த்தெடுக்க வேண்டும். ஒப்பீட்டள வில் யார் தேசத்தைத் திரட்டும் நம்பிக்கைகளை பலப்படுத்துகின்றார் களோ, அந்த நம்பிக்கைகளுக்காக உண்மையாக உழைக்கின்றார்களோ, அவர்களை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும். பொது வேட்பாளருக்குப் பின் மீண்டும் ஒப்பீட்டளவில் குறிப் பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு கூட்டை முன்னணி உருவாக்கியிருக்கிறது. அது சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான முடிவு என்பதனை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சிகளுக்கும் உண்டு. குறிப்பாக வாக்களிக்கப் போகும் மக்களுக்கு உண்டு.

எதிர்பாருங்கள்!
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா
01 யூன் 2025ஞாயிற்றுக்கிழமை
மாலை 5.30 மணிக்கு
தொடர்புகளுக்கு 416 841 9600

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

29 மார்ச் 2025 - 04 ஏப்ரல் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களுடைய ஏழாவது ஆண்டு நினைவு நாள் 29 மார்ச் 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த் திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்துரை பத்மநாதன்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை பத்மநாதன் அவர்களுடைய ஆறாவது ஆண்டு நினைவு நாள் 31 மார்ச் 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னத்துரை பத்மநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம்

புங்குடுதீவு 6ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 01 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம்

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிசை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 30 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி, இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பாக்கியம் மயில்வாகனம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களுடைய இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 24 மார்ச் 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 61வது ஆண்டுசிரார்த்த தினம்



**திரு சுப்பிரமணியம் கந்தையா**


**திருமதி பார்வதி கந்தையா**

அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது 61வது ஆண்டு சிரார்த்த தினம் 27 மார்ச் 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




29 மார்ச் 2025 சனிக்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி முருகேசபிள்ளை தெய்வானைப்பிள்ளை அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




29 மார்ச் 2025 சனிக்கிழமை வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் சமூக சேவையாளரும் கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர் சங்கத்தின் மூத்த உறுப்பினருமான திரு கல்யாணசுந்தரன் குமாரசிங்கம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கல்யாணசுந்தரன் அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




30 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீகுமார் ரோகினிதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அம்சயன் ஸ்ரீகுமாரின் 15வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அம்சயன் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




30 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




30 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




30 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை கனடா Exevitive woodwork Ltd ஊழியர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




31 மார்ச் 2025 திங்கட்கிழமை அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை பத்மநாதன் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்





01 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வாழும் திரு கிருஷ்ணபிள்ளை செல்வராஜா அவர்களது 65வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கிருஷ்ணபிள்ளை செல்வராஜா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




APRIL
18&19
2025
TICKETS
$30 $50 VIP($100)
416-566-0790
RAMU
Playback Singer
TMS SELVAKUMAR
AKSHAYA SHIVKUMAR
Zee Tamil Singer
OLD IS GOLD
K
KARIS
EVENT PLACE
55 Nugget Ave unit 10,
Scarborough, ON M1S 4L4
AAROSAI
APRIL 18
NATCHATHRAA
MUSIC GROUP
APRIL 19



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா




SUNDAY
JUNE 01
2025

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
ஈழநாடு
பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com



# வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியையுமான திருமதி திருமகள் கேதாரநாதன் அவர்களுக்கு 90வது அகவைத் திருநாள் வாழ்த்து!



பிறந்த மண்ணால் மனிதரும் மனிதர்களால் மண்ணும் பரஸ்பரம் மேன்மையுறுதலும் அதனைக் காலம் தன் பதிவேட்டில் பதிவு செய்தலும் மரபாகவே இருந்து வருகிறது. இந்த மரபையொட்டி வேலணை மண்ணில் வேர் கொண்டு தொல்லுலகில் பல்வேறு நாடுகளில் கிளை பரப்பியிருக்கும் கீர்த்திமிகு ஆளுமைகளில் ஒருவரான திருமதி திருமகள் கேதாரநாதன் அவர்களுக்கு ஏப்ரல் 5, 2025 அன்று அகவை தொண்ணூறு.

தோன்றிற் புகழோடு தோன்றுக என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய அறிவும் புகழும் மிக்க குடும்பத்திலே பிறந்தார். இவரது தந்தையார் தீவகத்தின் பெருமைமிகு கல்விமானும் வேலணைக் கிராமசபையின் முன்னாள் தவிசாளருமான பண்டிதர் இராமநாதர் மருதையனார். தாயார் மனைத்தக்க மாண்புடைப் பண்பின் சிகரம் மீனாட்சிப்பிள்ளை. சகோதரர்கள் காலஞ் சென்றவர்களான திருமதி நாமகள் சண்முகநாதன் திரு தனிநாயகன் மருதையனார் ஆகிய இருவர்.

வேலணை மத்திய கல்லூரி 1945ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் 1950 வரை அங்கு கல்வி கற்ற இவர் தனது உயர்கல்வியை யாழ் இராமநாதன் கல்லூரியில் பூர்த்தி செய்த பின்னர் 1954 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி 1957இல் சிறப்புச் சித்தியுடன் கலைமாணிப் பட்டம் பெற்றார்.

ஆசிரியப்பணி ஓர் அறப்பணி என்று கருதி மட்டக்களப்பில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்துப் பின்னர் 1958 இல் தான் கல்வி கற்ற வேலணை மத்திய கல்லூரியில் தனது பணியைத் தொடர்ந்தார். 1960 இல் ஆசிரியர் திரு பொன்னையா கேதாரநாதன் அவர்களைத் திருமணஞ் செய்து இல்லற வாழ்வின் பயனாக ஆற்றல்மிக்க ஏழு பிள்ளைச் செல்வங்களைப் பெற்றதுடன் தனது ஆசிரியப் பணியில் உயர்கணிதம், தூயகணிதம், பொருளியல், மற்றும் அரசியல் விஞ்ஞானம் முதலிய பாடங்களையும் கற்பித்து மாணவர்களிடத்தில் நன்மதிப்பைப் பெற்றார். ஆசிரியர் திரு பொன்னையா கேதாரநாதன் அவர்கள் பின்னாளில் வேலணை மத்திய கல்லூரியின் அதிபராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியப் பணியைக் கருத்துடன் ஆற்றி வந்தது மட்டுமன்றி அலுவலக நிர்வாகத்திற்கு உதவுதல், அதிபர்களுக்கு தேவைப்படும் போது உதவுதல், குறிப்பாக வகுப்புகளுக்கான பாடநேர அட்டவணைகளைத் தயாரித்தல், உயர்தர வகுப்பு மாணவிகளுக்கு ஆலோசனை வழங்கல், கல்லூரித் தினப் பரிசளிப்பு விழாக்களை முன்னின்று நடத்துதல் போன்ற இன்னோரன்ன பணிகளிலும் சிரமம் பாராது தன்னை ஈடுபடுத்தி வந்தார். இதன் காரணமாக ஆளுமைமிக்க பிரதி அதிபர் பதவி இவரை நாடி வந்தது. 1983 முதல் 1986 இல் ஓய்வு பெறும் வரை பிரதி அதிபராகக் கடமையாற்றினார்.

அவர் பிறந்து வளர்ந்த குடும்பச் சூழலும் அவரது ஆளுமைக்கு அணிகலனாக அமைந்தது என்றால் அது மிகையல்ல. 1958 முதல் 1986 வரை 3 தசாப்தங்கள் வேலணை மத்திய கல்லூரியில் பணியாற்றி மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் பெற்றோராலும் உலகெங்கும் பரந்து வாழும் பழைய மாணவர்களாலும் தன் சமுதாயத்தாலும் பெரிதும்



மதிக்கப்பட்டு வரும் பெருந்தகையான திருமதி திருமகள் கேதாரநாதன் அவர்கள் 90களின் நடுப்பகுதியில் அவுஸ்திரேலியாவிற்குக் குடி பெயர்ந்து கணவர் பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகளுடன் ஓய்வு கால வாழ்வை மகிழ்வாக வாழ்ந்து கொண்டிருந்த வேளை 1996 இல் அன்புக் கணவரை இழந்த போதும் அவர் தம் கடமைகளைச் செய்வதில் தவறியதில்லை. எமது கல்லூரிக்கான இவரது முக்கிய செயற்பாடுகளில் இரண்டைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். ஒன்று ஆண்டு தோறும் நடைபெறும் கல்லூரித் தினப் பரிசளிப்பு விழாக்களின் போது முன்னாள் அதிபர் கேதாரநாதன் ஞாபகார்த்தமாக மாணவர்களுக்கு மதிய உணவளித்து வருவது. மற்றையது கல்லூரி வளாகத்தில் எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் சிவகாமி சமேத நடராசப் பெருமான் ஆலயப் பராமரிப்புச் செலவை நீண்ட காலமாகத் தொடர்ந்து வழங்கி வருவது. பிறருக்குப் பயனாகும் எந்தவொரு செயலும் செய்தவரின் முயற்சியும் சிரமங்களும் பிறரால் போற்றப்படுமாயின் அதுவே அவரது எண்ணங்களுக்குச் சமூகம் கொடுக்கும் அங்கீகாரம் ஆகும். இந்த அங்கீகாரத்தை எப்படி வேண்டு மானாலும் எடுத்துக் கொள்ளலாம். அது அவரவரின் பார்வை மற்றும் சிந்தனைத் திறன் என்பவற்றைப் பின்னணியாகக் கொண்டது எனலாம்.



எனது தந்தையின் தொடர்பால் சிறு வயது முதல் இவரை நன்கு அறிந்தவன் என்பதுடன் 1980–1982 காலப் பகுதியில் உயர்தர வகுப்பில் தூயகணிதம் படித்த அனுபவமும் உண்டு. வளமிகுந்த நுண்ணறிவால் உயர் ந்து நின்று பலர் புகழும் வித்தகியே! பார் போற்ற மென்மேலும் உயர்ந்து செம்மையுற நானிலத்தில் முந்தி வந்தவர் போற்றிப் புகழவும் பிந்தி வந்தவர் வாழ்த்தி வணங்கவும் நூறாய் வாழ்ந்து ஜெகம் எல்லாம் பயன்செய்ய தங்கள் அகவை நாள தனில் உவகை கொண்டு நீடு வாழ்க வென வாழ்த்தி வணங்குகிறேன். வாழ்க பல்லாண்டு!

சி.இளஞ்செழியன் பழைய மாணவன் - வேலணை மத்திய கல்லூரி (1975-1982)


# புலம் பெயரிகளின் யுகத்தில் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவது

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



கனடாவில் வசிக்கும் கவிஞர் சேரன் தன் கவிதை ஒன்றில் எழுதியது போல, முதலாவது தலைமுறைப் புலம் பெயரிகளிடம் நிலம் அதாவது தாயகத்தைப் பற்றிய நினைவு உண்டு. தாய் மொழியாக தமிழ் உண்டு. தமிழ்ப் பண்பாடு உண்டு.

ஆனால் இரண்டாம் தலைமுறைப் புலம் பெயரிகளுக்கு அதாவது கனடாவில் பிறந்து வளரும் பிள்ளைக்கு தாயகம் அதாவது நிலம் வேறு. மொழியும் வீட்டில் ஒரு மொழி சமூகத்தில் வேறொரு மொழி. பண்பாடும் அப்படித் தான். வீட்டில் ஒரு பண்பாடு வீட்டுக்கு வெளியே மற்றொரு பண்பாடு. தலைமுறைகள் தோறும் அவ்வாறு மொழி இழக்கப்படும் பண்பாடு இழக்கப்படும் நிலத்தைப் பற்றிய நினைவுகளும் மங்கிக் கொண்டு செல்லும் என்ற பொருள்பட சேரன் எழுதுகிறார்.




புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகளை நான் ஈரூடக வாசிகள் ''அம்பிபியன்ஸ்'' என்று அழைப்பதுண்டு. ஏனென்றால் அவர்கள் தாயகத்துக்கும் புலம் பெயர்ந்து வந்த நாட்டுக்கும் இடையே ஈருடகமாகக் கிழிபடும் ஒரு தலைமுறை. புலம் பெயர்ந்த நாட்டில் செற்றில்ட் ஆன பின்னும் தாயகத்தை நோக்கி பிரிவேக்கத்தோடு தவிக்கும் ஒரு தலைமுறை. குறிப்பாக, தாயகம் தொடர்பான தமது நினைவுகளுக்கும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்கும் இடையே ஈரூடாகமாகக் கிழிபடும் ஒரு தலைமுறை.

அதிலும் குறிப்பாக வயது செல்லச் செல்ல தனது வேர்களை நோக்கிய தவிப்பும் அதேசமயம் புலம்பெயர்ந்த நாட்டில் அவர்கள் அனுபவிக்கும் வசதி, பாதுகாப்பு, குறிப்பாக மருத்துவம் சார்ந்த பாதுகாப்பு போன்றவற்றை விட்டு வர முடியாத தவிப்பும் என்று இரண்டு தவிப்புக்களுக்கு இடையே அவர்கள் கிழிபடுகிறார்கள்.

ஆனால் இந்த அவஸ்தை அல்லது துயரம் அல்லது தவிப்பு அல்லது ஒரு வித 'அண் செற்றில்ட்' ஆன மனோ நிலை அல்லது வேர் கொள்ளாத மனோ நிலை என்பது இரண்டாவது தலைமுறைக்கு அல்லது அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு அநேகமாக இல்லை.

அவ்வாறு தனது இனம் சார்ந்த பண்பாடு சார்ந்த வேரிலிருந்து படிப்படியாக விலகிச் செல்கின்ற அல்லது தூரமாகிச் செல்கின்ற அடுத்தடுத்த தலைமுறையை எப்படித் தாயகத்தை நோக்கி ஈர்த்து வைத்திருப்பது என்று தவிக்கும் முதலாம் தலைமுறையானது புலம் பெயர்ந்த நாடுகளில் ஒரு சமூகமாகக் கூடக் கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களையும் உச்சமாகப் பயன்படுத்த முயற்சிக்கும். குறிப்பாக நல்ல நாட்கள் பெரு நாட்கள்,சுப காரியங்கள் அபகாரியங்கள் விழாக்கள் ஒன்றுகூடல்கள் என்று கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களையும் ஒன்று விடாமல் பயன்படுத்தும். தாயகத்துக்கு வெளியே தன்னை ஒரு சமூகமாகத் கட்டிக்காக்க முயற்சிக்கும்.

எனது ஐரோப்பிய அமெரிக்கப் பயணங்களின் போது அதை நான் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் அவதானித்துள்ளேன். அவர்களில் அநேகமானவர்களின் வீடுகளில் தமிழ்ச் சுவை தலைமுறைகள் தோறும் கடத்தப்படுகிறது. குறிப்பாக உறைப்புச் சுவை தலைமுறைகள் தோறும் கடத்தப்படுகிறது. பெரும்பாலான வீடுகளில் மிளகாய்த் தூள் உண்டு. சுவை என்பது ஒரு மக்கள் கூட்டத்தின் பண்பாட்டுத் தனித்துவங்களில் ஒன்று.

இந்த அடிப்படையில் கூறின், புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் உறைப்புச் சுவையை தலைமுறைகள் தோறும் கடத்த முயற்சிக்கின்றார்கள். அதில் ஒரு பண்பாட்டுத் தொடர்ச்சி மரபுரிமை தொடர்ச்சி பேணப்படுகிறது.

அது போலவே இரண்டாம் தலைமுறைப் புலம்பெயரிகள் வளரத் தொடங்க அவர்களைத் தமது பாரம்பரியக் கலைகளை நோக்கி முதலாந் தலைமுறைப் புலம் பெயரிகள் ஊக்குவிக்கிறார்கள். தமிழ் டயஸ்பெராவில் தொடக்கத்தில் இருந்தே காணப்பட்ட ஒரு போக்கு இது. இதனால் பல நடன ஆசிரியைகள் அங்கே நிதி ரீதியாக எழுச்சி பெற்றார்கள். தமிழ் மொழி, நடனம், சங்கீதம் ஆகிய துறைகளை நோக்கி தமது அடுத்த தலைமுறைகளை ஊக்குவிக்கும் பல தமிழ்ப் பெற்றோர் அங்கு உண்டு.

அதாவது நாட்டுக்கு வெளியே தங்களை ஒரு பண்பாட்டுச் சமூகமாக கட்டியெழுப்பும் விடயத்தில் தமிழ் டயாஸ்பொராவானது தொடக்கத்திலிருந்து சமூக அரசியல் பண்பாட்டுப் பிரக்ஞையோடு காணப்பட்டது.

தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் எனது பயணங்களில் போது நான் கண்டு ரசித்த ஒரு விடயம் உண்டு. அங்கெல்லாம் ஒரு சமூகமாகக் கூடக் கிடைக்கும் பெரும்பாலான சந்தர்ப்பங்களை அவர்கள் அதிகம் ஆர்வத்தோடு பயன்படுத்துகிறார்கள். நாட்டுக்கு வெளியே ஒரு சமூகமாகத் திரள்வதற்கு அவர்களுக்கு கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களையும் அவர்கள் பயன்படுத்துகிறார்கள். அதுமட்டுமல்ல அந்த ஒன்றுகூடல்களில் அதிகம் உயிர்ப்பிருக்கும்.

ஆனால் தாயகத்தில் ஒப்பீட்டளவில் அவ்வாறு இல்லை. கல்யாண மண்டபக் கலாச்சாரம் பரவிவரும் வரும் ஒரு சமூகப் பொருளாதாரப் பின்னணியில் தாயகத்தில் கல்யாண மண்டபங்களில் நிகழும் சமூக ஒன்றுகூடல்கள் அதிகம் சடங்கார்த்தமானவைகளாக மாறி வருகின்றன.

நிகழ்வில் முகூர்த்த நேரத்தில் கலந்து கொள்வது வரிசையாக நின்று மணமக்களை ஆசீர்வதிப்பது படம் எடுப்பது சாப்பிடுவது பின்னர் கலைந்து செல்வ எல்லாமே சடங்காகி வருகின்றன. ஆனால் புலம் பெயர்ந்த பரப்பில் ஒப்பீட்டுளவில் அந்த ஒன்று கூடல்களில் அதிகம் உயிர்ப்பிருக்கும்.

அவ்வாறான ஒன்றுகூடல்களில் புலம் பெயர்ந்த தமிழர்கள் தாயகத்தில் தங்களுடைய இளமைக் காலத்தில் தங்களைக் கவர்ந்த கலை நிகழ்ச்சிகளை எல்லாம் மீளுருவாக்கி அரங்கேற்றுவார்கள். நாட்டில் நாங்கள் மறந்து போன அல்லது வழக்கொழிந்து போன அல்லது போரால் அள்ளிச் செல்லப்பட்ட பல கலை நிகழ்ச்சிகளை மீண்டும் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் நான் பார்த்திருக்கிறேன். சில விமர்சகர்கள் கூறுவது போல அது தங்களுடைய இறந்த காலத்தை அப்படியே ஊறுகாய் போட்டு வைத்திருக்கும் ஒரு பண்பாகக் கூட இருக்கலாம். ஆனாலும் அங்கே ஒரு மரபுரிமைத் தொடர்ச்சியை, பண்பாட்டுத் தொடர்ச்சியைப் பேண விளையும் தேசிய வேட்கையைக் காணக்கூடியதாக இருந்தது.

இவ்வாறு தாயகத்துக்கு வெளியே தம்மை ஒரு பண்பாட்டுச் சமூகமாக கட்டிக் காக்கும் விடயத்தில் தமிழ் டயஸ்பெராவை பொறுத்த வரை யுத்தம் ஒரு முக்கிய பங்கை வகித்தது. போரால் சிதைக்கப்பட்ட தாயகத்தை நோக்கிய பிரிவேக்கத்தோடு தமிழ் மக்கள் ஒரு சமூகமாகத் திரட்டக் கூடிய வாய்ப்புகளை ஆயுதப் போராட்டம் அதிகம் உருவாக்கியது.

குறிப்பாக புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் தமிழ் மொழிப் பள்ளிகளையும் கலாசாரத் தொடர்ச்சியையும் பேண வேண்டும் என்ற பெரு விருப்பம் விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் இருந்தது. தாயகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கருநிலை அரசிடம் டயஸ்போராவை தாயகத்துக்கு வெளியே ஒரு அரசியல் பண்பாட்டுச் சமூகமாகத் திரட்டுவதற்கான ஒரு நிகழ்ச்சி நிரல் இருந்தது.

ஆனால் 2009க்குப் பின்னரான தமிழ்ச் சமூகம் படிப்படியாகத் தூர்ந்து போகின்றது. புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் ஆயிரம் பிளவுகள். அவற்றில் பெரும்பாலானவை அரசியல் பிளவுகள். ஆனால் ஒரு பண்பாட்டுச் சமூகமாக அவர்கள் ஒன்றாகத் திரள முடியும்.

இந்த அடிப்படையில் பார்த்தால் கனடாவில் கட்டியெழுப்பப்படவுள்ள சமூக மையமானது தமிழ் மக்களை தலைமுறைகள் தோறும் ஒரு பண்பாட்டுச் சமூகமாக நிறுவன மயப்படுத்த உதவுமா? இவ்வாறு உருவாக்கப்படும் கொம்யுனிட்டி சென்டர்களை – சமூக மையங்களை – முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகள் எப்படி பார்க்கிறார்கள் என்பதற்கும், இரண்டாம் மூன்றாம், அடுத்தடுத்த தலைமுறையினர் எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதற்கும் இடையே ஒரு இடைவெளி அல்லது வேறுபாடு இருக்கத் தான் செய்யும்.அது தலைமுறை சார்ந்த வேறுபாடு மட்டுமல்ல அதைவிட ஆழமானது.

மனித குல வரலாறு என்பது அவ்வாறு வேர்களை அறுத்துக் கொண்டு புலம் பெயர்ந்த சமூகக் கூட்டங்களின் வரலாறு தான். மனித குலம் தோன்றிய பொழுதே ஒரு புலம் பெயரிதான். மனித குல வரலாறு என்பது புலப்பெயர்ச்சியின் வரலாறுதான். எனவே புலப்பெயர்ச்சியின் துயரமும் தவிப்பும் ஈருடகத் தன்மையும் முழு மனித குலத்துக்கும் பொதுவானவை.சர்வ வியாபகமானவை. சாசுவதமானவை.

இப்படிப்பட்டதோர் உலகளாவிய அனுபவத்தின் பின்னணியில் கனடாவில் கட்டியெழுப்பப்படவிருக்கும் கொம்யுனிட்டி சென்டரைக் குறித்து எழுதுமாறு நண்பர் கேட்டார். வழமையாக புலம் பெயர்ந்த சமூகத்தை தாயகத்தின் நோக்குக் கோணத்தில் இருந்து பார்த்துப் பேசியும் எழுதியும் வந்த எனக்கு இது சற்று வித்தியாசமானது.

நான் தாயகத்தின் நோக்கு நிலையில் இருந்து தான் பார்ப்பேன் சிந்திப்பேன். அதுதான் என்னுடைய இயற்கை. அப்படி தான் முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகள் தமது ஈரூடக நோக்கு நிலையில் இருந்துதான் சிந்திப்பார்கள். இந்த அடிப்படையில்தான் முதலாம் தலைமுறை புலம் பெயரிகள் தாம் புலம்பெயர்ந்த நாடுகளில் கட்டியெழுப்பும் சமூக மையங்களையும் பார்க்கின்றார்கள். எப்படி இரண்டாம் மூன்றாம் அடுத்தடுத்த தலைமுறைகளை தாயகத்தை நோக்கிப் பிணைத்து வைத்திருப்பது? என்று தான் அவர்கள் அதிகமாகச் சிந்திப்பார்கள்.

உலகின் மிக நீண்ட டயஸ்பொராக்களில் ஒன்று ஆகிய யூத சமூகத்தைப் பொறுத்த வரை அவர்களுடைய வரலாறும், அவர்களுடைய மதமும், இரண்டாம் உலக மகா யுத்தம் வரையிலும் அவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இன அழிப்பும் அவர்களை ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு இன விழிப்போடும் தாயகத்தை நோக்கிய தவிப்போடும் தேசிய வேட்கையோடும் ஒரு சமூகமாகத் திரட்டி வைத்திருந்தன.

ஆனால் ஈழத் தமிழர்களின் நிலை அவ்வாறு இல்லை. போர்க்காலங்களில் இன அழிப்புக்கு உள்ளாகிய தமது தாயக உறவுகளை நோக்கித் தமிழ் டயஸ் போரா ஈர்க்கப்பட்டு இருந்தது. ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக அந்த ஈர்ப்பு விசை குறையத் தொடங்கி விட்டது.


என்னுடைய நண்பர் பேராசிரியர் ஜெயசங்கர் ஒரு முறை என்னிடம் கேட்டார், உன்னுடைய சகோதரன் உனக்கு உதவுவதைப் போல உன்னுடைய சகோதரத்தின் பிள்ளை உன்னுடைய பிள்ளைக்கு உதவுமா? என்று.

இந்தக் கேள்வியை வேறு விதமாக ஸ்கன்டினேவிய நாடு ஒன்றின் கொழும்புக்கான தூதுவர் என்னிடம் கேட்டார்.

(20ம் பக்கம் பார்க்க)

# நான்கு முனை அழுத்தங்கள்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



அடுத்து வரும் வாரங்கள், மாதங்களில் அரசாங்கம் பொருளாதார ரீதியான விடயங்களில் முடிவுகளை எடுப்பதில் சிக்கலான சூழலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அடுத்த வாரம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். பொருளாதார நெருக்கடியின் போது, 4 பில்லியன் கொடுத்த இந்தியா, டொலர்களை அதற்குசமமாக இல்லை என்றாலும், பதிலீடாக தங்களுடைய நலன்களை நிறை வேற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பை கொண்டிருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஏப்ரல் 2ஆம் திகதி உலகின் எல்லா நாடுகளின் இறக்குமதிகள் மீதும் வரிகளை விதிக்க திட்டமிட்டிருக்கிறார். ட்ரம்பின் இறக்குமதி வரித் திட்டத் துக்குள், இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களும் சிக்கிக் கொண்டால் நிலைமை மோசமாகும். அதேபோல, அடுத்த ஆண்டுடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி பிளஸ் வரி சலுகை முடிவுக்கு வரப் போகிறது. அதற்குப் பின்னர், இந்த வரிச் சலுகையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், இலங்கை அரசாங்கம் அதன் நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டியிருக்கும்.

அதேவேளை, பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான திட்டத்தை செயற்படுத்த, சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்பட வேண்டிய நிலையிலும் அரசாங்கம் இருக்கிறது. இந்த நான்கு இறுக்கமான சூ ழல்க ளையும் அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கத்தினால் எதிர்கொள்வது இலகு வான காரியமாக இருக்காது.

இந்தியப் பிரதமரின் வருகையின் போது, பல புரிந்துணர்வு உ ட ன் பா டு க ள் கையெழுத்திடப்படவுள்ளதாக சாங்கம் கூறியிருந்தது. ஆனால், அவை என்னென்ன என்பது பற்றிய எந்த விபரங்களும் வெளியிடப்படவில்லை.

சில இந்திய ஊடகங்கள் ஐந்து புரிந்துணர்வு உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட உள்ளதாக தகவல் வெளியிட் டுள்ளதாகவும், அவை என்னவென்று அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்றும், புபுது ஜாகொட கோரியிருந்தார். ஆனால், அரசாங்கம் அது பற்றி வாயைத் திறக்கத் தயாராக இல்லை. இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் லண்டனில் நடந்த நிகழ்வு ஒன்றில் கருத்து வெளியிட்ட போது, இலங்கைக்கு வழங்கிய நான்கு பில்லியன் டொலர்களை நினைவுபடுத்தியதுடன், அதற்கு இணையாக இல்லாவிட்டாலும் குறிப்பிடத்தக்க சில விடயங்களில் இந்தியாவின் எதிர்பார்ப்புகளை இலங்கை நிறைவேற்ற வேண்டும் என கூறியிருந்தார். அது என்ன என்பதை குறிப்பிடவில்லை அவர்

அது பொருளாதார ரீதியாக திருப்பிக் கொடுப்பதாக இருக்கலாம் அல்லது பாதுகாப்பு ரீதியான நலன்களை உறுதி செய்வதாக இருக்கலாம், இல்லை வேறு ஏதும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவ தாக இருக்கலாம். அது என்ன என்பதை அறிந்தால் தான், அதனை நிறைவேற்றக் கூடிய நிலையில் அரசாங்கம் இருக்கிறதா என்பது தெளிவாகும். இந்தியப் பிரதமரின் வருகையின் போது, செய்து கொள்ளப்படவுள்ள உடன்பாடுகள், அதனை ஒட்டியதாக இருப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. இலங்கைக்கு இந்தியாவினால் அந்த கடன்கள் கொடுக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட நிலையில், அதனை மீளப் பெற்றுக் கொள்வது பற்றியோ அல்லது அதற்கு இணையாக நலன்களை பெற்றுக் கொள்வது தொடர்பாகவோ இனிமேலும், இந்திய அரசாங்கம் பேச்சுக்களை நடத்தாமல்





இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. இந்த விவகாரம் பெரும் சிக்கலான ஒன்றாக இன்னமும் உருவெடுக்கா விட்டாலும், அமெரிக்காவின் வரி விதிப்பு முக்கியமான ஒரு பிரச்சினையாக உருவெடுக்க வாய்ப்பு இருக்கிறது.

ஏனென்றால் அமெரிக்காவில் ட்ரம்ப் ஆட்சிக்கு வந்ததில் இருந்து, தமது நாட்டுடன் பிற நாடுகள், வர்த்தகம் செய்யும் போது, சமநிலையாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார். அதாவது, ஏற்றுமதிக்கு சமமாக இறக்குமதியும் இருக்க வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடு. இதற்கு இணங்க மறுக்கும் நாடுகளுடன் முரண்படவும் அவர் தயங்கவில்லை.

கனடா, மெக்ஸிக்கோ போன்ற அண்டை நாடுகள் நட்பு நாடுகளாக இருந்த போதும் கூட அவர் விட்டு வைக்கவில்லை. கடுமையான வரிகளை விதித்து அந்த நாடுகளை அச்சுறுத்தி வருகிறார். ஏப்ரல் 2ஆம் திகதிக்குப் பின்னர், அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகள், வர்த்தக சமநிலையை உறுதிப்படுத்திக் கொள்ளாவிட்டால், கடுமையான வரி விதிக்கப்படும் என்ற ட்ரம்பின் எச்சரிக்கை இலங்கைக்கும் கூட பொருத்தமானது தான். ஏனென்றால், இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு சுமார் 3 பில்லியன் டொலர் வரையிலான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஆனால், அமெரிக்காவிலிருந்து சுமார் 500 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களே இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இங்கு வர்த்தக சம நிலை என்பது கிடையவே கிடையாது. இலங்கையின் ஏற்றுமதியில் 23 சதவீதம் அமெரிக்காவுக்கு இடம் பெறுகின்ற நிலையில், அமெரிக்காவில் இருந்து வெறுமனே 3.13 சதவீதமே இறக்குமதி செய்யப்படுகிறது.

இதனால் தான் இலங்கை மீது கடுமையான வரிகளை அமெரிக்கா விதிக்கக் கூடும் என்ற அச்சம் காணப்படுகிறது. இந்தியாவும் கூட வரி விதிப்பில் இருந்து தப்பிக்க முடியாதென ட்ரம்ப் எச்சரித்துள்ள சூழலில் இலங்கை போன்ற நாடுகளுக்கு அவர் வரி விலக்கு கொடுப்பார் என எதிர்பார்க்க முடியாது. இந்தச் சூழலை கையாளுவது, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு உள்ள மிகப்பெரிய சவால்.

ட்ரம்புடன் நெருங்கி போகவும் முடியாமல், தூர விலகிச் செல்லவும் முடியாமல், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நெருக்கடியில் சிக்கி இருக்கிறது. இதுபற்றி பேசுவதற்கு வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் அமெரிக்காவுக்கு செல்ல இருப்பதாக கூறப்பட்டாலும், அவ்வாறான பயணம் எதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கூறியிருக்கிறார். இது வெள்ளம் வரும் முன்னே, அணை கட்டும் முயற்சியாக தெரியவில்லை. அதே போலத் தான், 2027 ஆம் ஆண்டுடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ். பி. பிளஸ் வரிச் சலுகை முடிவுக்கு வரப் போகிறது. அதற்குப் பின்னர் புதிய அணுகுமுறையுடன் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை நடைமுறைப்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் எதிர்பார்த்திருக்கிறது.

இந்த சூழலில் தீர்மானங்களை எடுப்பதற்கு முன்னர், இலங்கையில் ஆய்வை அது மேற் கொள்ளப் போகிறது. இதற்காக, ஏப்ரல் 28 ஆம் திகதி முதல் மே 7ஆம் திகதி வரை ஐரோப்பிய ஒன்றிய ஆய்வுக்குழு, இங்கு கண்காணிப்பு பயணத்தை மேற்கொள்கிறது.

உச்சக் கட்ட தேர்தல் பிரச்சாரம், வாக்களிப்பு என்பன இடம்பெற உள்ள சூழலில், ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த கள ஆய்வு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

இந்த நிலையில், இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை நிறுத்தப் பட்டால், 1.23 பில்லியன் டொலர்



வருமானத்தினை இலங்கை இழக்க நேரிடும். அது மாத்திரமன்றி, ஐரோப்பிய ஒன்றியத்துக்கான மொத்த ஏற்றுமதியில், 36.7 சதவீதத்தை இழக்கின்ற நிலையும் ஏற்படும். இதைத் தவிர்க்க வேண்டுமானால், இலங்கை அரசாங்கம் பல்வேறு நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டியிருக்கும். நல்லாட்சி அரசாங்கம் பதவியில் இருந்த போது 2018ஆம் ஆண்டு, கடுமையான போராட்டங்களுக்கு மத்தியில் இந்த வரிச்சலுகையை பெற்றுக் கொண்டது.

அப்பொழுது பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது உள்ளிட்ட 27 நிபந்தனைகளுக்கு இணங்குவதாக, இலங்கை அரசாங்கம் வாக்குறுதி கொடுத்திருந்தது. ஆனால், இன்று வரை பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும் வாக்குறுதியை நல்லாட்சி அரசாங்கமும் நிறைவேற்றவில்லை. அதற்குப் பின்னர் பதவிக்கு வந்த கோட்டா, ரணில், அநுர அரசாங்கங்களும் நிறைவேற்றவில்லை

புதிய ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ள முனையும் போது, பயங்கரவாத தடை சட்டத்தை நீக்காததற்கான காரணத்தை இலங்கை அரசு விளக்க வேண்டியிருக்கும். அல்லது ஏற்கெனவே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மீறியதற்கு கடும் அழுத்தங்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். புதிய ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுதற்கு முன்னர், அந்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு அழுத்தம் கொடுக்கப்படலாம். அவ்வாறு அழுத்தம் கொடுக்கப்பட்டால் அரசாங்கம் என்ன முடிவை எடுக்கப் போகிறது?

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக வாக்குறுதி கொடுத்திருந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், இப்பொழுது அதற்கு பதிலாக வேறொரு சட்டத்தை கொண்டு வரப் போவதாக கூறுகிறது. அது எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாது.

ஏனென்றால் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாவற்றையும், 5 ஆண்டுகளுக்குள் நிறைவேற்றினால் சரி என்ற ரீதியிலேயே பதில் அளிக்கப்படுகிறது. அதனால் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு மாற்றான ஒரு சட்டத்தை தயாரிப்பதற்கு அரசாங்கத்துக்கு இன்னும் நான்கரை ஆண்டுகள் கால அவகாசம் இருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான நிலைப்பாட்டை கேள்விக்குட்படுத்தும் போது அரசாங்கம் என்ன முடிவை எடுக்கப் போகிறது? சர்வதேச நாணய நிதியம், தனது நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் செல்ல விடாமல், இலங்கை அரசாங்கத்தை கட்டிப்போட்டு வைத்திருக்கிறது.

அதற்கமைய செயற்பட்டால் மாத்திரமே, கடன் மீட்சித் திட்டத்தை முன்னெடுக்க முடியும் என அது திட்டவட்டமாக கூறிவிட்டது.

தேசிய மக்கள் சக்திக்கு சர்வதேச நாணய நிதியத்துடன் இணங்கிப் போகும் எண்ணம் இல்லா விட்டாலும், வேறு வழி இன்றி அதன் திட்டங்களை செயற்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறது.

இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா என மாறி மாறி பொருளாதார ரீதியான கருவிகளை வைத்துக் கொண்டு இலங்கை அரசாங்கத்திடம் காரியங்களை நிறைவேற்ற முற்படுகின்றன. இந்த சூழலில், அநுரகுமாரவின் அரசாங்கம் எடுக்கப் போகும் முடிவுகள் என்ன, அதன் விளைவுகள் என்ன, என்பது தான் முக்கியமான கேள்வியாக இருக்கிறது.

# 2019ம் ஆண்டு பௌத்த மதகுருமார்கள் தையிட்டிக்கு வந்து பழைய ஆலயம் இருந்த பகுதிகளைச் சுற்றி இருந்த தமிழர் நிலங்களில் புதிய கட்டிடமொன்றைக் கட்டினர்- நாகதீப சாது

தமிழ்மக்கள் இங்கே தவறிழைக்கவில்லை. அவர்கள் அப்பாவிகள் அவர்கள் தங்கள் நிலங்களை மாத்திரம் கேட்கின்றனர். நான் அவர்களின் பக்கம் என்கின்றார் நாகதீப விகாரையின் தலைமை விகாராதிபதி நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர்

தையிட்டி யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் போராட்டம் குறித்தே அவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.




தையிட்டியில் நாகதீப ஆலயத்திற்கு சொந்தமான ஒன்றரை ஏக்கர் நிலத்தில் ஆலயமொன்று காணப்பட்டது என தெரிவிக்கும் அவர் 1958இல் பதற்ற நிலை உருவானதை தொடர்ந்து அந்த ஆலயம் கைவிடப்பட்டது ஆனால் நிலம் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்படாமல் இருந்தது என அவர் குறிப்பிடுகின்றார்.

பல வருடங்கள் யுத்தம் இடம் பெற்ற போதும் தமிழ் மக்கள் அந்த நிலத்தை ஆக்கிரமிக்கவில்லை என அந்த பௌத்த மதகுரு சண்டே மோர்னிங்கிற்கு தெரிவித்தார். எனினும் 2019 இல் புதிய பௌத்த மதகுருமார்கள் அங்கு வந்து பழைய ஆலயம் அமைந்திருந்த பகுதிகளை சுற்றியிருந்த தமிழருக்குச் சொந்தமான நிலங்களில் பௌத்த மதகுருமார்களிற்கான புதிய கட்டிடமொன்றை கட்ட ஆரம்பித்தனர் என அவர் தெரிவித்தார்.

எங்களிற்கு சொந்தமான ஒன்றரை ஏக்கர் நிலத்தை அவர்கள் தொடர்வில்லை, ஆனால் அவர்கள் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் புதிய கட்டுமானங்களை மேற்கொள்வதற்காக பழைய ஆலயத்தின் பெயரை பயன்படுத்தியுள்ளனர் என அவர் குறிப்பிட்டார். இதற்கு இலங்கை இராணுவத்தினர் ஆதரவளித்தனர், மக்களின் நிலங்களில் இந்த கட்டுமானங்களை கட்டுவதற்கு பிரதானமாக ஆதரவளித்தவர்கள் இராணுவத்தினரே என அவர் குறிப்பிடுகின்றார்.

அவர்கள் இதனை ஆரம்பித்த போது இதனை நிறுத்துங்கள் என பொதுமக்கள் பிரதிநிதிகளிடம் தெரிவித்தேன், ஒருநாள் பிரச்சினை வரும் என எச்சரித்தேன். அவர்கள் இது கட்டப்படும் வரை காத்திருந்து விட்டு எதிர்ப்பை ஆரம்பித்தனர், நான் ஆரம்பத்திலிருந்து தையிட்டி விகாரைக்கு எதிராகவே உள்ளேன்.

அங்கு முன்னர் இராணுவமுகாம் இருந்தது, இந்த மதகுருமார்கள் அந்த பகுதியை சேர்ந்தவர்கள் இல்லை, நான் மாத்திரமே அந்த பகுதியை சேர்ந்தவன், அவர்களை இங்கு கொண்டு வந்து சேர்த்துள்ளனர் இது ஒரு வியாபாரம். இலங்கை மின்சாரசபை எப்படி உறுதியில்லாத புதிய கட்டிடங்களிற்கு மின்சாரத்தை வழங்குகின்றது, இராணுவத்தின் அதிகாரத்தை பயன்படுத்தியே மின்சாரத்தை பெற்றுள்ளனர் என நாகதீப விகாரையின் தலைமை விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் பிரசித்திப் பெற்ற நயினாதீவு பௌத்த விகாரையின் விகாராதிபதியாக கடமையாற்றி வரும் நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் சர்ச்சைக்குரிய திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியாகவும் செயற்பட்டு வருகின்றார்.

திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியாக நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் செயற்பட்டாலும் திஸ்ஸ விகாரைக்கான கண்காணிப்பு பொறுப்பு மற்றுமொரு பௌத்த பிக்குவிற்கு வழங்கப்பட்டுள்ளது.



இவ்வாறு பொறுப்பு வழங்கப்பட்டுள்ள பௌத்த பிக்குவே இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக யாழ்ப்பாணம் திஸ்ஸ விகாரை மற்றும் நயினாதீவு விகாரையின் விகாராதிபதி நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் தெரிவிக்கின்றார்.

இந்த பௌத்த பிக்கு இராணுவத்துடன் இணைந்து விகாரையின் காணியில் இல்லாத தமிழ் மக்களின் காணிகளில் தற்போதுள்ள விகாரையை கட்டியுள்ளார். இது தவறு என நான் முதலில் இருந்தே கூறி வருகின்றேன்.

விகாரைக்கு 18 ஏக்கர் இருக்கின்றது. இது திஸ்ஸ விகாரைக்கு சொந்தமானது என கூறுகின்றனர். திஸ்ஸ விகாரைக்கு என்று காணி உறுதிப்பத்திரம் இருக்கின்றது. அந்த காணிகள் அந்த மக்கள் இருக்க வேண்டும். நான் தானே அதற்கான அனுமதியை கொடுக்க வேண்டும்.

தமிழ் மக்களிடம் காணி உறுதிப்பத்திரங்கள் இருக்கின்றன. வெசாக் உற்சவத்திற்கு அரசாங்கத்தினால் விகாரைகளுக்கு பணம் வழங்கப்பட்டது. திஸ்ஸ விகாரைக்கும் பணம் வழங்கப்பட்டது. அந்த பிக்குவுடன் இணைந்து இராணுவம் பணத்தை பெற்று தமிழ் மக்களின் காணிகளில் அந்த நிர்மாண பணிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.



திஸ்ஸ விகாரைக்கு கிடைத்த பணத்தை கொண்டு ஏனையோரின் காணிகளில் விகாரையை நிர்மாணித்தது சட்டவிரோதமானது. தமது காணிகளை கோரியே தமிழ் மக்கள் போராட்டங்களை நடத்துகின்றனர் என நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் குறிப்பிடுகின்றார்.

தற்போதுள்ள நிர்மாணிக்கப்பட்டுள்ள விகாரையை உடைக்க முடியாது. அவ்வாறு உடைத்தால் வேறு பிரச்னை வரும். அதனால் எனது காணியை தருகின்றேன் என நான் தமிழ் மக்களிடம் கூறினேன் எனவும் அவர் தெரிவித்தார். நான் ஏனைய பௌத்த பிக்குகளுடன் கலந்துரையாடினேன். தற்போதுள்ள பிக்குவிடம் உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை. ஏனையோர் ஏற்றுக்கொண்டார்கள். ஆனாலும் காணி விடுவிக்கப்படவில்லை. தமிழ் மக்கள் போராட்டங்களை நடத்துகின்றனர். அது நியாயமான போராட்டம்.

நான் பௌத்தன் என்றாலும் எமது காணிகளில் விகாரையை கட்ட வந்தால் எமது மக்களும் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள் அல்லவா?

அது தெளிவாகவே தமிழ் மக்களின் காணிகள். வேண்டுமென்றே இராணுவத்துடன் இணைந்து இதனை செய்கின்றனர். எங்களையே உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. வீதி தடையை ஏற்படுத்தியே இந்த விகாரை நிர்மாணிக்கப்பட்டது என அவர் குறிப்பிடுகின்றார்.

''மக்கள் தவறானவர்கள் இல்லை. பிக்குவே தவறிழைத்தவர். இராணுவம் தவறிழைத்துள்ளது. அந்த பிக்கு பலவந்தமாகவே விகாரையில் இருக்கின்றார்' எனவும் நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் குறிப்பிடுகின்றார்.

சண்டே மோர்னிங்கிற்கு கருத்து தெரிவித்த புதிய விகாரை கட்டப்பட்டுள்ள காணி உரிமையாளர்களில் ஒருவரான சாருஜன் தங்கள் காணிக்கு பக்கத்தில் 1940 முதல் சிறிய பௌத்த ஆலயம் காணப்பட்டதை நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம் என தெரிவித்தார்.


இங்கிருந்த தொழிற்சாலையொன்றில் பணி புரிந்த சிங்களவர்கள் அங்கு வழிபாட்டில் ஈடுபட்டுள்ளனர், ஆனால் புதிய ஆலயம் எங்களிற்கு சொந்தமான தனியார் நிலத்தில் கட்டப்பட்டுள்ளது ,1986இல் நாங்கள் காணியை விட்டுவிட்டு இங்கிருந்து யாழ்ப்பாணம் சென்றோம், யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர் 2015இல் நாங்கள் இங்கு மீண்டும் வந்தோம், இராணுவத்தினர் நிலங்களை ஆக்கிரமித்திருந்தனர்' என அவர் தெரிவித்தார்.

நாங்கள் உண்மை நிலவரத்தை அறிவதற்கு கொவிட்19 தடையாகயிருந்தது, இங்கு சட்டவிரோத கட்டுமானம் இடம்பெறுவதை எங்களால் அறிய முடியாமல் போய்விட்டது ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட முடியவில்லை என மற்றுமொரு காணி உரிமையாளரான மலியதலன் தெரிவித்தார்.

இந்த காணி உரிமையை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் எங்களிடம் உள்ளன, இந்த நிலம் ஆலயத்திற்கு சொந்தமானது என்றால் இராணுவத்தை உறுதியை காண்பிக்க சொல்லுங்கள் என்றார் அவர். சமீபத்தில் காணி உரிமையாளர்கள் சிலர் காணி உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் அரசாங்க அமைச்சரை கடந்த வாரம் சந்தித்தனர்.

செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த பார்ள் அமைப்பின் உறுப்பினரும் யாழ் பல்கலைகழக விரிவுரையாளருமான(22ம் பக்கம் பார்க்க)

# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2

## மணமகள்

**ID08120762 F**
43yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Teacher , Canada

**ID08121251 F**
23yrs, 5'8" , Single , Thiruvonam , N/A Sevai , Bachelors.. , Bank Officer , Canada

**ID08121247 F**
30yrs, 5'3" , Divorced , Not Specified , N/A Sevai , Diploma , Beautician , Sri Lanka

**ID08121241 F**
25yrs, 5'8" , Single , Not Specified , N/A Sevai , High School , Student , Canada

**ID08120770 F**
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Senior software.. , Sri Lanka

**ID08121240 F**
24yrs, 5'5" , Single , Sevai , Bachelors.. , Physiotherapist , Australia

**ID08121238 F**
37yrs, 5'3" , Divorced , Uthiram , 7 Sevai , Bachelors.. , Accountant , Canada

**ID08121226 F**
29yrs, 5'4" , Single , Pooraadam , N/A Sevai , Bachelors.. , Bank , Canada

**ID08120776 F**
29yrs, 5'6" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , IT Proc Officer , Canada

**ID08121224 F**
26yrs, 5'6" , Single , Chathayam/sadayam , N/A Sevai , Bachelors.. , Tba , Canada

**ID08120778 F**
26yrs, 5'4" , Single , Poorattathi , 12 Sevai , Bachelors.. , Nurse , Canada

**ID08120791 F**
36yrs, 5'2" , Divorced , Thiruvonam , N/A Sevai , Masters Degree , Senior Finance.. , Sri Lanka

**ID08121220 F**
30yrs, 5'7" , Divorced , Pooram , N/A Sevai , Diploma , Finanacial.. , Canada

**ID08121216 F**
24yrs, 5'3" , Single , Makam , N/A Sevai , Diploma , Tba , Canada

**ID08120795 F**
31yrs, 5'4" , Single , Aayilyam , 9 Sevai , Bachelors.. , Human Resources.. , Canada

**ID08120799 F**
45yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08121215 F**
27yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Bank Officer , Canada

**ID08121196 F**
25yrs, 5'5" , Single , Thiruvonam , 4 Sevai , Postgraduate.. , Finance Analyst , Canada

**ID08121211 F**
36yrs, 5'4" , Single , Makam , 10 Sevai , Masters Degree , TBa Canada

**ID08120804 F**
29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08121204 F**
31yrs, 5'4" , Single , Uthiram , 7 Sevai , Bachelors.. , Residency.. , Canada

**ID08121199 F**
30yrs, 5'3" , Single , Poosam , 1 Sevai , Bachelors.. , Medical Lab.. , Canada

**ID08120807 F**
27yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Beautician.. , Sri Lanka

**ID08121197 F**
30yrs, 5'1" , Single , Poorattathi , 4 Sevai , Bachelors.. , Medical Doctor , Canada

**ID08121193 F**
34yrs, 5'7" , Annulled , Thiruvaathirai , N/A Sevai , Bachelors.. , Toronto city.. , Canada

**ID08120822 F**
22yrs, 5'3" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , RN , Canada

**ID08120830 F**
28yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Senior Consultant , United Kingdom

**ID08121189 F**
32yrs, 5'6" , Single , Rohini , N/A Sevai , Ph.D , Engineer , United States

**ID08120799 F**
5yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08121186 F**
30yrs, 5'7" , Single , Chithirai , N/A Sevai , Postgraduate.. , Accounting.. , Canada

## மணமகன்

**ID08121247 M**
30yrs, 5'3" , Divorced , Not Specified , N/A Sevai , Diploma , Beautician , Sri Lanka

**ID08121243 M**
35yrs, 5'9" , Single , , Sevai , Bachelors.. , Technical.. , Sri Lanka

**ID08121239 M**
61yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , Masters Degree , Doctor , Australia

**ID08121236 M**
31yrs, 5'9" , Single , Aswini , N/A Sevai , High School , Not Specified , Sri Lanka

**ID08121233 M**
34yrs, 5'11" , Single , Uthiram , 8 Sevai , Bachelors.. , Officer , Canada

**ID08121221 M**
26yrs, 5'8" , Single , Pooram , 5 Sevai , Diploma , Accountant , Sri Lanka

**ID08121218 M**
32yrs, 5'7" , Single , Kettai , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka

**ID08120779 M**
35yrs, 5'5" , Single , Aayilyam , N/A Sevai , High School , Company Forklift.. , Canada

**ID08121218 M**
32yrs, 5'7" , Single , Kettai , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka

**ID08121213 M**
26yrs, 5'6" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Software developer , Sri Lanka

**ID08121206 M**
33yrs, 5'3" , Single , Thiruvonam , N/A Sevai , High School , Own business , Sri Lanka

**ID08120789 M**
35yrs, 6'1" , Single , Rohini , N/A Sevai , High School , Tba , Canada

**ID08120790 M**
21yrs, 4' , Single , Not Specified , N/A Sevai , High School , Casc , Anguilla

**ID08121202 M**
31yrs, 5'7" , Single , Anusham , 5 Sevai , Masters Degree , Banker , Sri Lanka

**ID08121200 M**
31yrs, 6' , Single , Anusham , 2 Sevai , Bachelors.. , Customer Service.. , Sri Lanka

**ID08121208 M**
36yrs, 5'2" , Single , Makam , 9 Sevai , Bachelors.. , Clerk , Canada

**ID08121195 M**
36yrs, 5'5" , Single , Swaathi , N/A Sevai , Diploma , Manager , Sri Lanka

**ID08121194 M**
44yrs, 5'3" , Single , Swaathi , N/A Sevai , Diploma , Pharmacist.. , Sri Lanka

**ID08121191 M**
26yrs, 5'6" , Single , Chathayam/sadayam , 7 Sevai , High School , Textile -.. , Sri Lanka

**ID08120812 M**
32yrs, 5'7" , Single , Avittam , 10 Sevai , Masters Degree , Cyber Security.. , Sri Lanka

**ID08121190 M**
29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 10 Sevai , High School , Tyre shop.. , Sri Lanka

**ID08120814 M**
43yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Manager , Canada

**ID08121178 M**
30yrs, 6'2" , Single , Thiruvonam , N/A Sevai , Bachelors.. , Software engineering , Sri Lanka

**ID08121176 M**
28yrs, 5'6" , Single , Moolam , 7 Sevai , Postgraduate.. , Television.. , Sri Lanka

**ID08120818 M**
36yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08121171 M**
26yrs, 6' , Single , Swaathi , N/A Sevai , Bachelors.. , Engineer , Canada

**ID08120821 M**
30yrs, 5' , Single , Avittam , N/A Sevai , Bachelors.. , Manager Sri Lanka

**ID08120829 M**
38yrs, 5'8" , Single , Revathi , N/A Sevai , High School , Restaurant , France

**ID08121168 M**
42yrs, 5'10" , Divorced , Punarpoosam , N/A Sevai , Diploma , Own Company , Canada

**ID08120710 M**
22yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Sri Lanka

# யாழ்ப்பாணத்திற்கு தலை குனிவு

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், மீண்டும் சந்தி சிரிக்கும் நிலையை, உருவாக்கியிருக்கிறது. ஏற்கெனவே, முதல்முறை நடந்த கூட்டத்தில் இடம் பெற்ற சம்பவங்கள், சமூக ஊடகங்களில் காணொளியாக வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இம்முறை நடந்த கூட்டத்தில், நடந்த சம்பவங்கள் யாழ்ப்பாண மக்கள் தலைகுனியும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.



மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் ஏன் கூட்டப்படுகிறது. எதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என திட்டவட்டமான குறிக்கோள்கள் இருக்கின்றன.

இவ்வாறான கூட்டத்தில் பல சந்தர்ப்பங்களில் அரசியல் புகுந்து விளையாடியிருக்கிறது. அரசியல் மோதல்கள் நிகழ்ந்திருக்கின்றன. அரசியல் ரீதியான வாக்குவாதங்களும் நடந்திருக்கின்றன. ஆனால், இந்த முறை நடந்திருப்பது மிக மிக கேவலமான ஒரு அலங்கோல அரசியல் தனிப்பட்ட முறையிலான தாக்குதல்களும், குற்றச் சாட்டுகளும் வசை பாடல்களும், ஒட்டுமொத்த கூட்டத்தையுமே இடையில் நிறுத்துகின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்ட மக்களின் அடிப்படை பிரச்சினைகள், உட்கட்டுமான வசதிகள் தொடர்பாக கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டிய அந்தக் கூட்டம், ஆளுமையற்ற சிலரின் நடத்தையால், முழுமையாக வீணாடிக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்த அத்தனை பேரினதும் பெறுமதி மிக்க வேலை நேரம் இழக்கப்பட்டிருக்கிறது. அதனை ஒருபோதும் மீளப்பெற முடியாது. இந்த இழப்புக்கு ஒரே காரணம், தகுதியற்ற தெரிவுகள் தான்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாண மாவட்ட மக்கள் எடுத்த முடிவு பரவலான அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அதற்காக, அவர்கள் வருந்துகின்ற நிலை வரும் என ஏற்கெனவே பலரும் எதிர்வு கூறியிருக்கின்றனர். அந்த எதிர்வுகூறல் சரியானதே என உறுதிப்படுத்தும் வகையில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் நிகழ்வுகள் அமைந்திருக்கின்றன.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனும், சுயேச்சைக் குழுவின் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனும் அந்தக் கூட்டத்தில் மிகத் தரம் குறைந்த வார்த்தைப் பிரயோகங்களை முன்னெடுத்தனர்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு ஒரு மரபு இருக்கிறது. மதிப்பு இருக்கிறது. அதனை மீறாத வகையில் தான் நடக்க வேண்டும். நடந்து கொள்ள வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள் என யாராக இருந்தாலும் அது பொதுவான ஒன்று. யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கடந்த காலங்களில் காரசாரமான வாக்குவாதங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, ரவிராஜ், தி.மகேஸ்வரன், கஜேந்திரன், கஜேந்திரகுமார் போன்றவர்களுடன் ஆளுங்கட்சி வரிசையில் இருந்த டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன் போன்ற பலரும் கடுமையான வாக்குவாதங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்போது நடந்திருப்பது, வாக்குவாதம் என்பதை தாண்டி, அரசியல் ரீதியான மோதல் என்பதை தாண்டி, தனிப்பட்ட பகைமையின் வெளிப்பாடாக அமைந்திருக்கிறது. தரக்குறைவாக பேசுவது, தரம் தாழ்ந்து பேசுவது, வசைமாரி பொழிவது என அந்தக் கூட்டத்தில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும், தவறாக நடந்து கொண்டுள்ளனர். எல்லா வற்றையும் கற்றறிந்தவர் போல தன்னைக் காட்டிக் கொள்ளும் அர்ச்களா இராமநாதன், தனக்கு இணையாக யாரும் இல்லை, மற்றவர்கள் தன்னை விடக் கீழானவர்கள் என்ற நினைப்புடன் வாய்க்கு வந்தபடி பேசக் கூடியவர். அவருடன் மல்லுக் கட்டிய இளங்குமரனும் கூட, அந்தக் கூட்டத்தில், நாகரீகமாக நடந்து கொள்ளவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு என ஒரு கௌரவம் இருக்கிறது. அதனை அவர்கள் தங்களின் பதவி மூலம் மாத்திரம் பெற்றுக் கொள்வதில்லை. மக்களின் அபிமானத்தின் மூலமும் தான் அதனை பெற்றுக் கொள்ள முடியும். பதவி மூலம் பெற்றுக் கொண்ட கௌரவத்தை காப்பாற்றிக் கொள்ள முடியாதவர்களாகவே அவர்கள் நடந்து கொண்டார்கள்.

ஒருமையில் பேசுவது, அவமரியாதையாக பேசுவது என அவர்கள் நடந்து கொண்ட முறை, முன்னுதாரணங்களுக்கு அப்பாற்பட்டது. ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் பெயரைக் கூட விழித்துக் கூறும் வழக்கம் இத்தகைய கூட்டங்களில் கிடையாது. அழைப்பார்கள். ஆனால் இந்தக் கூட்டத்தில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் என்று தான் சந்திரசேகரும், மல்லுக் கட்டிய விதம், மிக மிக மோசமானது. ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரான அமைச்சர் சந்திரசேகரும் தனது தகுதியின்மையை வெளிப்படுத்தி விட்டார். அவர் கூட்டத்தை சரியான முறையில் நடத்தியிருக்க வேண்டும். தனக்குரிய அதிகாரத்தை பயன்படுத்தியிருக்க வேண்டும்.

தனது அதிகாரத்தைக் கொண்டு அவர்களை கட்டுப்படுத்தியிருக்க இருக்க வேண்டும். ஆனால் அவரால் அதனை செய்ய முடியவில்லை. தனது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான இளங்குமரனைக் கூட அவரால் அடக்கி வைக்க முடியவில்லை. இவ்வாறான நிலையில் தான், அமைச்சர் சந்திரசேகரின் அதிகாரம் இருக்கிறது என்பது வெளிப்படையாகியுள்ளது. கூட்டம் முடிந்த பிறகு, இனி மேல் தலைவருக்குரிய அதிகாரத்தை பயன்படுத்துவேன் என அவர் கூறி இருக்கிறார். எல்லாம் நடந்து முடிந்த பின்னர் கூறுகின்ற சமாதானம் இது. அடுத்த கூட்டத்தை அவர் எப்படி நடத்தப் போகிறார் என்று பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இப்பொழுதே தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர்களின் தகுதி தராதரங்கள் பகிரங்கமாகியிருக்கின்றன.

அர்ச்சனா ராமநாதன் மீது ஒரு காலத்தில் பெருமதிப்பையும் அபிமானத்தையும் வைத்திருந்தவர்கள், தங்களின் கருத்தை மாற்றிக் கொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர் சாவகச்சேரி வைத்தியசாலை விவகாரத்தில் தொடங்கிய அரசியல் தான், அவரை பாராளுமன்றத்திற்குள் கொண்டு வந்து நிறுத்தியது. ஆனால், அவர் சாவகச்சேரி வைத்தியசாலை பிரச்சினைக்கும் தீர்வு காலளவில்லை, ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவில்லை. பாராளுமன்றத்துக்கு சென்றும் அவர் பிரச்சினைகளை உருவாக்குபவராக இருக்கிறாரே தவிர, பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுப்பவராகத் தெரியவில்லை. அவர் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களில் குழப்ப வேலைகளை முன்னெடுத்து வருகிறார்.

இவ்வாறான நிலையானது, மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் செயல்பாடுகளை முடக்கிப் போட்டு விடும். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தை நடத்த முடியாமல் போய் விட்டது என்ற காரணத்தை வைத்துக் கொண்டு, ஆளும்கட்சி தனது விருப்பப்படி திட்டங்களை நிறைவேற்றுகின்ற சூழலும் ஏற்படும். இவ்வாறான குழப்பங்களின் மூலம் யாருக்கு சார்பான சூழல் உருவாக்கப்படுகிறது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம்.


இந்த சண்டை, சச்சரவுகளை பொறுக்க முடியாமல் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வெளியேசென்று விட்டார். இவ்வாறு வெளியே செல்வது தான், குழப்பவாதிகளுக்கு வசதியான சூழலை ஏற்படுத்தும். தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களை அரங்கில் இருந்து வெளியேற்றுவதற்காக கூட இவ்வாறான குழப்பங்கள் விளைவிக்கப்படலாம். யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தை சரியான முறையில் நடத்துவதற்கு, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, ஜனாதிபதியிடம் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கூற வேண்டிய நிலையில், தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஏனென்றால், ஜனாதிபதியே அவரைத் தலைவராக நியமித்திருக்கிறார்.

ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் சரி, இணைத் தலைவராக இருக்கின்ற ஆளுநரும் சரி இதுவரை நடந்த கூட்டங்களையும் செம்மையாக நடத்துகின்ற திறனை வெளிப்படுத்தியிருக்கவில்லை. ஆளுமை மிக்கவர்களை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்வதற்கு, யாழ்ப்பாண மக்கள் தவறி விட்டார்கள். அவர்களின் அந்தத் தவறை இப்போதைக்கு சரி செய்ய முடியாது. அதற்கு ஐந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருக்கும். அரசியல் என்பது பிறப்புரிமைக் கோட்பாட்டின் வழி வந்த ஒன்று அல்ல.

அதற்கு நிரந்தரமாக யாரும் சொந்தம் கொண்டாட முடியாது. தகுதியும் தராதரமும் கொண்டவர்களாலேயே அது முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த தகுதியும் தராதரமும், கல்வியினாலோ, பதவியினாலோ வந்து விட முடியாது என்பதை இந்த மோதல் இன்னும் வெளிச்சம் போட்டுக் காண்பித்திருக்கிறது. தகுதியும் தராதரமும் அற்றவர்களை அரசியலில் அரங்கேற்றம் செய்ய முயன்றால், அதன் விளைவு எப்படியானதாக இருக்கும் என்பதையே, யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வெளிப்படுத்தியிருக்கிறது.

இதற்குப் பின்னராவது, யாழ்ப்பாண மக்கள் உள்ளூராட்சி தேர்தலில் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு முன்னர், ஒன்றுக்குப் பலமுறை யோசிப்பார்கள் என்று நம்பலாம்.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# புலம் பெயரிகளின் யுகத்தில் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவது

(15ம் பக்கத் தொடர்ச்சி) முதலாம் தலைமுறை படிப்படியாக இறந்து போனால், அடுத்தடுத்த தலைமுறைகள் தாயகத்தை நோக்கிய ஏக்கத்தோடும் தவிப்போடும் தாயகத்தின் சமூகப் பொருளாதார அரசியல் விவகாரங்களோடு பிணைக்கப்பட்டிருக்குமா? என்று.

இலங்கை அரசாங்கமும் உட்பட தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் பெரும்பாலான நாடுகளின் அரசாங்கங்கள் அவ்வாறு தான் சிந்திக்கின்றன. முதலாவது தலைமுறை புலம் பெயரிகள் வயதாகி இறந்து செல்லும் பொழுது காலப்போக்கில் டயஸ்பொறாவுக்கும் தாயகத்துக்கும் இடையிலான பிணைப்புகளின் வீரியம், தொடர்ச்சி குறைந்து விடும் என்று.

அவ்வாறு தாயகத்துக்கும் தமது சந்ததியினருக்கும் இடையிலான பிணைப்பின் வீரியம் குறையக்கூடாது என்று கருதும் முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகள் தாங்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் கட்டி எழுப்பப்படும் சமூக மையங்களை அந்த நோக்கு நிலையில் இருந்தே கட்டியெழுப்ப முயற்சிக்கின்றார்கள்.

அவர்களுடைய ஈருடக வாழ்க்கை நிலையைப் பொறுத்தவரை அவர்கள் அப்படித்தான் சிந்திப்பார்கள். ஆனால் இரண்டாம், மூன்றாம், அடுத்தடுத்த தலைமுறைகள் அவ்வாறு தான் சிந்திக்கும் என்று எடுத்துக் கொள்ளத் தேவையில்லை.

முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகள் கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அல்லது உடல் வலு உள்ள வரை தாயகத்தை நோக்கி வந்து கொண்டே இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக 2009க்குப் பின்னர் பலர் தமது சொந்தக் கிராமங்களில் தமக்கு விரும்பிய இடத்தில் ஒரு காணியை வாங்கி விரும்பிய சைஸில் வீடுகளைக் கட்டி வருகிறார்கள். முன்பு தமது ஊரில் குறிப்பிட்ட இடத்தில் ஒரு காணியை வாங்குவது என்பதனை கற்பனை செய்ய முடியாத சமூகப் பின்னணியை அல்லது நிதிப் பின்னணியைக் கொண்டிருந்தவர்கள், இப்பொழுது புலப் பெயர்ச்சியின் விளைவாகத் தேடிய தேட்டத்தை வைத்து அவ்வாறு விரும்பிய இடத்தில் காணியை வாங்கி விரும்பிய சைசில் வீட்டைக் கட்டும் ஒரு வளர்ச்சிக்கு வந்திருப்பது பெருமைக்குரியது.

ஆனால் அந்த வீடுகளில் அவர்கள் பருவ காலப் பறவைகளைப் போலவே வருகிறார்கள். பெரும்பாலான காலங்களில் அந்த வீடுகள் சிசிரிவி கமராக்களால் கண்காணிக்கப்படுகின்றன. அல்லது செக்யூரிட்டி நிறுவனங்களால் பாதுகாக்கப்படுகின்றன. தொண்டைமானாரிலிருந்து பருத்தித்துறை நோக்கி செல்லும் கடற்கரைச் சாலையில் அவ்வாறு பிரமாண்டமான வீடுகளைக் காணலாம். நான் இருக்கும் பகுதியில் மட்டும் அவ்வாறு மூன்றுக்கும் மேற்பட்ட வீடுகள் உண்டு. இப்படி எல்லாக் கிராமங்களிலும் பெரிய, பெரிய ஆளில்லாத வீடுகளைக் காண முடியும். கடந்த 15 ஆண்டுகளாக எழுச்சி பெற்று வரும் ஒரு புதிய போக்கு இது. இதற்குள் இருக்கிறது முதலாம் தலைமுறை புலம் பெயரியின் ஏக்கமும் தவிப்பும் நிராசையும்.

இப்புதிய போக்கின் பின்னணியில், மூன்றாவது புலப் பெயர்ச்சி அலை ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதில் புலம்பெயரும் பெரும்பாலானவர்கள் படித்தவர்கள் முக்கிய பொறுப்புகளை வகித்தவர்கள் துறைசார் நிபுணத்துவத்தைக் கொண்டவர்கள். எனினும் இவ்வாறு புலம் பெயரும் ஒரு பகுதியினர் அங்கே செற்றிலாக முடியாமல் மீண்டும் தாயகத்தை நோக்கி வருகிறார்கள். இது மூன்றாவது புலப்பெயர்ச்சி அலைக்குரிய வித்தியாசமான பண்புகளில் ஒன்று.

இவ்வாறு ஒரு புறம் முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகள் தாயகத்தில் பெரிய சொகுசான வீடுகளைக் கட்டி வருகிறார்கள். இன்னொருபுறம் மூன்றாவது புலப்பெயர்ச்சி அலை ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அதாவது போக்கும் வரவும். இப்படிப்பட்டதோர் போக்கும் வரவுமான சமூக அரசியல் பொருளாதாரச் சூழலில் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் மக்கள் தங்களை ஒரு பண்பாட்டுக் குழுமமாக கட்டியெழுப்புவது எப்படி?

தேசம் என்ற அரசியல் பரிமாணத்தின் அடிப்படையில் அவர்கள் தங்களைக் கட்டியெழுப்புவதில் அடிப்படையான பௌதிக வரையறைகள் உண்டு. தாயகத்துக்கு வெளியே ஒரு தாயகத்தை கட்டியெழுப்புவதில் அடிப்படையான வரையறைகள் உண்டு. ஆனால் தாயகத்துக்கு வெளியே ஒரு பண்பாட்டுக் குழுமமாக தமிழ் மக்கள் தங்களை கட்டியெழுப்ப முடியும். 2009க்கு முன்பு வரை போர் அவ்வாறு தமிழ் மக்களை ஒரு திரட்சியாக்கியது. 2009க்குப் பின் அதை எந்தெந்தத் தளங்களில் செய்வது? தங்கள் அடுத்தடுத்த சந்ததிகளுக்கும் தமது தாயகத்துக்கும் இடையிலான பிணைப்பைப் பலப்படுத்த யோசிக்கும் எல்லாப் புலம்பெயர்ந்த சமூகங்களும் அரசியல் பொருளாதாரம் பண்பாடு ஆகிய தளங்களில் தான் அந்த பிணைப்பைப் பலப்படுத்தலாம்.

அரசியல் ரீதியாக அந்த பிணைப்பு இப்பொழுதும் உண்டு. ஆனால் அதே அரசியல் தான் புலம்பெயர்ந்த தமிழ் மக்களை பல துண்டுகளாகப் பிரித்தும் வைத்திருக்கின்றது.பொருளாதாரத் தளத்தில் இது தொடர்பாக ஒருங்கிணைந்த செயற்பாடுகள் குறைவு. என்றாலும், உதிரிகளாக முதலீட்டாளர்கள் தாயகத்தை நோக்கி வருகிறார்கள்.ஆனால் அது போதாது.

பண்பாட்டுத் தளத்தில் மரபுரிமை மாதங்களையும் நாட்களையும் பிரகடனப்படுத்துவதன் மூலம் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தன்னை ஒரு திரட்சியாக கட்டமைக்க முயற்சிக்கின்றது. அவ்வாறு பண்பாட்டுத்தளத்தில் எந்தெந்த விடயங்களில் தமிழ் மக்கள் தங்களுடைய அடையாளங்களை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கடத்தலாம் என்று சிந்திக்கலாம். உணவுப் பெருவிழாக்கள் பாரம்பரிய விளையாட்டு விழாக்கள் மூத்த தலைமுறையினரை போற்றி மதித்துக் கொண்டாடுவது புதிய தலைமுறைக்குள் துருத்திக் கொண்டு மேலெழும் ஆளுமைகளைக் கௌரவிப்பது் மரபுரிமைச் சுற்றுலாக்கள்... போன்ற பல்வேறு விடயங்களிலும் கவனம் செலுத்தலாம். இதை ஒரு கட்டுரைக்குள் மட்டும் கூறிவிட முடியாது.

இது தொடர்பாக துறை சார்ந்த நிபுணர்கள் தாயகத்திலும் டயஸ்போராவிலும் ஒன்றுகூடி எந்தெந்த விடயப் பரப்புகளில் தமிழ் மக்களை ஒரு பண்பாட்டுக் குழுமமாகப் பலப்படுத்துவது என்று திட்டமிட வேண்டும். மேலும் கொம்யுயூனிட்டி சென்டர் என்பது ஒரு இடையூடாட்டப் பரப்பாக மட்டும் இல்லாமல், மரபுரிமை தொடர்ச்சியை வரலாற்றுத் தொடர்ச்சியை பண்பாட்டுத் தொடர்ச்சியைப் பேணும் காட்சிக் கூடமாகவும் கட்டமைக்கப்பட வேண்டும்.

தாயகத்துக்கு டயஸ்பொறாவுக்கும் இடையிலான ஸ்திரமான(22ம் பக்கம் பார்க்க)


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



கட்டுரையாளர்:-
நிலாந்தன்

# மாவட்ட - பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களில் என்ன நடக்கிறது?

மாவட்ட பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடியவை என்பதே ஒரு மாயை. அந்த மாயைக்குத் தூலமான ஓர் உதாரணம் தையிட்டி விகாரை. உலகம் முழுவதையும் பெருந் தொற்று நோய் கவ்விப் பிடித்த ஒரு கால கட்டத்தில் தையிட்டி விகாரைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

அதாவது கொரோனா வைரஸ் மனிதர்களைத் தாக்கிய அந்தக் காலத்திலும் இலங்கைத்தீவின் இனவாத வைரஸ் உயிர்ப்புடன் பரவியது என்று பொருள். அப்பொழுது நடந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அப்பொழுது இருந்த பிரதேச சபையின் நிர்வாகம் அதாவது கூட்டமைப்பின் அதிகாரத்துக்குள் இருந்த பிரதேச சபை நிர்வாகம் – சிங்கள பௌத்த மயமாக்கலுக்குத் துணை போனது. விளைவாக இப்பொழுது விகாரை கட்டப்பட்டு விட்டது.

கடந்த சில ஆண்டுகளாக நடந்து வரும் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களால் அந்த விகாரை கட்டி எழுப்பப்படுவதைத் தடுக்க முடியவில்லை. மட்டுமல்ல. கடந்த வாரம் அங்கே ஒரு புதிய கட்டிடம் திறக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அடுத்த பௌர்ணமிக்கு ஒரு போராட்டத்தைச் செய்வதற்கிடையில் மேலும் ஒரு கட்டடம் திறக்கப்படக் கூடும். கடந்த வாரம் நடந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அது தொடர்பாக காணி உரிமையாளரான பாதிக்கப்பட்ட ஒரு பெண் எழுந்து நின்று கதைக்கிறார். அவருக்கு அங்கே தீர்வு வழங்கப்படவில்லை. அது. தான் மாவட்ட அபிவிருத்திகும் குழுக் கூட்டம்.

அப்படித் தான் கிளிநொச்சி மாவட்டத்திலும் கிட்டத்தட்ட ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக அங்கு நிகழும் சட்டவிரோத மண் அகழ்வு, சட்ட விரோத மது உற்பத்தி போன்றவைகள் தொடர்பாக தொடர்ச்சியாகக் கதைக்கப்பட்டு வருகிறது. ஆனால் மண் அகழ்வையும் கசிப்பு உற்பத்தியும் கசிப்பு வலைப் பின்னலையும் கட்டுப்படுத்த முடியவில்லை. போதைப்பொருள் வலைப் பின்னலையும் கட்டுப்படுத்த முடியவில்லை.

கசிப்பு உற்பத்தியை அம்பலப்படுத்திய ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வனை அதில் சம்பந்தப்பட்டவர்கள் நடுவீதியில் கண்டி வீதியில் வைத்துத் தாக்கினார்கள். எந்த மக்களுடைய நன்மைக்காக அவர் அந்தச் செய்தியை வெளியே கொண்டு வந்தாரோ, அதே மக்கள் அவர் தாக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டு தம் வழியே போனார்கள். யாரும் அதைத் தடுக்கவில்லை.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு பின் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இது தான் கிளிநொச்சி மாவட்டத்தின் நிலைமை. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அங்கே நடக்கும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி முக்கியமான பிரச்சினைகளில் எத்தனைக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது?

இப்படிப்பட்டதோர் பின்னணியில் அண்மை நாட்களாக நடந்து வரும் வெவ்வேறு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் அர்ஜுனா மீண்டும் பேசுபொருளாக மாறியிருக்கிறார். அர்ஜுனாவை பேசுபொருள் ஆக்குவது குறிப்பிட்ட சில யுரியூப்களும் ஊடகங்களும் தான்.

இம்முறை ஆளும் தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அர்ஜுனாவை பேசுபொருள் ஆக்கியிருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் அர்ஜுனா பேசுவதற்கு விதிக்கப்பட்டிருக்கும் இடைக்காலத் தடையின் பின்னணியில் அவர் தனக்கு கிடைக்கும் ஏனைய மேடைகளை நாடாளுமன்றம் போல பயன்படுத்தத் தொடங்கி விட்டார். தன்னைப் பேச விடாது தடுத்த அரசாங்கத்துக்கு எதிராக பேசுவதற்கு அவர் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை பயன் படுத்துகின்றார். அக் கூட்டங்களில் பாவிக்க கூடாத வார்த்தைகளை அவர் பாவிக்கின்றார்.



அவரால் சீண்டப்படும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவ்வாறு பாவிக்கக் கூடாத வார்த்தைகளைப் பயன் படுத்துகின்றார்கள். இந்தக் கோமாளிக் கூத்துக்குள் சிக்கி அவமானப்பட விரும்பாத அதிகாரிகள் எல்லாவற்றையும் அமைதியாகப் பார்த்து சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். சிறீதரன் இடையில் எழும்பி வெளிநடப்புச் செய்கிறார்.

அர்ஜுனாவுக்கு பதில் வினை ஆற்றும் அரசியல் தோல்விகரமானது. அவர் தானும் சிரிக்கிறார். மற்றவர்களுக்கும் சிரிப்புக் காட்டுகிறார். எந்த அதிகாரிகளை நோக்கி அவர் குற்றம் சாட்டுகிறாரோ அவர்களும் சேர்ந்து சிரிக்கிறார்கள். அதாவது அவர் வைக்கும் குற்றச் சாட்டுக்களும் அங்கே சீரியஸ் இழந்து போகின்றன. அதிகாரிகளுக்கு எதிரான அவருடைய விமர்சனங்கள் மட்டுமல்ல தமிழ்த் தேசிய அரசியலும் அவ்வாறு சீரியஸ் தனத்தை இழப்பதை ஒரு நகைச்சுவையாக மாற்றப்படுவதை அனுமதிக்க முடியாது.

பொது வெளியில் அர்ஜுனாவை எதிர்ப்பதற்கு யாரும் தயாராக இல்லை. ஏனென்றால் அவரில் வாய் வைத்தால் அவர் திருப்பி எப்படி வாய் வைப்பார் என்ற பயம். கம்பன் கழகத்துக்கு அது தான் நடந்தது. அதே சமயம் யாரை எதிர்த்ததன் மூலம் அர்ஜுனா மிக விரைவாக வைரல் ஆனாரோ, அந்த அதிகாரிகள் இப்பொழுது கூலாக இருந்து சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் அர்ஜுனா தானே தன்னை தோற்கடிப்பார் என்று அவர்களுக்குத் தெரிகிறது. அவர் தன் வாயாலேயே கெட்டு விடுவார் என்றும் எல்லாருக்கும் தெரிகிறது.

ஒருபுறம் அவர் புத்திசாலித்தனமாகக் கதைக்கிறார். ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய் வைக்கத் தயங்கும் இடங்களில் வாய் வைக்கிறார். ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனிக்கத் தவறிய விடயங்களை அவர் சுட்டிக் காட்டுகிறார்.

அபிவிருத்தி சம்பந்தப்பட்ட திட்டமிடல் சம்பந்தப்பட்ட எல்லா உரையாடல்களிலும் அவர் மைக்கைத் தன்னிடமே வைத்துக் கொள்கிறார். நாடாளுமன்றத்திலும் அப்படித் தான். கிடைக்கின்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர் கதைக்கிறார். எல்லாவற்றையும் பற்றிக் கதைக்கிறார். அவருடைய வார்த்தைகள் எல்லை மீறிப் போனதன் விளைவாக நாடாளுமன்றத்தில் அவர் பேசுவதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் தடைகளால் அவரைத் தடுக்க முடியாது. நாடாளுமன்றத்தில் தனக்குத் தடுக்கப்பட்ட வாய்ப்புகளை அவர் மாவட்ட பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும் யூடியூப்பர்கள் மத்தியிலும் எடுத்துக் கொள்கிறார். அவரை யாரும் கட்டுப்படுத்த முடியாது. அவர் தன் வாயாலேயே தன்னைக் கெடுத்துக் கொள்வார். தானே தன்னைத் தோற்கடித்துக் கொள்வார். ஆனால் அவருக்கு எதிர் வினையாற்றுகிறோம் என்று கூறிக் கொண்டு கடந்த கிழமை நடந்த யாழ்ப்பாண மாவட்டத்துக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரோடு வாக்கு வாதப்பட்டு தங்களுடைய கொள்ளளவு இவ்வளவு தான் என்பதனை நிரூபித்திருக்கிறார்கள்.

அதையே தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் செய்ய முடியாது. செய்யவும் கூடாது. அர்ஜுனா வெற்றிடத்தில் இருந்து தோன்றவில்லை. தமிழ்த் தேசிய அரசியலின் போதாமைகள், இயலாமைகள், தவறுகளில் இருந்து தான் அவர் தோன்றினார்.

தமிழ்த் தேசிய அரசியல் என்பதனை எதிரிக்கு எதிரான எதிர்ப்பு அரசியலாக மட்டும் குறுக்கியதன் விளைவுகளில் ஒன்று தான் அர்ஜுனா. எதிரிக்கு எதிரான அரசியலை செயல்பூர்வமான அரசியலாக முன்னெடுக்காமல் வெறும் கோஷ அரசியலாக முன்னெடுத்ததன் விளைவுகளில் ஒன்று தான் அர்ஜுனா. தமிழ்த் தேசியம் என்பது திருடர்களும் கபடர்களும் பொய்யர்களும் நபுஞ்சகர்களும் எடுத்தணியும் முகமூடியாக மாறிய தன் விளைவாகத் தான் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் கட்சிகள் பின்னடைவைக் கண்டன.

எனவே அர்ஜுனாக்கள் எங்கிருந்து உற்பத்தியாகிறார்கள் என்பதனை தமிழ்த் தேசியக் கட்சிகள் கற்றுக் கொள்ள வேண்டும். தொழில்நுட்பத்தின் கைதியாக உள்ள ஒரு தலைமுறையை எப்படி நெருங்கி செல்வது? அவர்கள் மத்தியில் எப்படி வேலை செய்வது? அதற்குத் தொழில் நுட்பத்தையே எப்படி ஒரு கருவியாகப் பயன்படுத்துவது? என்பதனை தமிழ்த் தேசியக் கட்சிகள் கற்றுக் கொள்ள வேண்டும். கோஷ அரசியல் மற்றும் வேஷ அரசியல் என்பவற்றின் சிவப்பு மஞ்சள் நிறங்கள் வெளுரத் தொடங்கி விட்டன.

தேசியவாத அரசியல் என்பது அது தமிழ்த் தேசமாக இருந்தாலும் சரி, சிங்கள தேசமாக இருந்தாலும் சரி, எந்தத் தேசமாக இருந்தாலும் சரி, ஒரு மக்கள் கூட்டத்தை ஆகக் கூடிய பட்சம் பெரிய திரளாகக் கூட்டிக் கட்டுவது தான். அந்தப் பெரிய திரட்சியின் நன்மை – தீமை பெரியது – சிறியது நல்லவை – கெட்டவை பிரம்மாண்டமானது – அற்பமானது... என்ற எல்லாவற்றையும் கவனத்திலெடுத்து அரசியல் செய்வதற்குரிய கட்டமைப்புகளை உருவாக்கியிருந்திருந்தால் அர்ச்சுனாக்கள் மேலெழுவதற்கான வெற்றிடம் தோன்றியிருக்காது.

நிதிப்பலமும் அரச அனுசரணையும் உடைய படித்த நடுத்தர வர்க்கம் அரசு அலுவலகங்களில் எப்படியோ சமாளித்துக் கொள்ளும். ஆனால் சாதாரண ஜனங்களின் நிலை அப்படியல்ல. அவர்களுக்குச் சின்னச் சின்னப் பிரச்சனைகள், சின்னச் சின்னக் குறைகள் உண்டு.


இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வரையிலும் அந்தப் பிரச்சினைகளை ஒத்தி வைக்க முடியாது. ஏனென்றால் அவை நாளாந்தப் பிரச்சினைகள் உடன் பிரச்சினைகள். இந்தப் பிரச்சினைப் பரப்பின் மீது தமிழ்த் தேசியக் கட்சிகள் கவனத்தைக் குவிக்கவில்லை. அவ்வாறு கவனத்தைக் குவிப்பதற்கு என்ன வேண்டும்?

திட்டமிடல் துறையில் அடுக்கடுக்காகப் பட்டங்கள் வேண்டுமா? அல்லது நிர்வாகத் துறையில் பட்டங்கள் வேண்டுமா? அல்லது மக்கள் ஆணை வேண்டுமா? இல்லை. இவை எவற்றையும் விட அதிகமாகத் தேவைப்படுவது, பேரன்பு.




தனது மக்களை நேசிக்கத் தெரிய வேண்டும். தன்னைப் போல் தன் மக்களையும் நேசிக்கத் தெரிய வேண்டும். மக்களில் அன்பு வைத்தால், அவர்களுடைய நன்மை தீமைகளில் பங்கெடுத்தால் மக்கள் வெற்றியைப் பெற்றுத் தருவார்கள். எனவே அர்ஜுனாவுக்கு பதில் வினையாற்றுவதை விடவும் அர்ஜுனாக்கள் தோன்றக் காரணமாக இருந்த தமது பலவீனங்களையும் போதாமைகளையும் எப்படி அகற்றலாம் என்று தான் தமிழ்த் தேசியக் கட்சிகள் சிந்திக்க வேண்டும்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! மதிப்பு அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் வேகமான போக்கு காணப்படும். கிடப்பில் இருந்த கடன்கள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்கள் உங்களுக்கு மனவருத்தத்தை தருவதாக இருக்கலாம். கவனமாக கையாள்வது நல்லது.





ரிஷபராசி அன்பர்களே! மனோ தைரியம் கூடும். புதிய நட்பு கிடைக்கும். எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடங்கல்கள் வரலாம். பண வரத்து இருந்தாலும் தேவை அதிகரிக்கும். புதிய வாடிக்கையாளர்களால் நன்மை உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணி புரிவார்கள். சிலருக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் கிடைக்கலாம்.





மிதுனராசி அன்பர்களே! சுப காரிய தடைகள் அகலும். நீண்டநாள் இழுபறியாக இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின்தங்கிய நிலை மாறும். எதிர்பார்த்த ஆர்டர்கள் வந்து சேரும். வியாபார போட்டிகள் தடை தாமதங்கள் நீங்கும். உத்தியோகத்தில் சாமர்த்தியமாக செயல்பட்டு மேலகாரிகளின் பாராட்டுகளை பெறுவர். பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் உண்டாகும்.





கடகராசி அன்பர்களே! தடைகளை தகர்த்தெறிந்து முன்னேற்றம் காண்பீர்கள். தெளிவான முடிவு எடுப்பதன் மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். அரசாங்கம் தொடர்பான விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். கடினமான வேலைகள் கூட சுலபமாக முடியும். மரியாதையும், அந்தஸ்தும் அதிகரிக்கும். கடினமான முயற்சிகள் கூட எளிமையாக செய்ய முடியும். தொழில் வியாபாரத்தில் கடன் பாக்கிகள் வசூலாகும்.





சிம்மராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். நினைத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். தொழில் வியா பாரத்தில் பார்ட்னருடன் அனுசரித்து செல்வது நல்லது. வியாபார போட்டிகள் குறையும்.




கன்னிராசி அன்பர்களே! காரிய வெற்றி உண்டாகும். புத்தி சாதுரியத்தால் எதையும் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். செவ்வாய் சஞ்சாரத்தால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். உத்யோகத்தில் சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. புதிய பொறுப்புகள் ஏற்க வேண்டி இருக்கும்.





துலாம்ராசி அன்பர்களே! ஆராய்ந்து செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். மருத்துவம் சார்ந்த செலவுகள் நேரலாம். ஆயுதங்கள் கையாளும் போதும், வாகனங்களை ஓட்டும் போதும் எச்சரிக்கை அவசியம். அடுத்தவர்களுக்கு உதவ போய் வீண் பழி ஏற்படலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். வியாபார ஸ்தலத்திற்காக புதியதாக இடம் வாங்குவீர்கள்





விருச்சிகராசி அன்பர்களே! எதையும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது. எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனத்துடன் வைப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்பட்டாலும் வந்து சேர்வதில் எந்த தடைகளும் இருக்காது. உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! தடைப்பட்டு வந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். ராசியில் குரு இருப்பதன் மூலம் ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களிடம் நன்மதிப்பை பெறுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் நேர்மையாக சிறப்பாக பணிகளை செய்து மேலதிகாரிகளிடம் பாராட்டுக்கள் கிடைக்க பெறுவர்.




மகரராசி அன்பர்களே! கொடுக்கல், வாங்கலில் இருந்த பிரச்சனை தீரும்.எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதகமாக இருக்கும். தொழில் வியாபாரம் லாபகரமாக நடக்கும். தடைபட்ட ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த வேலையை செய்து முடித்து நன்மதிப்பை பெறுவார்கள்.




கும்பராசி அன்பர்களே! சுபச் செலவு அதிகரிக்கும். மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். ஒதுங்கி சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம். கவனமாக இருப்பது நல்லது. கண் சம்பந்தமான கோளாறுகள் ஏற்படலாம். வேளை தவறி உணவு உண்ணும்படி நேரலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் போட்டி இருக்கும். வேலை செய்யும் இடத்தில் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது




மீனராசி அன்பர்களே! எதிலும் முன்னேற்றம் காணப்படும். பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன் மற்றும் கேதுவால் பொருள்வரத்து அதிகரிக்கும். வாகனம், பூமி மூலம் லாபம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். தைரியாதிபதி சூரியனும் தொழில் ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்கிறார். எதிர்பார்த்த லாபம் வரும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த ஆர்டர்கள் கைக்கு வந்து சேரும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## புலம் பெயரிகளின் யுகத்தில் ஒரு தேசத்தைக்...

(20ம் பக்கத் தொடர்ச்சி) தொடர்ச்சியான இடையூடாட்டத் தளங்களை (collaborative corridors) ஸ்தாபிக்க வேண்டும். தாயகத்துக்கும் டயஸ்பொராவுக்கும் இடையிலே எந்தெந்த துறைகளில் இடையூடாட்டங்களை ஏற்படுத்தலாம் என்றும் சிந்திக்க வேண்டும். தாயகத்தை நோக்கிய மரபுரிமைச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்தலாம். சுற்றுலாப் பயணிகளாக மட்டும் தாயகத்துக்கு வரும் ஒரு நிலைமையை மாற்றி விடுமுறை காலங்களில் குறிப்பிட்ட சில மாதங்களுக்கு தாயகத்தில் தங்கி நின்று தேச நிர்மாணத்தில் எப்படிப் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தனக்குரிய துறை சார்ந்த பங்களிப்பைச் செய்யலாம் என்று சிந்திக்கலாம்.

அதாவது புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் தமிழ் மக்கள் கட்டியெழுப்பும் சமூக இடையூடாட்ட மையங்களானவை தாயகத்தில் தேசத்தை நிமாணிக்கும் நிகழ்ச்சிநிரலின் பிரிக்கப்படவியலாத பகுதிகளாக இணைத்துச் சிந்திக்கப்பட வேண்டும். ஏனென்றால் தாயகத்தில் தமிழ் மக்களுக்கு இன்னமும் விடுதலை கிடைக்கவில்லை.

## அநுர அரசும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை..

(27ம் பக்கத் தொடர்ச்சி) எல்லாம் சாதாரணமாக எந்த சட்டத்தின் கீழும் கைதுசெய்யப்பட வில்லை.எனவே அவர்களின் செயற்பாட்டிற்கும் ஒரு விடயமும் தமிழ் முஸ்லீம் மக்களின் கருத்திற்கு ஒரு விடயம் என கையாளப்படுவதும் மிக மோசமானது. மேலும் முஸ்லீம் இளைஞன் கைது அரசாங்கத்தின் இஸ்ரேல் தொடர்பான பாலஸ்தீனம் தொடர்பான நிலைப்பாட்டை கேள்விக்கு உட்படுத்துகின்றது.

## 2019ம் ஆண்டு பௌத்த மதகுருமார்கள்....

(17ம் பக்கத் தொடர்ச்சி) மகேந்திரன் திருவரங்கன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தேசிய நல்லிணக்கம், இனமத கலாச்சார அடிப்படையில் பாரபட்சமின்மை போன்ற வாக்குறுதிகளின் அடிப்படையில் ஆட்சிக்கு வந்ததால் அந்த அரசாங்கம் மக்களின் நிலங்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

அந்த நிலம் மக்களுடையது, அவர்களிடம் உறுதி உள்ளது, காணியின் உண்மையான சொந்தக்காரர்களிற்கு நிலங்களை கையளிப்பதன் மூலம் அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். மக்கள் தாங்கள் சிங்களவர்களிற்கோ அல்லது பௌத்தத்திற்கோ எதிரானவர்கள் இல்லை என்பதை தெளிவுபடுத்தியுள்ளனர், அவர்கள் தங்கள் நிலங்களை கோருகின்றனர் என அவர் தெரிவித்தார்.

தையிட்டி மாத்திரம் வடக்கு கிழக்கில் காணி உரிமைக்காக இடம் பெறும் போராட்டம் இல்லை, தொல்பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் வன வளங்களை பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில ,இராணுவத்தினரும் ,தொல் பொருள் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகாரசபை போன்ற அரசாங்க அமைப்புகளும் மக்களின் நிலங்களை பறித்து வருகின்றன என அவர் தெரிவித்தார்.

இவை அனைத்தும் இராணுவத்தினரின் உதவியுடன் இடம் பெறுகின்றது, அரசாங்கத்தின் உதவியுடன் இடம் பெறும் மேலாதிக்க நில அபகரிப்புகள் காரணமாக தமிழ் மக்கள் தங்கள் நிலங்களை இழந்துள்ளனர், ஆகவே இந்த பிரச்சினைக்கு தீர்வை காண வேண்டிய நிலங்களை இழந்தவர்களிற்கு நீதியை வழங்க வேண்டிய பொறுப்பு புதிய அரசாங்கத்திற்குள்ளது என அவர் தெரிவித்தார். பெப்ரவரி மாதம் இந்த விடயத்தை நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டிய தமிழ்தேசியமக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் இராணுவம் தொடர்ச்சியாக கிளர்ச்சி எதிர்ப்பு முறையில் செயற்படுகின்றது என குற்றம் சாட்டியதுடன், இராணுவம் தன்னை தமிழ் மக்களிற்கு எதிரான ஒரு தரப்பாக மாற்றியுள்ளது என்றார்.

## எம்.ஐ.17 ரக 4 ஹெலிகொப்டர்கள் பாதுகாப்பளிக்க இன்று இலங்கை செல்கிறார் இந்தியப் பிரதமர்!

(28ம் பக்கத் தொடர்ச்சி) ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவுடன் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதோடு இரு தரப்பு பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பிலும் கலந்து கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

இதன்போது எரிசக்தி, டிஜிட்டல் மயமாக்கல், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இந்தியாவுடனான கடன் மறு சீரமைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் ஆகியவை பரி மாறிக் கொள்ளப்படும்.

## பூசா சிறையில் கூரிய ஆயுதத்தால் தாக்கி தமிழ்க்கைதி உயிரிழப்பு!




காலி பூசா சிறைச்சாலையில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில் கைதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதி சக கைதி ஒருவரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. பாதிக்கப்பட்டவர் உடலில் 11 இடங்களில் கூரிய ஆயுதத்தினால் குத்தப்பட்ட காயங்கள் காரணமாக உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது இவ்வாறு உயிரிழந்தவர் 46 வயதுடைய நந்தகுமார் சிவானந்தா என அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்த சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிறையில் அண்மையில் நடந்த சோதனை அல்லது போதைப்பொருள் தொடர்பான மோதல் இந்த மரணத்துடன் தொடர்புடையதா என்று அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

*At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

*Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# ரஷ்ய ஜனாதிபதி புதினை முன்பு பாராட்டிய டிரம்ப் தற்போது கடும் கோபத்தில் இருப்பது ஏன்?

யுக்ரேனில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் வாரக் கணக்கில் ஈடுபட்டபிறகு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் மீது தான் `கடுங் கோபத்திலும்' `எரிச்சலிலும்' இருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

யுக்ரேன் அதிபர் ஸெலன்ஸ்கியின் நம்பகத் தன்மை குறித்து கடுமையாக பேசி வரும் ரஷ்ய அதிபர் புதினை விமர்சித்த டிரம்ப், ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கு 50வீ வரி விதிக்கப்படும் என மிரட்டியுள்ளார். என்பிசி செய்திகளுக்கு அளித்த நேர்காணலின் போது டிரம்ப் இக்கருத்தை தெரிவித்தார்.

புதிய தேர்தலை நடத்த ஐக்கிய நாடுகள் சபை அரசை நிறுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி கடந்த வாரம் பேசிய புதின், அதன் பிறகு அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கலாம் என கூறினார்.

புதின் மீதான தொனியில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை டிரம்பின் இந்த கருத்துக்கள் காட்டுகின்றன. கடந்த ஆறு வாரங்களில், பல்வேறு சலுகைகள் செய்யச் சொல்லி ஸெலன்ஸ்கியை கடுமையாக வலியுறுத்தி வந்தார் டிரம்ப்

யுக்ரேனின் அரிய தாதுக்களை அமெரிக்காவுடன் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தத்தில் இருந்து ``விலக நினைப்பதாக`` ஸெலன்ஸ்கி மீது ஞாயிற்றுக் கிழமை குற்றஞ் சாட்டிய டிரம்ப், அப்படி நடந்தால் `பெரிய, பெரிய பிரச்சனைகள் வரும்' என்று எச்சரித்தார்.



அதோடு புதினைப் புகழ்ந்த டிரம்ப், ரஷ்ய அதிபரின் கோரிக்கைகளில் பெருமளவை ஏற்றுக்கொண்டார். ஆனால் ஞாயிற்றுக்கிழமை டிரம்ப் வெளியிட்ட கருத்துக்கள் இந்த அணுகுமுறையில் இருந்து விடை பெற்றுக் கொள்வது போன்ற தோற்றத்தைத் தருகின்றன.

போர்நிறுத்த பேச்சுவார்த்தைகளை இழுத்தடிப்பதற்கான விளைவுகளை ரஷ்யா அனுபவிக்கும் என்று முதன் முறையாக அமெரிக்க மிரட்டியுள்ளது.

தங்களுடனான பத்து நிமிட தொலைபேசி நேர்காணலில், ஸெலன்ஸ்கியின் தலைமைத்துவம் பற்றிய நம்பகத் தன்மையை புதின் விமர்சித்த போது தான் கடுங்கோபமும், `எரிச்சலும்' கொண்டதாக டிரம்ப் தெரிவித்தார் என்று என்பிசி செய்திகள் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்பு யுக்ரேன் அதிபரை சர்வாதிகாரி என்றும், யுக்ரேனில் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் டிரம்ப் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

புதின் ஸெலன்ஸ்கியின் நம்பகத்தன்மை பற்றிப் பேச ஆரம்பித்த போது எனக்கு ரொம்பவே கோபமும், எரிச்சலும் வந்தது என்று சொல்லலாம். ஏனெனில் பேச்சுவார்த்தை சரியான திசையை நோக்கிச் செல்லவில்லை`` என டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

புதினைப் பற்றிப் பேசும் போது ரஷ்ய அரசுக்கு தனது கோபம் தெரியும் என்றும், அதோடு ரஷ்யத் தலைவருடன் தனக்கு `மிக நல்ல உறவு' இருப்பதாகவும், `அவர் சரியானதைச் செய்தால் இந்தக்கோபம் விரைவாகப் போய்விடும்' என்றும் டிரம்ப் கூறினார்.

ரஷ்யா போர் நிறுத்தத்துக்கு வரவில்லை என்றால், அது புதினின் தவறு என்று தான் நினைத்தால், ரஷ்யாவின் பொருளாதாரத்தை மேலும் குறி வைக்கப் போவதாக டிரம்ப் அச்சுறுத்தி உள்ளார்.

யுக்ரேனில் நடக்கும் தாக்குதலை நிறுத்துவதில் ரஷ்யாவும் நானும் ஒரு ஒப்பந்தம் செய்ய முடியா விட்டால், அது ரஷ்யாவின் தவறு என்று நான் நினைத்தால் அப்படி நடக்காது என்று நினைக்கிறேன்.. நான் ரஷ்யாவில் இருந்து வரும் எண்ணெய் மொத்தத்திற்கும் இரண்டாம் நிலை வரிகளை விதிக்கப் போகிறேன்' என்று அவர் கூறினார்.

அமெரிக்காவில் விற்கப்படும் எண்ணெய் மற்றும் பிற பொருட்களுக்கு 25வீ வரி, இரண்டாம் நிலை வரியாக விதிக்கப்படும்' என்றும் டிரம்ப் கூறினார். போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றால் ஒரே மாதத்தில் ரஷ்யா மீதான வரிகள் விதிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இரண்டாம் நிலை வரிகள் என்பது வேறொரு நாட்டோடு வணிகம் செய்யும் நாடுகள் மீதான தடைகள். ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்கும் நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்குள் நுழையும் பொருட்களுக்கு 50மூ வரை வரிவிதிப்பு இருக்கலாம். சீனாவும் இந்தியாவும் ரஷ்யாவிடம் இருந்து அதிகளவிலான எண்ணெயை வாங்குகின்றன.

`இந்தப் போரை மேலும் நீட்டிக்க ரஷ்யா தொடர்ந்து காரணங்களைத் தேடுகிறது' என்று ஸெலன்ஸ்கி சமூக ஊடகத்தில் எழுதியுள்ளார்.

2014 ஆம் ஆண்டு முதல் புதின் ஒரே விளையாட்டைத் தான் விளையாடுகிறார்' என்றார் ஸெலன்ஸ்கி. அப்போது கிரைமியாவை தன்னிச்சையாக இணைத்துக் கொண்டது ரஷ்யா.

இப்படி நடந்து கொள்வது அனைவருக்குமே ஆபத்தானது அமைதியை விரும்பும் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் அனைத்து உலகளாவிய நண்பர்களிடமிருந்தும் இதற்கு சரியான பதிலடி கொடுக்கப்படவேண்டும்`.

அமெரிக்க-யுக்ரேன் கனிம ஒப்பந்தம் குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த ஸெலன்ஸ்கி முயற்சிக்கிறார்



என தான் நினைப்பதாக டிரம்ப் கூறினார்.

அப்படி அவர் செய்தால் அவருக்குப் பல சிக்கல்கள் வரும் என்று ஏர் ஃபோர்ஸ் ஒன் விமானத்தில் செய்தியாளர்களிடம் கூறினார் டிரம்ப்.

ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தயாராக இருப்பதாக ஸெலன்ஸ்கி முன்பு கூறியிருந்தார். பிப்ரவரியில் இது கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வெள்ளை மாளிகையில் நடந்த இருவரின் சந்திப்பில் நடந்த வாய்ச்சண்டையால் இம்முயற்சி தடம் புரண்டது.

மேம்பட்ட பாதுகாப்பு உத்தரவாதங்களைப் பெறுவதற்காக ஸெலன்ஸ்கி இந்த ஒப்பந்தத்தை மாற்ற விரும்புவதாக ஞாயிற்றுக்கிழமை டிரம்ப் தெரிவித்தார்.



`அவர் நேட்டோவின் உறுப்பினராக இருக்க விரும்புகிறார். ஆனால் அவர் ஒரு போதும் நேட்டோ உறுப்பினராக இருக்கப் போவதில்லை. அதை அவரும் புரிந்து தான் வைத்திருக்கிறார்.'

விமானப் பயணத்தின் போது, டிரம்ப் புதினைப் பற்றிய தனது கருத்துக்களை மென்மையாக்கியது போலத் தோன்றியது. புதின் தனது வார்த்தையிலிருந்து பின்வாங்க மாட்டார் என்று நான் நினைக்கிறேன்.' என்று தெரிவித்தார்.

எனக்கு அவரை நெடுநாட்களாகத் தெரியும். எங்களுக்குள் எப்போதும் ஒத்துப் போயிருந்திருக்கிறது`.

பின்னர் இந்த வாரத்தில் தான் புதினுடன் பேசப் போவதாக டிரம்ப் கூறினார்.

அதிபர் ஸெலன்ஸ்கி தனது பதவிக் காலம் முடிந்த பிறகும் ஆட்சியில் நீடித்து வருவதால் தற்போதைய யுக்ரேன் ஆட்சியாளர்கள் சட்டத்துக்குப் புறம்பானவர்கள் என்றும் பேச்சுவார்த்தைக்கான சரியான கூட்டாளி அல்ல என்றும் ரஷ்யா கூறுகிறது.

ஆனால் ராணுவச் சட்டம் நடைமுறையில் இருப்பதாலும், போரால் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக தேர்தல் தள்ளி வைக்கப்பட்டுள்ளதாலும் ஸெலன்ஸ்கி பதவியில் இருக்கிறார்.

ஐந்து மில்லியனுக்கும் அதிகமான யுக்ரேனிய குடிமக்கள் வேறு நாடுகளில் இடம் பெயர்ந்துள்ளதாலும், பல லட்சக்கணக்கானோர் வீட்டில் இருந்து வெளியேறி போர் முனையில் சண்டையிட்டுக் கொண்டிருப்பதாலும் ஒரு நியாயமான, முழுமையான தேர்தலை நடத்துவது கிட்டத்தட்ட சாத்தியமற்ற ஒன்று.

ரஷ்யா பிப்ரவரி 2022 இல் அதன் அண்டை நாடான யுக்ரேன் மீது முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கியது. தற்போது யுக்ரேன் பகுதியில் சுமார் 20வீத ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ளது.

பிபிசி ரஷ்ய சேவை, சுயாதீன ஊடகக் குழுவான மீடியாஸோனா மற்றும் போர் தொடங்கியதிலிருந்து இறப்புகளை கணக்கிட்டு வரும் தன்னார்வலர்கள் ஆகியோரிடம் இருக்கும் தரவுகளைப் பகுப்பாய்வு செய்ததில், ரஷ்ய இராணுவத்திற்காகப் போர் புரிந்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் இப்போது வரை மரணித்துள்ளனர்.

போரில் 43,0000 யுக்ரேன் வீரர்கள் மற்றும் அதிகாரிகள் உயிரிழந்ததாக யுக்ரேன் அதிபர் ஸெலன்ஸ்கி டிசம்பர் 2024 இல் கூறினார்

மேற்கத்திய ஆய்வாளர்கள் இந்த எண்ணிக்கை ஒரு குறைவான மதிப்பீடு என்று நம்பு கிறார்கள்.

நன்றி:- பிபிசி

# படைத்தரப்பைப் பாதுகாப்பதில் அநுரவின் அரசும் மும்முரம்! சுமந்திரன் - விக்கினேஸ்வரன் - சுரேஷ் என்ன சொல்கிறார்கள்?

இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது நடந்த கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிர யோகங்களுக்குப் பொறுப்பான படை களின் முன்னாள் தளபதிகள் மற்றும் துணை இராணுவக் குழுவின் தலைவர் உள்ளிட்டவர்களுக்கு பிரித்தானியா வினால் விதிக்கப்பட்டுள்ள தடைகளை வரவேற்பதாக அறிவித்துள்ள தமிழ்த் தலைவர்கள் தற்போது பதவியில் உள்ள அநுர அரசாங்கமும் குற்ற மிழைத்த படையினரைப் பாதுகாப்பதில் மும்முரமாக இருக்கின்றனர் என்றும் குற்றம் சாட்டியுள்ளனர்.

பிரித்தானிய அரசாங்கமானது பாதுகாப்பு படைகளின் முன்னாள் பிரதானியும், இராணுவத்தின் முன்னாள் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா, கடற்படை முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொட இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜெகத் ஜெயசூ ரிய மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயகத்தின் இராணுவத் தளபதியும் பின்னர் அவ்வியகத்துக்கு எதிராக இலங்கை இராணுவத்தின் சார்பாகச் செயற்படும் துணை இராணுவப் படையான 'கருணா குழுவை வழி நடத்தியவருமான 'கருணா அம்மான்' என்று அறியப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் மீது தடைகளை விதித்துள்ளமை தொடர்பிலும், அத்தடைகள் குறித்து இலங்கை அரசாங்கத்தின் பிரதிபலிப்பு தொடர்பிலும் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தனர். அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் வருமாறு,



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளரும், ஊடகப் பேச்சாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில், பிரித்தானியாவின் தடை அறிவிப்பை நாங்கள் வரவேற்கின்றோம். பிரித்தானியா தனது விசாரணைகளின் அடிப்படையில் தங்களது சட்டங்களுக்கு அமைவாக பாரிய குற்றங்களை இழைத்தவர்களுக்கே தடை அறிவிப்பைச் செய்துள்ளது. அவ்வாறான நிலையில் அந்நாட்டு உயர்ஸ்தானிகரை அழைத்து வெளிவிவகார அமைச்சர் கண்டித்திருப்பதும், குற்றச் சாட்டுக்களை நிராகரித்திருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதவொன்றாகும்.

முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவே படையினர் மீது விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.



ஆனால் மனித உரிமைகள் மீறப்பட்டதை நன்கு அறிந்துள்ள அரசாங்கம் எந்தவொரு விசாரணைகளையும் முன்னெடுக்கப் போவதில்லை என்று அறிவித்துள்ளமையானது அரசாங்கத்தின் தற்துணிவின்மையையே காண்பிக்கிறது. அது மட்டுமன்றி ராஜபக்ஷக்களின் பதையிலேயே அநுர அரசாங்கமும் பயணிக்கின்றது என்பது மிகத் தெளிவாகிறது என்றார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிக்கையில் பிரித்தானியா போர் நிறைவுக்கு வந்து 16 ஆண்டுகளின் பின்னர் அறிவித்துள்ள கடுமையான தடைகளை வரவேற்பதோடு அத்தடைகள் இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்துவதாக உள்ளது. அதுமட்டுமன்றி, போரின் போது மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன தவறுகளுக்கு காரணமானவர்கள் படைகளில் உள்ளனர் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு போர் உக்கிரமாக நடைபெற்று நிறைவுக்கு வந்த தருணத்தில் நான் அரசியல்வாதியாக இருக்கவில்லை. நீத்துறை சார்ந்தவராகவே இருந்தேன். அக்காலத்தில் எனக்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம், வெள்ளைக்கொடிகளுடன் சரணடைந்தவர்களை அடுத்து என்ன செய்ய வேண்டும் என்ற கட்டளைகள் பிறப்பித்தவர்கள் உள்ளனர். ஆகவே நேரடியாக குற்றமிழைத்தவர்களுக்கு எதிரான தடைகள் விதிப்பதோடு அதற்கு கட்டளை பிறப்பித்தவர்களையும் அடையாளப்படுத்தி அவர்கள்



மீதும் தடைகள் நீடிக்கப்பட வேண்டும். அதற்கும் பிரித்தானிய அரசாங்கம் ஆவணை செய்ய வேண்டும் என்பது எனது கோரிக்கையாகும் என்றார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும், ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்

எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் குற்றங்களை இழைத்த படைகளை பாதுகாப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் பிரித்தானியாவின் தடை அறிவிப்பு தொடர்பில் அந்நாட்டு உயர்ஸ்தானிகரை அழைத்து வெளிவிவகார அமைச்சர் காட்டமான கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்தக் கருத்துக்களின் உள்ளாந்த அர்த்தம் படைகள் மீது குற்றம் சுமத்த முடியாது, அவர்கள் இழைத்த மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என்பதாகவே உள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் தாய்க் கட்சியான ஜே.வி.பி.க்கு படைகளினால் இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் நிறைந்த அனுபவம் இருக்கின்றது. எனினும், அத்தகைய தரப்பானது தற்போது படைகளை பாதுகாக்கும் முடிவில் தான் இருக்கின்றது என்பது உறுதியாகின்றது.

ஆகவே, பிரித்தானியா உள்ளிட்ட சர்வதேச தரப்பினர், இலங்கையின் பொறுப்புக்கூறலைச் செய்வதற்கான இத்தகைய தடைகளை தொடர்ந்தும் அறிவிக்க வேண்டும். உலக அரங்கில் இலங்கை பொறுப்புக்கூறலுக்கு தயாரில்லாத நாடு என்பதையும் ஆட்சியாளர்களுக்கு அதற்கான இயலுமை இல்லை என்பதையும் அம்பலப்படுத்த முடியும் என்றார்.

# நீதிக்கான போராட்டத்தில் சக்தி வாய்ந்த அறிவிப்பு! பிரித்தானிய தடை குறித்து ஜஸ்மின் சூக்கா தெரிவிப்பு!

இலங்கையின் படைத்தளபதிகள் மற்றும் துணை இராணுவக்குழுவின் தலைவர் ஆகியோர் மீதான பிரித்தானியாவின் தடை அறிவிப்பானது நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டதாக இருப்பதோடு நீதிக்கான போராட்டத்தில் சக்தி வாய்ந்த படியாகும் என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்தார்.

பிரித்தானியாவானது, பாதுகாப்பு படைகளின் முன்னாள் பிரதானியும், இராணுவத்தின் முன்னாள் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா, கடற்படை முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொட இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜெகத் ஜெயசூரிய மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் இராணுவத்தளபதியும் பின்னர் அவ்வியகத்துக்கு எதிராக இலங்கை இராணுவத்தின் சார்பாகச் செயற்படும் துணை இராணுவப் படையான கருணா குழு'வை வழி நடத்தியவருமான கருணா அம்மான் என்று அறியப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் மீது தடைகளை விதித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, பிரித்தானியா போர்க்குற்றவாளிகளை மையப்படுத்தியதாக நான்கு நபர்கள் மீது தடை விதித்துள்ளமையானது வரவேற்கத்தக்கது என்பதோடு நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டதாகும். பிரித்தானியா எடுத்துள்ள தடை நடவடிக்கையானது பாதிக்கப்பட்டவர்களின் வலியை அங்கீகரிப்பதாக உள்ளது. அத்துடன் அந்நாட்டின் துணிச்சலான பிரதிபலிப்புக்கு ஒரு சான்றாகவும் உள்ளது.




பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாகவும் அவர்களின் இடைவிடாத போராட்டமும் போர்க்குற்றவாளிகள் பொறுப்புக்கூறலை மீற முடியாது என்பதையும், தாமதமானாலும் நீதி இன்னும் சாத்தியமாகும் என்ற தெளிவான செய்தியை பிரித்தானியாவின் அறிவிப்பு வெளிப்படுத்தி நிற்கிறது. அத்துடன் இலங்கையின் இறுதிப் போரின் போதும் அதற்கு முன்னதான காலத்திலும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் உட்பட போர்க் குற்றங்களை செய்தவர்களின் பட்டியல் நீண்டது. முதற்கட்டமாக நால்வரின் மீது தடைகள் விதிக்கப்படுவதற்கு எதிர்க்கப்பட்ட தீர்மானம் போன்று ஏனையவர்களின் விடயங்களிலும் வெளிப் படுத்தப்பட வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும் என்றார்.

இதேவேளை போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத் தளபதிகளுக்கு பிரித்தானியா பயணத் தடை விதித்துள்ளதை நாம் வரவேற்பதோடு சில முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இவ்வாறு தடைகள் விதிக்கப்பட வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது. தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் இலங்கை அரசானது நீண்டகாலமாக பொறுப்புக்கூறலில் இருந்து தவறியுள்ளது. இதனால் நாம் சர்வதேச நீதிகோரி தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

இவ்வாறு தடை விதிக்க படவேண்டிய இன்னும் பல இராணுவத்தினர் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் உள்ளனர். அவர்கள் மீதும் இவ்வாறு தடைகளை விதிக்க வேண்டும் என்றனர்.


VIBRANT HOSPITALIT GROUP
தமிலோசை வழங்கும்
Canada Tamil Music Festival
இசைக் குயில் 2025
25 YEARS
APRIL
SATURDAY
12
2025
3 PM ONWARDS
ADMIT ONE
ENTRANCE
VIP
TICKET $20
VIP TICKETS
DURHAM CONVENTION CENTER
630 BRCK CRESCENT AJAX, ON L1Z 1C9 | 416 556 3219
Announcers
MUSICAL BAND
NATCHATHRAA MUSIC GROUP

# அநுர அரசும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை கைவிடாது!

## முஸ்லிம் இளைஞர் விவகாரத்தில் தெரிகிறது என்கிறார் ரஜீவ்காந்

ருஸ்டி என்ற இளைஞனை கைது செய்த பின்னர் அரசாங்கம் அவருக்கு எதிரான சாட்சியங்களை தேடியலைகின்றது போல தோன்றுகின்றது என தெரிவித்துள்ள மக்கள் போராட்ட முன்னணியின் ராஜ்குமார் ரஜீவ்காந் முஸ்லீம் இளைஞன் கைது




அரசாங்கத்தின் இஸ்ரேல் தொடர்பான பாலஸ்தீனம் தொடர்பான நிலைப்பாட்டை கேள்விக்கு உட்படுத்துகின்றது என தெரிவித்துள்ளார் செய்தியாளர்மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

பயங்கரவாத தடைச்சட்டம் என்பது இலங்கையில் சமான்ய மக்களின் கருத்துசுதந்திரத்தை தடைசெய்து அரசாங்கம் சந்தேகப்படுபவர்களை குற்றவாளிகளாக்கி தண்டனைகளை வழங்கிக்கொண்டிருந்த சட்டம் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

இந்த ருஸ்டி என்ற நபரின் கைது, அதன் பின்னர் அரசு வெளியிட்ட ஊடக அறிக்கை மிகவும் பாரதூரமான விடயங்களை எங்களிற்கு சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக அரசாங்கம் அவரை கைதுசெய்த பின்னர் அவருக்கான சாட்சியங்களை தேடி அலைவது போல எங்களிற்கு தோன்றுகின்றது.

அரசாங்கத்திடம் போதிய சாட்சியங்கள் இருந்தால் அவரைநீதிமன்றத்தில் சமர்ப்பித்து அவரை தடுத்து வைப்பதற்கான ஆணையை நீதிமன்றத்தின் ஊடாக பெறமுடியும், அப்போது தான் அவராலும் தான் குற்றம் சாட்டப்பட்டவர் இல்லை என்பதற்கான ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கமுடியும்.

எனவே ஒரு தரப்பே யார் குற்றவாளி என தீர்மானிக்கின்ற இந்த சட்டத்தினால் இத்தனை காலம் எத்தனை பேர் பாதிக்கப்பட்டார்கள் என்பதை நீங்கள் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும், குறிப்பாக முஸ்லீம் சமூகத்தை எடுத்துக் கொண்டால், வைத்தியர் ஷாபி அவர்கள் கட்டாய கருத்தடை செய்கின்றார் அவர் ஒரு தீவிரவாதி என தெரிவித்து அவரை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்தார்கள், இந்த கைதின் போது விமல்வீரவன்ச உதயகம்மன்பில போன்ற பலரும் பல ஊடகங்களும், அவர் தீவிரவாதி என அனைத்து தரப்பும் குற்றம் சாட்டியிருந்தது அதன் பின்னர் அவர் குற்றம் சாட்டப்பட்ட அனைத்து விடயங்களில் இருந்தும் அவர் விடுவிக்கப்பட்டார். ஆனால் எத்தனை ஆண்டுகள் அவரது வாழ்க்கை சிறையில் கழிந்தது அவருக்கு மாத்திரமல்ல அவரது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் இந்த விடயத்தால் ஒரு பாரிய சிக்கல் ஏற்பட்டது. பாரிய இன முறுகலை இது தோற்றுவித்தது, எனவே அவசரப்பட்டு தீவிரவாதி என முத்திரை குத்துவதாலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்வதாலும் இன முறுகல்கள் இங்கு அதிகரிக்கின்றன என்பதை அரசாங்கம் இங்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இதேபோல ஹிஜாஸ் ஹிஸ்புல்லா என்ற சட்டத்தரணி சாதாரண தொண்டு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காரணத்தினால் பயங்கரவாத நிறுவனங்களில் இருந்து பணம் வாங்குகின்றார் என்ற அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார்.

அவரின் கைதின் பின்னர் கட்டார் சரிட்டி என்கின்ற தொண்டு நிறுவனம் தீவிரவாத நிறுவனமாக பட்டியல் இடப்படுகின்றது. பின்னர் ஒரு வருடத்தின் பின்னர் அது பயங்கரவாத அமைப்பல்ல என அரசாங்கம் நீக்குகின்றது.பின்னர் இவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து இவர் விடுவிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுகின்றார்.

இப்படியே தீவிரவாதி என்பதும் இல்லை என்பதும் குறிப்பிட்ட காலப்பகுதியிலே அவர்களுடைய வாழ்க்கை, நீதிமன்றத்திலும் சிறைச்சாலைகளிலும் கழிவதும் சமூக ரீதியான பிரச்சினைகள் ஏற்படுவதும், இந்த வரலாறுகளை நாங்கள் அவதானித்துக்கொள்ள வேண்டும்.

இது போல ரம்சிராசீக் உட்பட பல முஸ்லீம் இளைஞர்கள் குற்றங்கள் எதிலும் ஈடுபடாமல் குற்றவாளிகள் ஆக்கப்பட்டு தண்டிக்கப்பட்டிருந்தார்கள்.

இது போல ஆருரன் உட்பட பல அரசியல்கைதிகள் 15 வருடங்களின் பின்னர் குற்றமற்றவர்கள் என நிரூபிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். எனவே குற்றமற்றவர்களிற்கு எவ்வாறு தண்டனையை வழங்க முடியும் என்ற விடயம் ஊடாகாவே இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தினை நாங்கள் அணுக வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டம் இந்த நாட்டில் இருக்கக் கூடாது என்பதை நாங்கள் மீண்டும்மீண்டும் வலியுறுத்துவதற்கான ஒரே காரணம், குற்றவாளிகள் தப்பித்தால் கூட நிரபராதிகள் தண்டனைக்கு உள்ளாக கூடாது என்பதே.

இன்னொரு விடயத்தை நீங்கள் அவதானித்து பார்த்தால் தெரியும் ஞான சார தேரர் விமல் வீரவன்ச உதயகம்மன்பில சுமணதேரர் போன்றவர்கள் மிக மோசமான இனவாதத்தினை கக்கி சமூகங்களிற்கு இடையில் குழப்பங்களை ஏற்படுத்தி சீர்குலைவுகளை ஏற்படுத்தி, சில நேரங்களில் கலவரங்களை உண்டு பண்ணக் கூடிய பேச்சுக்களை பேசி கொலை செய்வேன் என்ற பேச்சுக்களை பேசி (22ம் பக்கம் பார்க்க)

# மோடியின் இலங்கை விஜயத்தின் முக்கியத்துவமும் இராஜ தந்திரமும்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏப்ரல் 4 ஆம் திகதி இன்று வெள்ளிக்கிழமை இலங்கையில் தரையிறங்க உள்ளார். வருகையின் அடுத்த இரண்டு நாட்களில் வர்த்தகம், சுகாதாரம், கல்வி, எரிசக்தி மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல ஒப்பந்தங்கள் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் அவர் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செய்தி அறிக்கைகளின்படி மொத்தம் ஆறு ஒப்பந்தங்களை சுட்டிக காட்டுகின்றன. இவை மின் கட்டமைப்பு இணைப்பு முதல் சுகாதாரம் மற்றும் கல்வி ஒத்துழைப்பு வரை உள்ளன. அவற்றில் மிக முக்கியமானது இலங்கையும் இந்தியாவும் கையெழுத்திட்ட முதல் பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று கூறப்படுகிறது.

இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜித ஹெரத்தின் கூற்றுப்படி, ஒப்பந்தத்திற்கான அடிப்படை கட்டமைப்பு கடந்த டிசம்பரில் வரைவு செய்யப்பட்டது. தற்போது முற்றிலும் இரத்து செய்யப்பட்ட அதானி காற்றாலை மின் திட்டம் குறித்தும் விவாதம் நடைபெற்று வருகிறது.

உண்மையில் மின்சாரம் மற்றும் எரிசக்தி, அவரது சுற்றுப்பயணத்தின் போது பாதுகாப்பைப் போலவே முன்னுரிமை பெறும். இதனிடையே, இந்தியாவைப் பொறுத்தவரை, தற்போது முதன்மையான சவால், பிராந்தியத்தின் மாறிவரும் புவிசார் அரசியலுக்கு பதிலளிப்பதும், இலங்கையில் இந்தியாவின் செல்வாக்கு குறித்த உள்நாட்டு கருத்துக்களை ஏற்றுக்கொள்வதும் ஆகும்.

மோடியின் இலங்கை வருகை இந்தோ-பசுபிக் பகுதியில் அமெரிக்க அதிகாரப் போக்குகளில் ஏற்பட்ட மாற்றத்துடன் ஒத்துப்போகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வொஷிங்டன் பிராந்தியத்தில் அதன் புவிசார் மூலோபாய நோக்கங்களை இரட்டிப்பாக்கியுள்ள நிலையில், இலங்கை போன்ற நாடுகளில் அதன் மென்மையான அதிகார தடத்தை குறைத்துள்ளது.இந்தியாவும் சீனாவும் இதை அறிந்திருக்கின்றன.

உண்மையில், மியான்மரில் சமீபத்தில் ஏற்பட்ட பூகம்பத்திற்குப் பின்னர், டெல்லி மற்றும் பீஜிங் இரண்டும் விரைவாக சம்பவ இடத்திற்கு வந்தன. மனிதாபிமான உதவியைப் பொறுத்தவரை, இரண்டும் அமெரிக்காவை விஞ்ச முடிந்தது.

புது டெல்லியைப் பொறுத்தவரை ராஜதந்திர விளையாட்டில் ஒரு போட்டி இருக்க வேண்டும். இருப்பினும், துணைக்கண்டத்தில் உள்ள அதன் பல அண்டை நாடுகளுடன் இந்தியா ஒரு பின்னடைவைச் சந்தித்துள்ளது. மிகச் சமீபத்திய உதாரணம் பங்களாதேஷ். இந்த விஷயத்தில் இலங்கை ஒரு வேறுபாட்டை வழங்குகிறது.

ஏனெனில் நாடு பொருளாதார மீட்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது மற்றும் இந்தியாவுடனான இலங்கையின் உறவுகள் எப்போதும் இலங்கையின் வளர்ச்சி அபிலாஷைகளுக்கு இந்தியாவின் முக்கியத்துவத்தை ஒப்புக்கொள்வதன் அடிப்படையில் அமைந்திருப்பதால். இதனால் தான் டெல்லியுடனான அதன் ராஜதந்திர உறவுகளில் இலங்கை அடிப்படையில் பின்வாங்கவில்லை.

சீனாவுடன் ஒப்பிடுகையில் இந்தியாவுடனான இலங்கையின் அதிகாரப்பூர்வ தொடர்புகள், இந்தியாவைப் பற்றிய அடிமட்ட மக்களின் கருத்துக்களுடன் மிகவும் வேறுபட்டவை. இந்தப் பின்னணியில் தான், 2019க்குப் பின்னர் மோடியின் முதல் இலங்கை வருகையைப் பார்த்து பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

இந்திய அரசாங்கம் இந்தப் பயணத்தை அறிவித்ததிலிருந்து, இலங்கை ஊடகங்களில் இந்தியாவுடன் ஒருங்கிணைப்பதன் நன்மைகள் மற்றும் ஆபத்துகள் குறித்து ஏராளமான கருத்துகள் மற்றும் விமர்சனங்கள் வந்துள்ளன. வெளிப்படையாக நம்பிக்கை கொண்டவர்கள் முதல் இடைவிடாமல் விமர்சிப்பவர்கள் வரை.

சிலர் இந்தியாவை இலங்கையின் நாகரிக பங்காளி அல்லது இரட்டையர் என்று சித்தரித்தாலும், மற்றவர்கள் நாட்டிலும் பிராந்தியத்திலும் அதன் நவகாலனித்துவ லட்சியங்களாகக் கருதுவதை சுட்டிக் காட்டுகின்றனர். ஆயினும் கூட பிரதமர் மோடியின் வருகையைப் பற்றிய கருத்தை இரு தரப்பினரும் தவற விடுகிறார்கள்: இது தொடர்ச்சியைப் பராமரிப்பதில் அக்கறை கொண்டுள்ளது.

இரண்டு அண்டை நாடுகளுக்கு இடையேயான விஷயங்கள் எப்படி இருக்கின்றன, எரிசக்தி அல்லது பாதுகாப்பு ஒத்துழைப்பு மூலம் இருதரப்பு உறவுகளில் அடுத்த கட்டத்திற்கான மேடை அமைப்பதில் அக்கறை கொண்டுள்ளது







# வடபகுதியில் சிறுவர் இல்லங்களில் சேர்ப்பதற்காக அனுமதி கோரும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!



சிறுவர் இல்லங்களில் சேர்ப்பதற்காக அனுமதி கோரும் சிறுவர்களின் எண்ணிக்கை வடக்கில் அதிகரித்துச் செல்வதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் யுனிசெப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்து கள நிலைமைகளை ஆய்வு செய்யும் யுனிசெப் அமைப்பின் பிரதிநிதிகள் குழு வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் 02 ஏப்ரல் 2025 புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது ஆளுநரிடம் யுனிசெப் அமைப்பு முன்னெடுத்துள்ள திட்டங்கள் தொடர்பாகவும் தமது கள நிலைமை ஆய்வு தொடர்பாகவும் விளக்கமளித்தனர். இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

1991ஆம் ஆண்டு உதவி அரசாங்க அதிபராக தான் பதவியேற்ற காலத்திலிருந்து யுனிசெப் அமைப்பு பல்வேறு வகையான உதவிகளை எமது மக்களுக்குச் செய்து வருகின்றது. அதற்கான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வடக்கில் சிறுவர் துஷ்பிரயோகம், இளவயது கர்ப்பம் என்பன முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளன. மேலும் வடக்கு மாகாணம் தற்போது புதிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. பாடசாலை இடைவிலகல்கள் அதிகரித்துள்ளன. சிறுவர் இல்லங்களுக்கு சிறுவர்களை சேர்க்கும் போக்கு அதிகரித்துச் செல்கின்றது. இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்பால் ஏற்பட்ட வறுமை நிலைமை ஒரு காரணமாக உள்ளபோதும், பெற்றோர் மறுமணம் செய்வதால்தான் பெரியளவு பாதிப்பு ஏற்படுகின்றது. சிறுவர் இல்லங்களில் சிறுவர்களை இணைப்பதை ஊக்குவிக்க வேண்டாம் என அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது. ஆனால் சிறுவர் இல்லங்களை நோக்கி வருபவர்களை இணைக்காமல் விட்டாலும், பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. குறிப்பாக சிறுவர் துஷ்பிரயோகத்துக்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கின்றன. எனவே இது எமக்கு சிக்கலான நிலைமையாக உள்ளது என ஆளுநர் சுட்டிக் காட்டிக் காட்டினார்.

இந்தச் சந்திப்பில் யுனிசெப்பின் சிறுவர் பாதுகாப்பு தலைமை அதிகாரி ரியோனா அஸ்லான்சிவிலுடன் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளும் பங்கேற்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# எம்.ஐ.17 ரக 4 ஹெலிகொப்டர்கள் பாதுகாப்பளிக்க இன்று இலங்கை செல்கிறார் இந்தியப் பிரதமர்!



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி MI 17 வகை 4 ஹெலிகொப்டர்கள் பாதுகாப்பளிக்க 40 இந்திய விமானப்படை வீரர்களின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று வெள்ளிக்கிழமை மாலை இலங்கைக்கு செல்கின்றார்.

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அழைப்பின் பேரில் அவர் இந்த விஜயத்தை மேற்கொள்கின்றார். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான 'நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்துக்கான உறுதிப்பாடு' என்ற எண்ணக் கருவை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இந்த விஜயத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் உள்ளிட்ட உயர் மட்ட இந்தியக் குழுவும் இணையவுள்ளது.

இந்தியப் பிரதமருக்கான உத்தியோகபூர்வ வரவேற்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை கொழும்பில் உள்ள சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி(22ம் பக்கம் பார்க்க)



# உலகின் பெரும் செல்வந்தர் பட்டியலில் முதலிடத்தில் எலோன்மஸ்க்! இரண்டாவது மார்க் சுக்கர்பேர்க்!

அமெரிக்காவின் பிரபல சஞ்சிகையான ஃபோர்ப்ஸின் 2025ஆம் ஆண்டின் பெரும் செல்வந்தர் பட்டியலை கடந்த 01 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை யன்று வெளியிடப்பட்டது.

இந்த பட்டியலில், எலோன் மஸ்க் மீண்டும் முதலிடம் பெற்றுள்ளார். கடந்த சில நாட்களாகவே, நிதி தொடர்பான விடயங்களில் ட்ரம்புடன் சேர்ந்து பல விமர்சனங்களுக்கு முகங் கொடுத்திருந்த போதும், உலக செல் வந்தர் பட்டியலில், மீண்டும் அவர் முதலிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

1987ஆம் ஆண்டு முதல் வெளியாகி வரும் இப்பட்டியல் இவ்வருடத்து டன் 39ஆவது வருடத்தை எட்டி யுள்ளது. இதில், 206 செல்வந்தர்கள் குறித்த தகவல்கள் அடங்கியுள்ளன.

சிறந்த சொத்து மதிப்பைக் கொண்ட 15 நபர்கள் இப்பட்டியலில் அடங்கி யுள்ளனர். இது கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில், மிகவும் அதிகமான தொகையாகும். குறிப்பாக இவர்களின் மொத்த சொத்து மதிப்பு, 16.1 ட்ரில்லி யன் அமெரிக்க டொலர்கள் ஆகும் .

மேலும் டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ்ஸின் தலைமை நிர்வாக அதி காரியும், எக்ஸ் சமூகதளத்தின் உரிமை யாளருமான எலோன் மஸ்க்கின் சொத்து மதிப்பு 75 வீதம் அதிகரித்து, 342 பில்லியன் அமெரிக்க டொலர்களை அடைந்துள்ளது.

இந்நிலையில் 300 பில்லியன் அமெரிக்க டொலர்களை அடைந்த முதலாவது நபர் என்ற பெருமையையும் எலோன் மஸ்க் பெற்றுள்ளார். ஃபோர்ப்ஸில் இடம் பெற்றுள்ள முதல் பத்து செல் வந்தர்கள் தொடர்பான தகவல்களை கீழே காணலாம்.

1. எலோன் மஸ்க் (Elon Musk) – வயது 53 — அமெரிக்கா சொத்து மதிப்பு 342 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

ஸ்பேஸ்எக்ஸ், டெஸ்லா மோட்டார்ஸ் உட்பட 7 நிறுவனங்களுக்கு சொந்தக் காரரான எலோன் மஸ்க், இப்பட்டிய லில் முதலிடம் பெற்றுள்ளார்.



2. மார்க் சுக்கர்பேர்க் (Mark Zucker berg) வயது40 அமெரிக்கா சொத்து மதிப்பு – 216 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

2004ஆம் ஆண்டு, 19ஆவது வயதில், மார்க் சுக்கர்பேர்க் தன்னுடைய நண்பர் களுடன் சேர்ந்து 'பேஸ் புக்' சமூக வலைதளத்தை உருவாக்கினார். இதன் மூலம் அவர் உலக பிரசித்தி பெற்ற துடன்.உலகின் பெரும் செல்வந்தர் பட்டியலிலும் இணைந்தார்.

3. ஜெவ்ப் பெஸோஸ் (Jeff Bezos) – வயது 61 அமெரிக்கா சொத்து மதிப்பு 216 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

உலக செல்வந்தர் பட்டியலில் மூன்றா வது இடம் பிடித்துள்ள ஜெவ்ப் பெஸோஸ், பிரபல வணிக நிறுவன மான, அமேஸோனின் நிறுவனர் ஆவார்.

4. லேரி எலிஸன் (Larry Ellison) – வயது 80 அமெரிக்கா சொத்து மதிப்பு 192 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

ஒரக்கிள் நிறுவனத்தின் இணை நிறு வனரும், நிர்வாகத் தலைவரும், தலைமை தொழில்நுட்ப அதிகாரியு மான லேரி எலிஸன் இந்த பட்டியலில் நான்காம் இடத்தைப் பெற்றுள்ளார்.

5. பெர்னார்ட் அர்னோல்ட் (Bernard Arnault) வயது 76 பிரான்ஸ் சொத்து மதிப்பு 178 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

கடந்த 2023ஆம் ஆண்டு, ஃபோர்ப் ஸின் உலக செல்வந்தர் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்த பெர்னாட் அர்னோல்ட் இந்த வருடம் 5ஆம் இடத்துக்கு பின் தள்ளப்பட்டுள்ளார். பிரபல LVMH நிறுவனத்தின் தலை வரான இவரின் அன்றைய சொத்து மதிப்பு 211 பில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 178 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்து ள்ளமை குறிப்பிடத்தக்கது.

6. வாரன் பஃபெட் (Warren Buffett) –



வயது 94 அமெரிக்கா சொத்து மதிப்பு 154 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

இப்பட்டியலில் 6ஆம் இடத்தைப் பெற்றுள்ள வாரன் பஃபெட், உலகி லேயே மிகவும் வெற்றிகரமான முதலீட்டாளர்களுள் ஒருவராக அறியப் படுகின்றார். "Oracle of Omaha" நிறுவனத்தின் அதிகமான பங்குகளைக் கொண்டுள்ள இவர், அந்நிறுவனத்தின் நிர்வாக அதிகாரியாய் விளங்குகின்றார். மேலும், 2008ஆம் ஆண்டு பட்டியலில் இவர் முதலிடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

07. லேரி பேஜ் (Larry Page) – வயது 52 அமெரிக்கா சொத்து மதிப்பு 144 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

கூகுள் நிறுவனத்தின் நிறுவனர்களில் ஒருவரான லேரி பேஜ் தான், கூகுள் நிறுவனத்துக்கு அடித்தளமிட்டவர் என்று கூறப்படுகின்றது. இருப்பினும் அவர், கடந்த 2019ஆம் அந்நிறுவனத் திலிருந்து விலகிய நிலையில், சில வருடங்களாக இவர் பற்றி பெரியள வில் பேசப்படாமல் இருந்தது. இந் நிலையில், இப்பட்டியலில் இவருக்கு 07 ஆம் இடம் கிடைத்துள்ளது.

08. செர்ஜி ப்ரின் (Sergey Brin) வயது 51 அமெரிக்கா சொத்து மதிப்பு 138 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

கூகுளின் இணை நிறுவனர்களில் ஒருவரான செர்ஜி ப்ரினுக்கு இப்பட்டி யலில் 8ஆம் இடம் கிடைத்துள்ளது. அல்பாபெட்டின் தலைவர் பதவியில் இருந்த செர்ஜி, கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இப்பதவியில் இருந்து விலகினார் என்பது குறிப்பிட த்தக்கது.

09. அமன்சியோ ஒர்டேகா (Amancio Ortega) வயது 89 – ஸ்பெயின் சொத்து மதிப்பு 124 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

கடந்த 2023ஆம் ஆண்டு, இப்பட்டி யலில் 14ஆவது இடத்தைப் பெற்றிரு ந்த அமன்சியோ ஒர்டேகா, இந்த வருடம் 9ஆவது இடத்தைப் பெற்று ள்ளார். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த இவர், ஒரு சில்லறை விற்பனை தொழி லதிபர் என்பது குறிப்பிடத்தக்கது.

10. ஸ்டீவ் பல்மர் (Steve Ballmer) வயது 69 அமெரிக்கா சொத்து மதிப்பு 118 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

ஸ்டீவர் பல்மர், அமெரிக்க தொழில் நுட்ப வணிக நிறுவனமான மைக்ரோ சொப்ட்டின் முதன்மை செயல் அதி காரியாவார். இந்நிறுவனத்தின் ஆரம்ப காலங்களில் சாதாரண ஊழியராக பணியாற்றி வந்த இவர், பின்னர் அதே நிறுவனத்தின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# பென்குயின்கள் மாத்திரம் வசிக்கும் தீவுக்கும் வரி விதித்த ட்ரம்ப்

அமெரிக்கா தனது நாட்டிற்கு இறக்கு மதி செய்யும் அனைத்துப் பொருட் களுக்கும் 10% அடிப்படை வரியை விதிக்கும் என்றும், மலேசியா உட்பட பல நாடுகளுக்கு அதிக வரிகளை விதிக்கும் என்றும் அறிவிக்கப்பட் டது.

டொனால்ட் ட்ரம்பின் வர்த்தகப் போரில் எதிர்பாராத திருப்பமாக, பனிப்பாறை கள், பெங்குயின்கள் மட்டுமே வசிக்கும் அண்டார்டிகாவிற்கு அருகிலுள்ள தொலைதூர, மக்கள் வசிக்காத எரி மலைத் தீவுகள், அவுஸ்திரேலியாவின் பிரதான நிலப் பகுதிகளும் அடங்கி யுள்ளன.

அவுஸ்திரேலிய எல்லைக்கு வெளியே உள்ள ஹியர்டு தீவு மற்றும் மெக்டொ னால்டு தீவுகள், பூமியில் மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றன.

இந்தத் தீவுகளை அடைய பெர்த்தி லிருந்து இரண்டு வாரங்கள் படகுப் பயணம் மேற்கொள்ள வேண்டும்.

கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்தில் எந்த மனிதனும் அங்கு காலடி எடுத்து வைத்ததில்லை என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் இத் தீவுகளையும் உள்ளடக்கிய ட்ரம்பின் வரி விதிப்பு குறித்து பதிலளித்துள்ள அவுஸ்திரே லிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ், பூமியில் எங்கும் பாதுகாப்பு இல்லை என்று கூறினார்.

ட்ரம்ப் நிர்வாகத்தின் கட்டணங்கள் தர்க்க ரீதியான அடிப்படையைக் கொண்டிருக்கவில்லை.மேலும் அவை நமது இரு நாடுகளின் கூட்டாண மையின் அடிப்படைக்கு எதிரானவை. இது ஒரு நண்பரின் செயல் அல்ல, என்று அல்பானீஸ் கூறினார்.

அதே நேரத்தில், அவுஸ்திரேலியா அமெரிக்கா மீது பரஸ்பர வரிகளை விதிக்காது என்றும் கூறினார்.

அவுஸ்திரேலிய அண்டார்டிக் திட்டத் தின்படி வானிலை நிலையைப் பொறு த்து மேற்கு அவுஸ்திரேலியாவில் உள்ள ஃப்ரீமண்டில் இருந்து கப்பல் மூலம் ஹியர்ட் தீவை அடைய தோராயமாக 10 நாட்கள் ஆகும்.

இந்த தீவில் பெங்குயின்கள், நீர் நாய்கள் மற்றும் பல்வேறு பறவை இனங்களின் காலனிகள் உள்ளன.



அவற்றில் சில தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு அந்தஸ்தைப் பெற்றுள்ளன.

புதன்கிழமை வெள்ளை மாளிகையில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட உரையில், 78 வயதான ட்ரம்ப், 180 நாடுகளுக்கு 'தயவு' மற்றும் 'பரஸ்பர' வரிகளை அறிவித்தார்.

இது அமெரிக்காவை மீண்டும் செல் வந்தராக மாற்றும் என்றும், மீண்டும் எழுச்சி பெறும் வேலைகளைக் கொண்டுவரும் என்றும் கூறினார்.

தனது உரையின் போது, இந்தியா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், தாய்வான், தென் கொரியா, பங்களா தேஷ், இலங்கை மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் அமெரிக்கப் பொருட்களுக்கு விதித்துள்ள வரி களை விவரிக்கும் விளக்கப்பட்டத்தை ட்ரம்ப் காட்சிப்படுத்தினார்.

இந்த நாடுகள் இப்போது பதிலுக்கு பரஸ்பர வரிகளை எதிர்கொள்ள நேரி டும் என்று அவர் வலியுறுத்தினார்.